வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu வார மலர்




Email : eelanaduweekly@gmail.com மலர் : 07 02.08.2026 ஞாயிற்றுக்கிழமை இதழ் : 208 பக்கங்கள் : 16

# மீளப் பெறப்பட முடியாத சமஷ்டித் தீர்வு வேண்டும்!

## வடக்கு - கிழக்கு ஒருங்கிணைப்பு குழு வலியுறுத்து



யாழ்ப்பாணம், ஒக. 02

தமிழ் மக்கள் 13ஆவது திருத்தத்தின் மூலம் ஏமாற்றப்பட்டுள்ள நிலையில் வடக்கு-கிழக்கில் கௌரவமான உரிமைகளுடன் வாழக்கூடிய - மீளப்பெற முடியாத சமஷ்டித் தீர்வை அனைத்து தரப்பினரும் ஓரணியிலிருந்து வலியுறுத்தவேண்டுமென வடக்கு-கிழக்கு சிவில் ஒருங்கிணைப்புக் குழு கோரிக்கை விடுத்தது.

வடக்கு - கிழக்கு சிவில் ஒருங்கிணைப்புக் குழுவினால் 8 மாவட்டங்களிலும் சமஷ்டித் தீர்வை வலியுறுத்தி மேற்கொள்ளப்பட்ட 100 நாள் 15

# யாழ்ப்பாணத்திலும் மெட்ரோ பஸ் சேவை!

கொழும்பு, ஒக. 02

அரசாங்கத்தின் 'மெட்ரோ பஸ் சேவை' இந்த ஆண்டு இறுதிக்குள் யாழ்ப்பாணம் மற்றும் கண்டி ஆகிய மாவட்டங்களுக்கும் விரிவாக்கப்படும் என்றும், இதற்காகப் புதிய பஸ்கள் அடுத்த சில வாரங்களில் சேவையில் இணைக்கப்படும் என்றும் போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

சீனா உள்ளிட்ட பல நாடுகளிடம் இருந்து 121 மெட்ரோ பஸ்கள் பெறப்பட்டுள்ளதாகவும், அவை தற்போது பதிவு செய்தல் உள்ளிட்ட சட்டபூர்வ நடைமுறைகளுக்கு உட்படுத்தப்பட்டு வருவதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

தேவையான ஆவணப் பணிகள் அனைத்தும் நிறைவடைந்ததும், ஓகஸ்ட் மாத இறுதிக்குள் இந்தப் பேருந்துகள் பொதுமக்களின் பயன்பாட்டுக்காகச் சேவையில் ஈடுபடுத்தப்படும் என எதிர்பார்க்கப்படுவதாக அவர் கூறினார்.

மேலும், மெட்ரோ பஸ் சேவைக்காகப் பல புதிய பாதைகள் ஏற்கனவே அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும், அதுகுறித்த விவரங்கள் வரும் நாட்களில் முறைப்படி அறிவிக்கப்படும் என்றும் ரத்நாயக்க தெரிவித்தார். 15

# இந்திய வெளியுறவு அமைச்சர், தமிழக முதல்வரை தமிழ் பேசும் கட்சிகள் இணைந்து சந்திக்கத் திட்டம்!

## 13ஆவது திருத்தம் குறித்து வலியுறுத்துவதற்கு தீர்மானம்

சென்னை, ஒக. 02

இலங்கையிலுள்ள பிரதான தமிழ், முஸ்லிம் கட்சிகள், தமிழ் பேசும் கட்சிகளின் பேரவையாக இணைந்து செயற்படத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்றும், அதன் அடிப்படையில் இந்திய வெளியுறவுச் செயலாளரை விரைவில் சந்திக்க உடன்பாடு எட்டப்பட்டுள்ளதாகவும், தமிழக முதலமைச்சர் ஜோசப் விஜய் உள்ளிட்ட அரசியல் தலைவர்களையும் சந்திக்கத் திட்டமிடப்பட்டுள்ளது என்றும் முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

திருச்சிராப்பள்ளி சர்வதேச விமான நிலையத்துக்கு சென்ற அவர், ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறினார். 14

# மஹர சிறைக்குள் பெரும் பதற்றம்!

கொழும்பு, ஒக. 02

மஹர சிறைச்சாலை வளாகத்தில் நேற்று மாலை மீண்டும் பதற்ற நிலை ஏற்பட்டதாக அங்கிருந்து கிடைத்த தகவல்கள் தெரிவித்தன.

நேற்று மாலை ஏற்பட்ட அமைதியின்மை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்ட போதிலும் மீண்டும் பதற்ற நிலை ஏற்பட்டது.

சிறைச்சாலைக்குள்ளிருந்து துப்பாக்கிச் சூட்டுச் சத்தங்களை ஒத்த சில சத்தங்கள் கேட்டதையடுத்து, கைதிகளைப் பார்வையிட வந்திருந்த உறவினர்கள் மற்றும் அப்பகுதி மக்கள் பொலிஸ் தடைகளை உடைத்துக் கொண்டு செல்ல முற்பட்டுள்ளனர். 15

# சானிக்கும், ரவி செனவிரத்னவுக்கும் மரண தண்டனை கிடைக்க வாய்ப்பு!

## உதய கம்மன்பில சுட்டிக்காட்டு

கொழும்பு, ஒக. 02

கொழும்பு சிறப்பு மேல் நீதிமன்றத்தில் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் பணிப்பாளர் சானி அபேசேகர மற்றும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ரவி செனவிரத்னவுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்தால் இருவருக்கும் நிச்சயம் மரண தண்டனை கிடைக்கும் என பிவிதுறு ஹெல உறுமய கட்சியின் தலைவர் உதய கம்மன்பில தெரிவித்தார். 14

# பூஜித் ஜயசுந்தர மேன்முறையீடு!

கொழும்பு, ஒக. 02

மரண தண்டனை விதிக்கப்பட்ட முன்னாள் பொலிஸ்மா அதிபர் பூஜித் ஜயசுந்தரவுக்காக ஆஜரான சட்டத்தரணி ரோஷன் தெஹிவல, உயர்நீதி மன்றத்தில் மேன்முறையீடு 15

# புலிகளின் தலைவர் கொல்லப்பட்டாலும் ஆதரவாளர்கள் உயிர்ப்புடன் உள்ளனர்!

## கூறுகின்றார் சீலரத்ன தேரர்



யாழ்ப்பாணம், ஒக. 02

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் கொல்லப்பட்ட போதிலும், அந்த அமைப்பின் ஆதரவாளர்கள் மற்றும் அடியாட்கள் உலகெங்கிலும் உள்ள பல்வேறு நாடுகளில் இன்னமும் தொடர்ந்து இயங்கிக் கொண்டுதான் இருக்கிறார்கள் என ஜனசெத பெரமுன கட்சியின் தலைவர் பத்தரமுல்ல சீலரத்ன தேரர் தெரிவித்துள்ளார். 15

# மஹர சிறையில் மோதல் கைதி ஒருவர் உயிரிழப்பு!

கொழும்பு, ஒக. 02

மஹர சிறைச்சாலையில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவத்தில் காயமடைந்தவர்களில் ஒருவர் உயிரிழந்தார்.

காயமடைந்த 6 பேர் சிகிச்சைகளுக்காக ராகம வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அதேநேரம் மஹர சிறைச்சாலையில் ஏற்பட்ட பதற்ற நிலையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கைதிகளுக்கும் சிறைச்சாலை அதிகாரிகளுக்கும் 15

# பலாலி இராஜேஸ்வரி அம்மன் வீதி ஒரு மாதத்துக்குள் விடுவிக்கப்படும்!

## இளங்குமரன் எம்.பி. திட்டவட்டம்

யாழ்ப்பாணம், ஒக. 02

பலாலி இராஜ இராஜேஸ்வரி அம்மன் ஆலயத்துக்கு செல்லும் வீதியை ஒரு மாதத்துக்குள் நிரந்தரமாக விடுவிக்க நடவடிக்கை எடுத்து வருவதாக பாராளுமன்ற உறுப்பினர் க.இளங்குமரன் தெரிவித்துள்ளார்.

ஆலயத் திருவிழாவுக்காக தற்காலிகமாகத் திறக்கப்பட்ட குறித்த பாதை நேற்று முன்தினம் மீண்டும் மூடப்பட்டது.

இது குறித்து பாராளுமன்ற உறுப்பினர் 14

# பருத்தித்துறை அஞ்சல் கட்டடத்தை விரைவாக விடுவிப்பதற்கு ஏற்பாடு!

## வெகுஜன ஊடக பிரதியமைச்சர் உறுதி

யாழ்ப்பாணம், ஒக. 02

பருத்தித்துறை அஞ்சல் அலுவலகத்துக்குச் சொந்தமான காணிக் கட்டடத்தை இராணுவக் கட்டுப்பாட்டில் இருந்து விடுவிப்பதற்கு விரைவில் நடவடிக்கை எடுப்பதாக வெகுஜன ஊடக பிரதியமைச்சர் கலாநிதி கௌசல்யா ஆரியரத்ன உறுதியளித்துள்ளார்.

யாழ்ப்பாணத்துக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள பிரதியமைச்சர் கௌசல்யா ஆரியரத்ன யாழ்ப்பாண அஞ்சல் வளாகத்துக்கு 15



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# நீர்கொழும்பு கடலில் படகு விபத்து: ஒருவர் உயிரிழப்பு! இருவர் மாயம்!!

கொழும்பு, ஓக. 02

நீர்கொழும்பு கடற்பரப்பில் மீன்பிடிப் படகு ஒன்று கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் ஒருவர் உயிரிழந்துள்ள நிலையில், காணாமற் போயுள்ள மேலும் இருவரைத் தேடும் பணிகள் தீவிரப்படுத்தப்பட்டு ள்ளன.

இலங்கை கடற்படை மற்றும் விமானப்படை இணைந்து முன்னெடுத்து வரும் இந்த பாரிய தேடுதல் நடவடிக்கையில், விமானப்படை க்குச் சொந்தமான பெல் 412 ரக ஹெலிகொப்டர் ஒன்றும் ஈடுபடுத்த ப்பட்டுள்ளது.

கடலில் ஆபத்தான நிலையில் சிக்கியுள்ளதாகக் கூறப்படும் ஏனைய மீன்பிடிப் படகுகளையும் பாதுகாப்பாக மீட்பதற்கான முயற்சிகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

நாட்டின் தென்மேற்குத் திசையில் நிலவும் மழை மற்றும் பலத்த காற்றுடனான சீரற்ற வானிலை நிலைமை காரணமாக, யாழ்ப்பாணத்தின் காங்கேசந்துறையிலிருந்து மன்னார், கொழும்பு, காலி, மற்றும் அம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையான கடற்பகுதிகள் மிகவும் கொந்தளிப்பாகக் காணப்படலாம் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது. (அ)

# இலங்கைக்கு கடத்தவிருந்த 292 கிலோ கஞ்சா பறிமுதல்!

சென்னை, ஓக. 02

இராமநாதபுரம் மாவட்டம், உச்சிப்புளி அருகேயுள்ள புதுமடம் கடற்கரையிலிருந்து தமிழகம் புதுமடம் கடற்கரையிலிருந்து இலங்கைக்கு கடத்தவிருந்த 292 கிலோ கஞ்சாவை பொலிஸார் பறிமுதல் செய்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் மூவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இராமநாதபுரம் மாவட்டம், உச்சிப்புளி அருகேயுள்ள புதுமடம் கடற்கரையிலிருந்து இலங்கைக்கு போதைப் பொருள் கடத்தவிருப்பதாக பொலிஸாருக்கு ரகசியத் தகவல் கிடைத்தது. இதையடுத்து, புதுமடம் கடற்கரைப் பகுதியில் பொலிஸார் கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டனர்.

அப்போது, அந்தப் பகுதியில் வந்த சிறிய லொறி ஒன்றை நிறுத்தி சோதனையிட்டனர். அதில்146 மூட்டையில் 30 இலட்சம் இந்தியா ரூபா மதிப்பிலான 292 கிலோ கஞ்சா இருந்ததும், இவற்றை இலங்கைக்கு கடத்தவிருந்ததும் தெரியவந்தது.

இதையடுத்து, கஞ்சாவைப் பறிமுதல் செய்த பொலிஸார், அந்த லொறியில் பயணித்த இராமநாதபுரம் பெருங்குளத்தைச் சேர்ந்த செந்தில்வேலன், தூத்துக்குடி மாவட்டம், விளாத்திக்குளம் பகுதியைச் சேர்ந்த தங்கராஜ், சேகர் ஆகிய மூவரைக் கைது செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# காற்றின் வேகம் அதிகரிப்பால் மீனவர் கடலுக்கு செல்லத் தடை

கொழும்பு, ஓக. 02

நாட்டின் மேற்குத் திசையில் நிலவும் மழையுடன் கூடிய சீரற்ற வானிலை மற்றும் காற்றின் வேகம் அதிகரிப்பு காரணமாக, யாழ்ப்பாணத்திலிருந்து மன்னார், புத்தளம், சிலாபம், நீர்கொழும்பு, கொழும்பு, காலி மற்றும் அம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையான கடற்பகுதிகள் மிகவும் கொந்தளிப்பாகக் காணப்படலாம் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

இது தொடர்பில் அரசாங்க தகவல் திணைக்களத்தால் நேற்று காலை விசேட அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

இதன் காரணமாக, மேற்குறிப்பிட்ட கடற்பகுதிகளில் கரையோர மீன்பிடியில் ஈடுபடும் சிறிய மற்றும் ஒருநாள் மீன்பிடிப் படகுகள் மறுஅறிவித்தல் வரை மீன்பிடிக்காகக் கடலுக்குச் செல்வது மிகவும் ஆபத்தானது என்பதால், உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் அந் நடவடிக்கைகளிலிருந்து தவிர்ந்திருக்குமாறும், ஏற்கனவே கடலுக்குச் சென்ற படகுகள் ஏதேனும் இருப்பின் விரைவாகவும் பாதுகாப்பாகவும் கரைக்குத் திரும்புமாறும் கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் சுசந்த கஹவத்த அறிவித்துள்ளார். (அ)

# புளியங்குளம் விபத்தில் ஒருவர் பலி!

வவுனியா, ஓக. 02

வவுனியா, புளியங்குளம் சந்தியில் நேற்று முன் தினம் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் பலியாகியுள்ளார் என புளியங்குளம் பொலிஸார் தெரிவித்தனர்.

கொழும்பில் இருந்து முல்லைத்தீவு நோக்கி பயணித்த சொகுசு பஸ் ஒன்று, யாழ்ப்பாணத்தில் இருந்து வவுனியா நோக்கி பயணித்த மோட்டார் சைக்கிளுடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

சம்பவத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த நபர் படுகாயமடைந்த நிலையில், புளியங்குளம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் பலியாகியுள்ளார்.

இவ்விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளைப் புளியங்குளம் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றனர். (அ)

# பூஜித் ஜயசுந்தரவுக்கு விதிக்கப்பட்ட தண்டனையை ஏற்க முடியவில்லை!

## முன்னாள் அமைச்சர் அலி சப்ரி



கொழும்பு, ஓக. 02

குண்டுத்தாக்குதல்கள் தொடர்பில் புலனாய்வுத் தகவல்கள் கிடைத்திருந்தன. ஆனால் பொலிஸாரும் தேசிய பாதுகாப்பைக் கட்டுப்பாட்டில் வைத்திருந்தவர்களும் அதனைத் தடுக்க நடவடிக்கை எடுக்கவில்லை. இந்த உண்மையை ஏற்றுக் கொண்டுதான் ஆகவேண்டும். குற்றவியல் நோக்கம் இல்லாத நிலையில், தற்போது வழங்கப்பட்டுள்ள தீர்ப்பை என்னால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை என முன்னாள் அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

முன்னாள் பொலிஸ் மாஅதிபர் பூஜித் ஜயசுந்தரவுக்கு கொழும்பு மேல் நீதிமன்றம் மரண தண்டனை தீர்ப்பளித்துள்ளதை மேற்கோள் காட்டி தனது உத்தியோகபூர்வ முகப்புத்தகத்தில் மேற்கண்டவாறு பதிவேற்றம் செய்துள்ளார்.

அப்பதிவில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது: -

உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல்கள் தொடர்பாக முன்னரே புலனாய்வு எச்சரிக்கைகள் கிடைத்தபோதிலும், அதனைத் தடுக்கத் தவறியதன் மூலம் குற்றவியல் கடமைத் தவறியமை, கொலை முயற்சி மற்றும் கொலை ஆகிய குற்றச் சாட்டுகளில் முன்னாள் பொலிஸ் மாஅதிபர் பூஜித் ஜயசுந்தர குற்றவாளி எனத் தீர்ப்பளித்த சிறப்பு மூவர் அடங்கிய நிலையான மேல் நீதிமன்றம் அவருக்கு மரண தண்டனை விதித்துத் தீர்ப்பளித்துள்ளது.

இது உண்மை, குண்டுத்தாக்குதல்கள் தொடர்பில் புலனாய்வுத் தகவல்கள் கிடைத்திருந்தன. ஆனால் பொலிஸாரும் தேசிய பாதுகாப்பைக் கட்டுப்பாட்டில் வைத்திருந்தவர்களும் அதனைத் தடுக்க நடவடிக்கை எடுக்கவில்லை. இந்த உண்மையை ஏற்றுக்கொண்டுதான் ஆகவேண்டும்.

இருப்பினும், குற்றவியல் நோக்கம் இல்லாத நிலையில், இந்தத் தண்டனைத் தீர்ப்பை என்னால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை - என்று பதிவேற்றம் செய்துள்ளார். (அ)

# முன்னாள் புலி உறுப்பினருக்கு பிணை

கொழும்பு, ஓக. 02

முன்னாள் இராணுவத் தளபதி பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா மற்றும் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஆகியோரைக் குறிவைத்து தாக்குதல் நடத்த உளவுத் தகவல்களை வழங்கியதாக சந்தேகிக்கப்படும் முன்னாள் விடுதலைப் புலி உறுப்பினர் ஒருவருக்கு கொழும்பு மேல் நீதிமன்றம் பிணை வழங்கியுள்ளது.

செல்லையா பியூபாகரன் என்ற குறித்த சந்தேகநபர், கடந்த 17 ஆண்டுகளாக இறுதித் தீர்ப்பின்றி விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த நிலையில், அவருக்கே இந்தப் பிணை அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

எனினும், நீதிமன்றம் விதித்துள்ள கடுமையான பிணை நிபந்தனைகளை நிறைவேற்றுவதற்குத் தேவையான பிணையாளர்களையோ அல்லது நிதி வசதிகளையோ ஏற்பாடு செய்ய முடியாததால் பிணை வழங்கப்பட்டபோதிலும் அவர் மீண்டும் சிறைச்சாலைக்கு அனுப்பப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம், நீண்ட காலமாக விசாரணை அல்லது இறுதித் தீர்ப்பின்றி தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளின் நிலை, மனித உரிமைகள் மற்றும் நீதித்துறை தாமதங்கள் தொடர்பான விவாதங்களை மீண்டும் தீவிரப்படுத்தியுள்ளது. (அ)

# சமுர்த்தி பயனாளிக்கு புதிய வீடு கையளிப்பு

யாழ்ப்பாணம், ஓக. 02

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச செயலர் பிரிவில், சமுர்த்தி வீட்டுத்திட்டத்தின் கீழ் பயனாளி ஒருவருக்கு புதிய வீடு உத்தியோகபூர்வமாகக் கையளிக்கப்பட்டுள்ளது.

“அழகான வாழ்க்கைக்கு வீடு அத்தியாவசியம்” என்ற நோக்கத்துடன் முன்னெடுக்கப்பட்ட இத்திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட வீடு நேற்று முன் தினம் நடைபெற்ற நிகழ்வில் பயனாளியிடம் ஒப்படைக்கப்பட்டது.

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச செயலரின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினரும் வடமராட்சி அபிவிருத்திக் குழுத் தலைவருமான ரஜீவன் ஜெயச்சந்திரமூர்த்தி பிரதம விருந்தினராக கலந்துகொண்டு, நாடா வெட்டி வீட்டை பயனாளியிடம் கையளித்தார்.

நிகழ்வில் தேசிய மக்கள் சக்தியின் வடமராட்சி அமைப்பாளரும் வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை உறுப்பினருமான கணேசரூபன், பிரதேச சபை உறுப்பினர் அஜந்தன், பிரதேச செயலக அதிகாரிகள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள், வீட்டுத்திட்ட பயனாளிகள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டு நிகழ்வை சிறப்பித்தனர். (அ)

# இலங்கையின் ஏற்றுமதி வருமானம் 10 பில்லியன் டொலரை தாண்டியது!

கொழும்பு, ஓக. 02

மத்திய வங்கியின் அண்மைக் கால வெளிநாட்டுத்துறை செயலாற்றல் அறிக்கையின்படி, 2026ஆம் ஆண்டின் முதல் ஆறு மாதங்களில் இலங்கையின் ஏற்றுமதி வருவாய் 10 பில்லியன் அமெரிக்க டொலர்களைக் கடந்துள்ளது.

சேவை ஏற்றுமதியில் சரிவு ஏற்பட்டபோதிலும், பொருட்கள் ஏற்றுமதி 6.3 வீதமாக உயர்ந்து 6.9 பில்லியன் அமெரிக்க டொலராக அதிகரித்ததன் காரணமாக, 2026 இன் முதல் அரையாண்டில் ஒட்டு மொத்த ஏற்றுமதி வருவாய் ஆண்டுக்கு ஆண்டு 3.3 வீதமாக அதிகரி த்து 10.4 பில்லியன் அமெரிக்க டொலர்களை எட்டியுள்ளது.


ஏற்றுமதி வருவாயில் இந்த மைல்கல்லை எட்டியபோதிலும், ஏற்றுமதி வருவாயை விட இறக்குமதிச் செலவினங்கள் வேகமான விகிதத்தில் அதிகரித்ததால், 2025இன் இதே காலப்பகுதியில் இருந்த 3.3 பில்லியன் அமெரிக்க டொலர்களுடன் ஒப்பிடுகையில், 2026 இன் முதல் பாதியில் நாட்டின் வர்த்தகப் பற்றாக்குறை 5.5 பில்லியன் அமெரிக்க டொலர்களாக விரிவடைந்துள்ளது.

கடந்த ஆண்டின் இதே காலப்பகுதியில் உபரியாக இருந்த வெளிநாட்டு நடப்புக்கணக்கு, 2026 இன் முதல் பாதியில் 245 மில்லியன் அமெரிக்க டொலர் பற்றாக்குறையைப் பதிவு செய்துள்ளதாக மத்திய வங்கி சுட்டிக்காட்டியுள்ளது. ஜூன் மாதத்தில் மட்டும் 149 மில்லியன் அமெரிக்க டொலர் நடப்புக் கணக்கு பற்றாக்குறை பதிவாகியுள்ளது, இது தொடர்ச்சியான மூன்றாவது மாத பற்றாக்குறையாகும்.

எரிபொருள் இறக்குமதி செலவினம் தொடர்ந்து வெளிநாட்டுத் துறைக்கு அழுத்தத்தை ஏற்படுத்தியது. ஆண்டின் முதல் ஆறு மாதங்களில் எரிபொருள் இறக்குமதிக்கான மொத்தச் செலவு ஆண்டுக்கு ஆண்டு 58.8 வீதமாக உயர்ந்து கிட்டத்தட்ட 3,168 மில்லியன் அமெரிக்க டொலர்களாக அதிகரித்தது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# பொதுநலவாய விளையாட்டு; இலங்கைக்கு தங்கப் பதக்கம்




கொழும்பு, ஒக. 02
2026 பொதுநலவாய விளையாட்டுப் போட்டியின் ஆண்களுக்கான ஈட்டி எறிதல் பிரிவில் இலங்கையின் 23 வயதான ருமேஷ் தரங்க பத்திரகே தங்கப் பதக்கம் வென்று சாதனை படைத்துள்ளார்.

இலங்கை நேரப்படி நேற்றுக் காலை இப்போட்டி நிறைவடைந்தது.

கிளாஸ்கோவில் உள்ள ஸ்காட்ஸ்டவுன் விளையாட்டரங்கில் நடைபெற்ற இப்போட்டியில், ருமேஷ் தனது இரண்டாவது முயற்சியில் 89.75 மீற்றர் தூரம் ஈட்டி எறிந்து இந்தச் சிறப்பான வெற்றியைப் பெற்றுக்கொண்டார்.

இது பொதுநலவாய விளையாட்டுத் தொடரில் இலங்கை வெல்லும் 6ஆவது தங்கப் பதக்கமாகும்.

2006ஆம் ஆண்டு பளுதூக்கும் வீரர் சிந்தன விதானகே தங்கப் பதக்கம் வென்றதற்குப் பிறகு, 20 ஆண்டுகள் கழித்து இலங்கை வெல்லும் முதலாவது தங்கப் பதக்கமும் இதுவாகும். (அ)

# நீதித்துறை விவகாரத்தால் அரசுக்குள் குழப்பமில்லை!

## கூறுகிறார் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ



கொழும்பு, ஒக. 02
நீதிபதிகளின் ஓய்வு பெறும் வயதெல்லையை இரண்டு ஆண்டுகளுக்கு நீடிப்பது தொடர்பில் ஆளுங்கட்சிக்குள் எவ்விதப் பிரச்னையும் இல்லை என்றும், அரசாங்கத்தின் இந்த நிலைப்பாட்டுடனேயே மக்களும் இருக்கின்றனர் என்றும் அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்-

நீதிமன்றங்களில் தேங்கிக் கிடக்கும் வழக்குகளை விரைவாக விசாரித்து முடித்து, மக்களை வழக்குச் சுமைகளில் இருந்து விடுவிப்பதே எமது பிரதான நோக்கமாகும். அண்மையில் நடைபெற்ற இரு தேர்தல்களின் போதும் இதற்காகவே மக்கள் எமக்கு ஆணை வழங்கியுள்ளனர்.

இதன் ஒரு அங்கமாகவே நீதிபதிகளின் ஓய்வு பெறும் வயதெல்லையை இரண்டு ஆண்டுகளுக்கு நீடிப்பதற்கு உத்தேசித்துள்ளோம். இதன் மூலம் மக்களுக்குச் சாதகமான நன்மைகளே கிடைக்கப்பெறும்.

நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தில் புதிய அரசமைப்பை இயற்றும் முயற்சிகள் இடம்பெற்றபோதும், உயர்நீதிமன்ற நீதியரசர்களின் ஓய்வுபெறும் வயதெல்லையை நீடிப்பது தொடர்பான யோசனைகள் முன்வைக்கப்பட்டிருந்தன.

எவ்வாறான விடயங்களுக்குச் சர்வஜன வாக்கெடுப்புக்குச் செல்ல வேண்டும் என்பது குறித்து அரசமைப்பில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. அரசமைப்புக்கு அமைவாகவே உயர்நீதிமன்றமும் இது குறித்த தீர்மானங்களை எடுக்கும்.

இவ்விடயம் தொடர்பில் அரசாங்கம் ஒருமித்த நிலைப்பாட்டிலேயே உள்ளது. மக்களும் அதே நிலைப்பாட்டில்தான் இருக்கின்றனர். ஒரு சிலர் மட்டுமே மாறுபட்ட மன நிலையில் கருத்துக்களைத் தெரிவித்து வருகின்றனர்-என்றார். (அ)

## அஸ்வெசும ஊழல் மோசடி;

# நோர்வூட் பிரதேச செயலகத்தில் பணியாற்றிய 2 பெண்கள் கைது!

கொழும்பு, ஒக. 02
அஸ்வெசும ஊழல், மோசடி தொடர்பாக நோர்வூட் பிரதேச செயலகத்தில் பணியாற்றி வந்த இரண்டு உத்தியோகத்தர்கள் நேற்று முன் தினம் மாலை ஹற்றன் விசேட குற்ற விசாரணை பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அஸ்வெசும ஊழல் தொடர்பாக நோர்வூட் பிரதேச செயலகத்தில் பணிபுரிந்து வரும் அரச ஊழியர்களுக்கு எதிராக தொடர்ந்து முறைப்பாடுகள் கிடைத்து வருவதாகவும், அதனடிப்படையில் உள்ளக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் நுவரெலியா மாவட்ட செயலகத்தின் உயர் அதிகாரி ஒருவர் அண்மையில் தெரிவித்தார்.

நோர்வூட் பிரதேச செயலகத்தில் முக்கிய பொறுப்புகளில் பணியாற்றிய இரு அரச ஊழியர்கள் உடனடியாக அமலுக்கு வரும் வகையில் இடமாற்றம் இடம் மாற்றம் வழங்கப்பட்ட நிலையில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுவந்த நிலையில் குறித்த உத்தியோகத்தர்களுக்கு எதிராக நோர்வூட் பிரதேச செயலாளரினால் நேற்று முன் தினம் காலை ஹற்றன் விசேட குற்ற விசாரணைப் பிரிவுவில் முறைப்பாடு ஒன்று பதிவு செய்யப்பட்டது.

கைது செய்யப்பட்ட இரண்டு உத்தியோகத்தர்களும் 2025ஆம் ஆண்டு முதல் இது வரை காலப்பகுதியில் 29 இலட்சத்து 89ஆயிரத்து 500ரூபாய் மோசடி செய்துள்ளதாக ஆரம்பகட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது

பொருளாதார ரீதியாக பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு வழங்கப்படும் அஸ்வெசும கொடுப்பனவுகளில் ஊழல், மோசடிகள் இடம்பெற்றதாகக் கிடைத்த பல முறைப்பாடுகளின் அடிப்படையிலேயே இந்த கைது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (அ)

# வர்த்தகக் கப்பல் ஒன்றில் இருந்து கடலில் விழுந்த 17 கொள்கலன்கள்


கொழும்பு, ஒக. 02
கொழும்புத் துறைமுகத்திலிருந்து மேற்கே சுமார் 17 கடல் மைல் தொலைவில் உள்ள கடற் பகுதியில், பயணித்துக் கொண்டிருந்த வர்த்தகக் கப்பல் ஒன்றிலிருந்து 17 காலியான கொள்கலன்கள் கடலில் விழுந்து மித்தந்தவாறு இருப்பதாகவும், இது குறித்து மீனவர்கள் விழிப்புடன் இருக்குமாறும் மீன்பிடி மற்றும் நீர்வாழ் வளங்கள் திணைக்களம் அவசர எச்சரிக்கை விடுத்துள்ளது.

தற்போதைய கடல் நீரோட்டத்தின் தன்மையின்படி, இந்தக் காலியான கொள்கலன்கள் பேருவளையிலிருந்து நீர்கொழும்பு ஊடாக புத்தளம் வரையிலான கரையோரக் கடற்பகுதியை நோக்கி மிதந்து வருவதற்கான வாய்ப்புகள் அதிகம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, குறித்த கடற்பகுதியில் மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள மற்றும் பயணிக்கும் அனைத்துப் பல நாள் மற்றும் சிறிய மீன்பிடிப் படகுகளும் இது குறித்து மிகுந்த அவதானத்துடனும் விழிப்புடனும் செயற்படுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

ஒருவேளை மிதந்து வரும் இக்கொள்கலன்கள் தென்பட்டால், உடனடியாக அது குறித்து மீன்பிடி மற்றும் நீர்வாழ் வளங்கள் திணைக்களத்தின் வானொலி செய்தி மையத்திற்கோ அல்லது அருகிலுள்ள மீன்பிடித் துறைமுக அதிகாரிகளுக்கோ தகவல் தெரிவிக்குமாறு கோரப்பட்டுள்ளது. (அ)

# தாய்லாந்திலிருந்து வந்த பரிசுப் பொதியில் ரூ.10 கோடி மதிப்பிலான போதைப்பொருள்!



கொழும்பு, ஒக.02
தாய்லாந்திலிருந்து வந்த பரிசுப் பொதியில் 10 கோடி ரூபாய்க்கும் அதிகமான மதிப்புள்ள போதைப்பொருள் மீட்கப்பட்டுள்ளது.

தாய்லாந்திலிருந்து இலங்கைக்கு அனுப்பப்பட்ட ஒரு விமான சரக்குப் பொதியில், 10 கோடி ரூபாய்க்கும் அதிகமான மதிப்புள்ள போதைப்பொருள் சரக்கை கட்டுநாயக்க விமான நிலைய சுங்க அதிகாரிகள் கண்டெடுத்துள்ளனர்.

ஜூலை 24 ஆம் திகதி பாங்கொக்கிலிருந்து இலங்கைக்கு வந்த ஒரு விமானத்தில் பரிசாக அனுப்பப்பட்ட பொதியில் இந்த போதைப்பொருள் கண்டெடுக்கப்பட்டது.

பரிசுப் பொருட்கள் அடங்கிய இந்த சரக்கு, பரிசோதனை மற்றும் விடுவிப்புக்காக சேமித்து வைக்கப்பட்டிருந்த நிலையில், நேற்று முன் தினம் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

உலோகக் கொள்கலன்களில் மறைத்து வைக்கப்பட்டிருந்த பொலித்தீன் பொதிகளில் கஞ்சா மற்றும் ஹஷிஷ் உள்ளிட்ட 10.608 கிலோகிராம் போதைப்பொருட்களை சுங்க அதிகாரிகள் கண்டெடுத்தனர்.

இந்த சரக்கின் மதிப்பு சுமார் 10 கோடி ரூபாய்க்கும் அதிகமாக இருக்கும் என்று கூறப்படுகிறது. (அ)

# ரஷ்ய சுற்றுலாப் பயணிகளின் பணத்தைத் திருடிய நபர் கைது!

கொழும்பு, ஒக. 02
இலங்கைக்கு வருகை தந்த மூன்று ரஷ்ய நாட்டு சுற்றுலாப் பயணிகளின் வெளிநாட்டுப் பணப்பையைத் திருடிய நபரை அறுகம்பை பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் ஒரு மணி நேரத்திற்குள் கைது செய்துள்ளனர்.

நேற்று முன்தினம் ரஷ்யாவிலிருந்து வருகை தந்த தந்தை மற்றும் அவரது இரு மகள்கள் அறுகம்பை, குடகல்ல கடற்கரைக்கு அருகிலுள்ள விடுதியொன்றில் தங்கியுள்ளனர்.

அவர்கள் தம்முடைய பயணப்பைகளை அறையில் வைத்துவிட்டு கடலில் குளிக்கச் சென்ற வேளையில், அங்கிருந்த நபர் ஒருவர் 3,200 அமெரிக்க டொலர்கள் மற்றும் 1,620 யூரோக்கள் அடங்கிய பணப்பையைத் திருடிச் சென்றுள்ளார்.

சந்தேக நபர் பணப்பையைத் திருடித் தப்பிச் செல்வதைக் கண்ட கடற்கரையிலிருந்த ஒருவர், உடனடியாக அறுகம்பை பொலிஸ் விசேட அதிரடிப் படை முகாமுக்குத் தகவல் வழங்கியுள்ளார்.

அதற்கமையச் செயற்பட்ட அறுகம்பை விசேட அதிரடிப்படை முகாம் பொறுப்பதிகாரி தலைமையிலான குழுவினர் விரைந்து செயற்பட்டு சம்பவம் இடம்பெற்ற ஒரு மணி நேரத்துக்குள் திருடப்பட்ட பணத்துடன் சந்தேகநபரை பிடித்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காகப் பொத்துவில் பொலிஸில் ஒப்படைக்கப்பட்டார். (அ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# பலாலி விமான நிலைய அபிவிருத்தி குறித்து நேரில் ஆராய்ந்தார் அமைச்சர் சந்திரசேகரன்!

## துறைசார் அதிகாரிகளுடன் கலந்துரையாடல்



யாழ்ப்பாணம், ஒக. 02

யாழ்ப்பாணம் பலாலி விமான நிலையத்தில் முன்னெடுக்கப்பட்டு வரும் பாரிய அபிவிருத்திப் பணிகளை கடற்றொழில், நீரியல் மற்றும் கடல்வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகரன் நேரில் பார்வையிட்டு, பணிகளின் முன்னேற்றம் தொடர்பாக துறைசார் அதிகாரிகளுடன் விரிவான கலந்துரையாடலை மேற்கொண்டார்.

வடக்கு மாகாணத்தின் விமானப் போக்குவரத்து மற்றும் பொருளாதார வளர்ச்சியில் முக்கிய பங்காற்றும் பலாலி விமான நிலையத்தை சர்வதேச தரத்துக்கு ஏற்ப மேம்படுத்தும் நோக்கில் முன்னெடுக்கப்பட்டு வரும் கட்டுமானப் பணிகளின் தற்போதைய நிலை குறித்து அமைச்சர் நேரடியாக ஆய்வு மேற்கொண்டார்.

இதன்போது, பயணிகள் புறப்பாடு மற்றும் வருகைப் பகுதிகளை மேம்படுத்தும் திட்டங்கள், புதிய கட்டட வசதிகள், பாதுகாப்பு மற்றும் சேவை வசதிகளை வலுப்படுத்தும் நடவடிக்கைகள் உள்ளிட்ட பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பில் அதிகாரிகளிடமிருந்து விரிவான விளக்கங்களைப் பெற்றுக்கொண்டார்.

அதேவேளை, திட்டமிட்ட காலக்கெடுவுக்குள் பணிகளை நிறைவு செய்வதன் அவசியத்தையும், எதிர்காலத்தில் அதிகளவிலான உள்நாட்டு மற்றும் சர்வதேச விமான சேவைகளை கையாளக்கூடிய வகையில் அனைத்து வசதிகளும் உயர்தரத்தில் அமைக்கப்பட வேண்டியதன் முக்கியத்துவத்தையும் அமைச்சர் வலியுறுத்தியதாக தெரிவிக்கப்படுகிறது.

பலாலி விமான நிலையத்தை விரிவுபடுத்தி, வடக்கு மக்களுக்கும் வெளிநாடுகளில் வாழும் இலங்கையர்களுக்கும் சிறந்த விமானப் போக்குவரத்து சேவையை வழங்க வேண்டும் என்ற கோரிக்கை நீண்ட காலமாக முன்வைக்கப்பட்டு வந்தது. அந்தக் கோரிக்கைகளை கருத்திற்கொண்டு, புதிய அரசாங்கத்தின் முன்னுரிமை அபிவிருத்தித் திட்டங்களின் ஒரு பகுதியாக விமான நிலையத்தின் விரிவாக்கப் பணிகள் தற்போது துரிதப்படுத்தப்பட்டு வருகின்றன. (அ)


# வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபை அலுவலகத்துக்கு வடக்கு ஆளுநர் திடீர் விஜயம்

கிளிநொச்சி, ஒக. 02

கிளிநொச்சியில் அமைந்துள்ள வடக்கு மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபைக்கு, வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை திடீர் கண்காணிப்பு பயணமொன்றை மேற்கொண்டார்.

இந்தப் பயணத்தின்போது அதிகார சபைக்குச் சென்ற கௌரவ ஆளுநர், அங்கு பணியாற்றும் உத்தியோகத்தர்கள் ஒவ்வொருவரையும் தனித்தனியாகச் சந்தித்துக் கலந்துரையாடியதோடு, அவர்கள் தமது கடமையின்போது எதிர்கொள்ளும் நடைமுறைப் பிரச்னைகள் மற்றும் தேவைகள் குறித்தும் கேட்டறிந்து கொண்டார்.

இந்தக் கண்காணிப்பு பயணத்தின்போது, வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் தலைவர் பொறியியலாளர் சூ.விமலேஸ்வரன், சபையின் பொது முகாமையாளர் மற்றும் உதவிப் பொது முகாமையாளர் ஆகியோரும் ஆளுநருடன் உடனிருந்தனர். (அ)



# முல்லைத்தீவு மாவட்டத்தில் விசேட டெங்கு ஒழிப்பு திட்டம்



முல்லைத்தீவு, ஒக. 01

தேசிய நேர்மை வாரத்தை முன்னிட்டு, தூய்மையும் பசுமையும் நிறைந்த முல்லைத்தீவு விசேட டெங்கு ஒழிப்பு மற்றும் சுற்றாடல் தூய்மைப்படுத்தல் வேலைத்திட்டம் நேற்று முன்தினம் முல்லைத்தீவு மாவட்ட செயலாளர் உமாமகேஸ்வரன் தலைமையில் முன்னெடுக்கப்பட்டது.

'பொது இடங்களைத் தூய்மையாகப் பேணுவதற்கான சமூக அடிப்படையிலான விழிப்புணர்வு மற்றும் செயற்பாட்டுக் குழு' என்ற எண்ணக்கருவின் கீழ், முல்லைத்தீவு நகரின் பொது இடங்கள் மற்றும் மாவட்ட செயலக அலுவலகச் சுற்றுப் புறங்களில் தூய்மைப்படுத்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

இதன்போது, நீர் தேங்கக்கூடிய இடங்கள் மற்றும் நுளம்புகள் பெருகக்கூடிய பகுதிகள் கண்டறியப்பட்டு துப்பரவு செய்யப்பட்டதுடன் வடிகால்கள், வீதியோரங்கள், மரங்கள் நாட்டப்பட்டுள்ள பொது இடங்கள் மற்றும் அலுவலகச் சுற்றுப் புறங்கள் சுத்தம் செய்யப்பட்டன.

மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள் மற்றும் சம்பந்தப்பட்ட தரப்பினர்கள் இவ்வேலைத்திட்டத்தில் பங்கேற்றனர்.

பொது இடங்களைத் தூய்மையாகவும் பசுமையாகவும் பேணுதல், டெங்கு பரவலைத் தடுத்தல் மற்றும் சமூகப் பொறுப்புணர்வை வலுப்படுத்துதல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டு இந்நிகழ்வு முன்னெடுக்கப்பட்டது. (அ)

# தனியார் சந்தைக்கு போட்டியாக கூட்டுறவு சங்கங்கள் நவீனமயம்!

## அமைச்சர் வசந்த சமரசிங்க தெரிவிப்பு



கொழும்பு, ஒக. 02

இலங்கையில் கடந்த காலங்களில் வீழ்ச்சியடைந்து வந்த கூட்டுறவுச் சங்கங்களை மறுசீரமைத்து அதனை நவீன தனியார் சந்தைக்கு ஈடுகொடுக்கும் வகையில் வலுப்படுத்துவதற்கு அரசாங்கம் விரிவான பல வேலைத் திட்டங்களை முன்னெடுத்துள்ளது என்று வர்த்தகம், வாணிபம், உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர் வசந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் அரச தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கூட்டுறவுத் துறையின் வீழ்ச்சிக்கு முறையான அரச தொலைநோக்குப் பார்வையின்மையும், முறையற்ற சட்டங்களும் பிரதான காரணங்கள் என்பதால் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்கள் மற்றும் அதிகாரிகளின் உரிமைகளைப் பாதுகாக்கும் வகையில் கூட்டுறவுச் சங்க சட்டங்களில் அவசியமான சட்டத் திட்டங்கள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

விவசாயிகள் மற்றும் நுகர்வோரை பாதுகாக்கும் நோக்கில் அரசின் நெல் கொள்வனவுச் செயற்றிட்டத்துப் பங்களிப்பு செய்வதற்காக நடப்பு ஆண்டில் 500 மில்லியன் ரூபா செலவில் 40 நவீன நெல் உலர்த்தும் இயந்திரங்கள் கொள்வனவு செய்யப்படவுள்ளன.

ஒரு இயந்திரத்தின் மூலம் நாளொன்றுக்கு 20 மெற்றிக் தொன் நெல்லை உலர்த்த முடியும் என்பதுடன், 40 இயந்திரங்கள் மூலம் நாளாந்தம் 800 மெற்றிக் தொன் நெல்லை உலர்த்த முடியும். களஞ்சியசாலை மற்றும் அரிசி ஆலை வசதிகளைக் கொண்ட கூட்டுறவுச் சங்களுக்கு எதிர்வரும் நவம்பர் 15 ஆம் திகதிக்குள் குறித்த இயந்திரங்களை வழங்கி முடிக்கப்படவுள்ளன.

அத்துடன், நாட்டில் இயங்கி வரும் 302 பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களின் கீழ் உள்ள சுமார் 2000 கூட்டுறவு நகர விற்பனை நிலையங்களை நவீன சந்தைப் போட்டிக்கு ஏற்ப அபிவிருத்தி செய்யவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதன்கீழ், மாவட்டத்துக்கு ஒன்று என்ற ரீதியில் 25 மையங்கள் வாகன தரிப்பிடம், காய்கறி, பழங்கள் மற்றும் மருந்தகங்கள் உள்ளிட்ட அனைத்துப் பொருட்களும் ஒரே இடத்தில் பெறக்கூடிய வகையில் சுப்பர் மார்க்கெட்டுகளாக மாற்றப்படவுள்ளன.

இதற்காக கூட்டுறவு அபிவிருத்தி நிதியிலிருந்து 100 மில்லியன் ரூபா வரை குறைந்த வட்டி கடனுதவி வழங்கப்படுவதோடு, 10 மில்லியன் ரூபா நிதியுதவியுடன் 300 சிறிய கூட்டுறவு நகர விற்பனை நிலையங்களும் புதுப்பிக்கப்படவுள்ளன-என்றார். (அ)

# பிரதமர் ஹரிணியை சந்தித்தார் ஓய்வு பெற்ற இராணுவத் தளபதி

கொழும்பு, ஒக. 02

இலங்கை இராணுவத்தின் 25ஆவது இராணுவத் தளபதியாக தனது பதவிக்காலத்தை நிறைவு செய்த லெப்டினன்ட் ஜெனரல் லசந்த ரொட்ரிகோ, நேற்று அலரி மாளிகையில் பிரதமர் ஹரிணி அமரசூரியவை சந்தித்தார்.

இந்தச் சந்திப்பின்போது, லெப்டினன்ட் ஜெனரல் லசந்த ரொட்ரிக்கோ ஆற்றிய சிறப்புமிக்க இராணுவச் சேவை, முன்மாதிரியான தலைமைத்துவம் மற்றும் தாய்நாட்டுக்காக அவர் வெளிப்படுத்திய அர்ப்பணிப்பு ஆகியவற்றை பாராட்டினார்.

தனது பதவிக்காலம் முழுவதும் இலங்கை இராணுவத்தின் செயற்பாட்டுத் திறனையும் தொழில்முறை தரநிலைகளையும் உயர்ந்த நிலைக்கு கொண்டு வருவதற்காக தாம் வழங்கிய செயற்பாட்டுமிக்க பங்களிப்பை முன்னாள் இராணுவத் தளபதி இதன்போது நினைவு கூர்ந்தார்.

சேவையிலிருந்து ஓய்வு பெற்ற லெப்டினன்ட் ஜெனரல் லசந்த ரொட்ரிக்கோவின் எதிர்காலப் பணிகளுக்காக பிரதமர் தனது வாழ்த்துகளைத் தெரிவித்தார். (அ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈழநாடு
Eelanadu
02.08.2026 ஞாயிற்றுக்கிழமை
பராபவ வருடம், ஆடி 17

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
– யோகர் சுவாமிகள்.

**E-mail: eelanaduweekly@gmail.com**

## தேசிய மக்கள் சக்திக்குள் தீர்மானங்களை எடுப்பது யார்?

தேசிய மக்கள் சக்தியின் மூத்த தலைவர்களில் ஒருவரான லால் விஜேநாயக்க உயர் நீதிமன்றத்தினதும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தினதும் நீதிபதிகளின் ஓய்வு வயதெல்லையை அதிகரிக்கும் அரசாங்கத்தின் திட்டத்துக்கு எதிர்ப்பை வெளிக்காட்டியதை தொடர்ந்து தோன்றியிருக்கும் சர்ச்சை தேசிய மக்கள் சக்தி கூட்டணிக்குள் தீர்மானங்கள் மேற்கொள்ளப்படும் செயன்முறைகள் தொடர்பில் கேள்விகளை கிளப்பியிருக்கிறது.

மூத்த சட்டத்தரணியான விஜேநாயக்க தேசிய மக்கள் சக்தியின் தலைமைத்துவ சபையிலும் செயற்குழுவிலும் உறுப்பினராக இருக்கிறார். சுமார் அரை நூற்றாண்டு காலமாக லங்கா சமசமாஜ கட்சியுடன் பிணைப்பைக் கொண்டிருந்த அவர் மேல்நிலை நீதிமன்றங்களின் நீதிபதிகளின் ஓய்வு வயதெல்லையை அதிகரிப்பதற்கு அரசியலமைப்புக்கு திருத்தம் ஒன்றைக் கொண்டு வருவதற்கான தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் யோசனையை கடுமையாக எதிர்க்கிறார்.

மேல்நிலை நீதிமன்றங்களின் நீதிபதிகளின் சேவைக் காலத்தை தன்னிச்சையாக மாற்றுவது நீதித்துறையின் சுதந்திரத்தைப் பாதித்து சட்டத்தின் ஆட்சியைச் சீர்குலைக்கும் என்று அவர் வாதிடுகிறார். இத்தகைய முன்னுதாரணங்கள் வருங்கால அரசாங்கங்கள் நீதித்துறை கட்டமைப்பை அவற்றின் விருப்பத்துக்கு ஏற்ற முறையில் கையாளுவதற்கு வழிவகுக்கும் என்றும் அவர் சுட்டிக் காட்டுகிறார்.

பாரம்பரிய இடதுசாரிப் பின்னணியில் வந்த விஜேநாயக்க பரந்தளவிலான கலந்தாலோசனைகளுக்கு பின்னர் தீர்மானங்களை எடுக்கும் செயன்முறைகளுக்கு தான் பழக்கப்பட்டிருப்பதாகவும் தேசிய மக்கள் சக்திக்குள் தீர்மானங்கள் கதவுகளுக்கு பின்னால் எடுக்கப்படுவதால் அவை எங்கே, எவ்வாறு உருவாகின்றன என்பது தெளிவில்லை என்றும் கூறியிருக்கிறார்.

அவரது வெளிப்படையான கருத்துக்கள் அரசாங்கத்திற்குள் ஜனதா விமுக்தி பெரமுன (ஜே.வி.பி.) வின் தலைவர்களுக்கு பெரும் அசௌகரியத்தை கொடுத்திருக்கிறது என்பது தெளிவானது. நீதிபதிகளின் ஓய்வு பெறும் வயது தொடர்பான விவகாரத்தில் "மௌனமாக இருக்குமாறு" விவசாய அமைச்சர் லால் காந்த தன்னிடம் கேட்டுக் கொண்டதாக விஜேநாயக்க பகிரங்கமாக கூறியதுடன் தனது உத்தியோகபூர்வ எதிர்ப்பை ஜனாதிபதி அநுர குமார திசநாயக்கவுக்கும் தேசிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் நிஹால் ஜெயசிங்கவுக்கும் எழுத்துமூலமாகச் சமர்ப்பித்தார்.

இதற்கு பதிலளித்த ஜெயசிங்க யாரும் விஜேநாயக்கவின் வாயை அடைக்கவில்லை என்றும் கருத்து வேறுபாடுகள் இருப்பது கூட்டணிக்குள் இருக்கும் சாதாரண ஜனநாயக விவாதத்தின் ஒரு பகுதியாகும் என்றும் குறிப்பிட்டார். நீதிபதிகளின் ஓய்வு வயதெல்லையை அதிகரிக்கும் திட்டம் குறித்து தேசிய மக்கள் சக்தியின் எந்த குழுவிலும் ஆராயப்பட்டு முறைப்படி தீர்மானம் எடுக்கப்படவில்லை என்பதை ஒத்துக் கொண்ட அவர் அந்த தீர்மானம் அமைச்சரவையால் நேரடியாக எடுக்கப்பட்டது என்று தெளிவுபடுத்தினார்.

தேசிய மக்கள் சக்தி சுமார் 30 கட்சிகள், குழுக்கள், தொழிற் சங்கங்கள், இளைஞர் அமைப்புக்கள், விவசாய, தொழிலாளர் அமைப்புக்களின் ஒரு கூட்டணியாக இருக்கின்ற போதிலும், அதற்குள் ஜே.வி.பி. யே தீர்மானங்களை தன்னிச்சையாக எடுக்கிறது என்பதையும் ஜே.வி.பி.யின் தீர்மானங்களை மாற்றக்கூடியதாக மற்றைய அமைப்புக்களினால் செல்வாக்கைச் செலுத்தகூடிய நிலை இல்லை என்பதையும் விஜேநாயக்க தொடர்பான சர்ச்சை வெளிக்காட்டுகிறது.

# போராட்டங்களின் முன்னரங்கப் படையாக இளைஞர்கள்



*மக்களின்* விருப்பத்திற்குப் பணியாத எந்தவொரு அரசாங்கமும் தகர்க்கப்படும் அபாயத்தைக் கொண்டுள்ளது. "கரப்பான் பூச்சி ஜனதா கட்சி என்ற பெயரைக் கொண்ட அமைப்பின் தலைமையில் இளைஞர்கள் நடத்திய தொடர் போராட்டத்திற்குப் பிறகு, மத்திய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான் இராஜினாமா செய்தது வெறும் "வினாத்தாள் கசிவு" ஊழலின் விளைவாக நேர்ந்த ஒரு அமைச்சர் பதவி இழப்பு மட்டுமல்ல. இந்திய ஜனநாயகத்தில் பாரதிய ஜனதா கட்சி ஆதிக்கம் செலுத்தும் கட்சி முறைமை தகர்வதில் இது ஒரு முக்கியத் தருணமாகும்.

இந்த முறைமை பிளவுபட்ட எதிர்க் கட்சிகளுக்கு மிகக் குறைந்த அளவே செயல்படும் வாய்ப்பை வழங்கி வந்தது. முறைசாரா துறையிலேயே பெரும்பாலான வேலை வாய்ப்புக்கள் இருக்கும் ஒரு நாட்டில், நுழைவுப் பரீட்சைகள் என்பது இளைஞர்கள் முறைசார்ந்த வேலை வாய்ப்பு எனும் குறுகிய, ஆனால் உறுதியான உலகிற்குள் நுழைவதைத் தீர்மானிக்கும் கதவுகளாகச் செயல்படுகின்றன.

பல பரீட்சைகளில் தொடர்ச்சியாக நடந்த கசிவுகள், தகுதியைச் சோதிக்கும் ஒரு அமைப்பையே பரவலான ஊழல் மலிந்த ஒன்றாக மாற்றியுள்ளன. பள்ளிப் பரீட்சைகளோடு கூடிய கடுமையான பயிற்சிகளுக்குப் பிறகு, தெரிவு செய்யப்பட்ட சுமார் 20 இலட்சம் பேர் தேசிய தகுதி காண் நுழைவுத் தேர்வை (இளநிலை) மீண்டும் எழுத வேண்டிய கட்டாயத்திற்கு ஆளாயினர். பல மாணவர்கள் இந்தத் துயரத்தைத் தாங்க முடியாமல் உயிர் இழந்தனர்.

அண்மைக் காலங்களில் இந்தியாவில் அரசியல் அணிதிரட்டல் என்பது சாதி மற்றும் மதப் பிரிவுகளுக்குள் மட்டுமே முடக்கப்பட்டிருந்த நிலையில், இந்தத் துயரம் சாதி, மத எல்லைகளைக் கடந்து இளைஞர்களை ஒன்றிணைத்தது. ஆளும் தரப்பிற்குப் பெருமளவில் ஆதரவாக இருந்த தொலைக்காட்சி நிறுவனங்களைப் புறக்கணித்து, முகமற்ற இப்போராட்டக்காரர்கள் சமூக ஊடகங்கள் மூலம் சில நாட்களிலேயே தங்கள் ஆதரவை உருவாக்கினர்.

டில்லி காவல்துறையின் அடக்குமுறையும் போராட்டக் களங்களைச் சுற்றி இணையம் மற்றும் போக்குவரத்தைத் முடக்குவதற்கான முயற்சிகளும் அவர்களின் ஆதரவுப் படையைப் பெருக்க மட்டுமே செய்தன. கடந்த 12 ஆண்டுகளில் மற்ற போராட்டங்கள் நசுக்கப்பட்டது, திசை திருப்பப்பட்டது, பிளவுபடுத்தப்பட்டது அல்லது தானாகவே வீரியமிழக்கச் செய்யப்பட்டது போன்று , இந்தப் போராட்டத்தை நசுக்கவோ, திசை திருப்பவோ முடியாது என்பதை அரசாங்கம் இறுதியாக உணர்ந்து கொண்டது.

பேச்சுவார்த்தை நடத்த வேண்டிய கட்டாயத்திற்குத் தள்ளப்பட்ட அரசாங்கம், கரப்பான் பூச்சி ஜனதா கட்சியின் நியாயமான பிடிவாதத்தின் முன் பணிய வேண்டியதாயிற்று. பிரதான் பதவியில் தொடர்வது இயலாத ஒன்றானது.

போராட்டக்காரர்களின் "இழப்பதற்கு எதுவுமில்லை" என்ற விரக்தி நிலைக்கு, தேர்தல் சார்ந்த பாரம்பரியக் கட்சிகளோடு அவர்கள் கைக்கோர்க்காமல் இருந்ததன் மூலம் ஒரு அரசியல் கண்ணியம் கிடைத்தது. இந்த இயக்கம் எதிர்க் கட்சியாலோ அல்லது ஆளும்கட்சியாலோ கடத்தப்படவோ அல்லது பலவீனப்படுத்தப்படவோ முடியாத ஒன்றாக இருந்தது.

ஆனால், பிரதான் தனது இராஜினாமாவை அறிவித்தது நம்பிக்கையை ஏற்படுத்தவில்லை. பல்வேறு பரீட்சைகளை நடத்துவதிலும் மதிப்பெண் வழங்குவதிலும் ஏற்பட்ட தோல்விகளுக்குத் தார்மீகப் பொறுப்பேற்பதற்குப் பதிலாக, போராட்டங்களால் உருவான சூழ்நிலையைப் பயன்படுத்தி "தேசிய விரோத" சக்திகள் ஆதாயம் அடைவதைத் தடுப்பதற்கான ஒரு முயற்சியாகத் தான் விலகுவதாக சுட்டிக்காட்ட சாமர்த்தியமாகக் முயன்றார்.

மாணவர்கள் இந்திய அரசுக்கு எதிரான உள்நோக்கத்துடன் செயல்படுகிறார்கள் என்ற அரசின் எண்ணவோட்டம் அவரது இராஜினாமா கடிதத்திலும் தெளிவாகத் தெரிந்தது. டெல்லி காவல்துறை போராட்டக்காரர்களை அதிர்ச்சி தரும் லத்திகள், பெல்லட் துப்பாக்கிகள் மற்றும் ஆணிகள் அடிக்கப்பட்ட லத்திகளுடன் எதிர் கொள்ளத் தூண்டியதும் இதே மனநிலைதான். காவல்துறையின் நடவடிக்கைகள் கூட்டத்தைக் கட்டுப்படுத்தும் எந்தவொரு விதிமுறைகளுக்கும் உட்படாத, திட்டமிடப்பட்ட கொடூரமாகவே இருந்தன.

இந்த இராஜினாமா என்பது அரசாங்கத்தின் தந்திரோபாயப் பின்வாங்குதலே தவிர, தவறுகளை உணர்ந்ததனால் ஏற்பட்டதல்ல. போராட்டங்களுக்குச் மதச் சாயம் பூசவும் வெளிநாட்டு அமைப்புகளால் தூண்டப்பட்டது என்றும் அரசியல் ஆதாயத்திற்காகத் திட்டமிடப்பட்டது என்றும் சித்தரிக்கும் முயற்சிகள் முற்றிலும் தோல்வியடைந்த பிறகே இது நிகழ்ந்தது.

பல தவறான நடவடிக்கைகளில், முதலாவதாகச் சமூக ஊடகப் பின்பற்றுபவர்கள் பெரும்பான்மையாகப் போலி கணக்குகள் (bots) என்றும், கணக்குகள் முடக்கப்பட்டால் அவர்கள் காணாமல் போய்விடுவார்கள் என்றும் அரசாங்கம் நினைத்துச் செயல்பட்டது. பின்னர் அவர்களின் இணையப் பங்கேற்பிற்கு நிஜ உலகில் எந்த தாக்கமும் இருக்காது என்றும் இறுதியாக இன்ஸ்டகிராம் ரீல்ஸ்கள் மூலம் அவர்களை எதிர்கொண்டு விடலாம் என்றும் அரசாங்கம் நினைத்தது.

தொடர் தோல்விகளைச் சந்தித்த பிறகே பிரதானை இராஜினாமா செய்ய வைக்க அரசாங்கத்தால் முடிந்தது. இருப்பினும், பாராட்டத்தக்க வகையில், தங்களின் கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டதும் போராட்டக்காரர்கள் போராட்டத்தை விலக்கிக் கொண்டனர்.

வரும் நாட்களில், இப்போராட்டங்களின் தாக்கம் அரசாங்கம் வரம்பிற்குள் வைக்க நினைப்பதை விட மிக விரிவானதாக இருக்கும்.

பல ஆண்டுகளாக, நரேந்திர மோடி தலைமையிலான பாரதிய ஜனதா அரசாங்கம் பெரும்பாலும் குறைந்த வாக்கு வித்தியாசத்தில்தான் வெற்றி பெற்று வந்தது -இது தனித்தோ அல்லது கூட்டணியாகவோ அதிக இடங்களைக் கைப்பற்ற உதவியது - பின்னர் அதை ஒரு விரிவான மக்கள் ஆதரவாகக் காட்டியது. மதச்சார்பின்மை மற்றும் கூட்டாட்சி தத்துவத்தின் நிலையான விவகாரங்களில் அரசியலமைப்புச் சட்டப் பொதுக்கருத்தை

**(தொடர்ச்சி 14ஆம் பக்கம்)**

**(தி இந்து ஆசிரிய தலையங்கம், 27 ஜூலை 2026)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# வாரம் ஒருசிந்தனை

மறவன்புலவு க. சச்சிதானந்தன்

## விருந்தும் பகிர்ந்தலும்

கொடை ஆணோடு பிறந்த இயல்பு.
தடை பெண்ணோடு பிறந்த இயல்பு.
விருந்தைப் பகிரவிழைபவன் ஆண்.
விந்தைப் பகிரவிளைபவன் ஆண்.
விருந்தினர் வருகையைததடுப்பவள் பெண்.
விந்தைப் பகிர்வதைத் தடுப்பவள் பெண்.

மனித நாகரீக வரலாறு. பண்பாட்டைசெதுக்கிக் கூர்மையாக்கிய வரலாறு. இந்த வரலாற்றுக் காலமே, 2500 ஆண்டுகள் முந்தைய தொடக்கம் 2000 ஆண்டுகள் முந்தையகாலம் வரை ஏறுத்தாழ 500 ஆண்டுகள் நீதி இலக்கியக் காலம்.

மனிதனைப் பண்படுத்தி, சமூகமாக, குமுகாயமாக வாழ்வதற்குரிய நீதிகளை, அறங்களை எடுத்தோதோம்பியகாலம்.

புத்தர், மகாவீரர், கன்பூசியசு, திருவள்ளுவர், அரிஸ்டோட்டில், பிளாட்டோ, சோக்கரட்டிசர், மோசசர், இயேசுபிரான் எனப் பெயர்களைக் கூறினாலும் அவர்களை ஒத்த, பெயர் தெரியாத, ஆயிரக்கணக்கானோர் வாழ்ந்தகால இடைவெளி. மனிதனைப் பண்படுத்தமுயன்றகால இடைவெளி.

ஆண்களுக்குச் சொன்னார்கள் உலகத்தாருக்கு விருந்தோம்பு, பசியைப்போக்கு. ஒருவன் ஒருத்தியாக அன்றில் பறவைகள் போல் விந்தைப் பகிர். நீதி இலக்கியம்.

ஆணுக்கு நல்வினை விருந்தோம்பல். எனவே இல்வாழ்வானுக்கே விருந்தோம்பும் அறம். பார்த்திருப்பான் என்கிறார் வள்ளுவர்.

செல்விருந்துஓம்பி
வருவிருந்து பார்த்திருப்பான்
நல்விருந்து வானத் தவர்க்கு. (குறள் 86)

விருந்துஓம்பாதமடமைபெண்களிடம் உண்டு. வள்ளுவர் சொல்கிறார்.

உடைமையுள் இன்மைவிருந்தோம்பல்
ஓம்பாமடமைமடவார்கண் உண்டு. (குறள் 89)

பெண்களுக்கு அறம் சொன்னார்கள். விருந்தோம்பலில் ஆண்களுக்குத் துணையாகுங்கள். விந்தை ஆண்கள் பகிர்வதற்கு ஒப்பாதீர்கள்.நீதி இலக்கியம்.

நீதி இலக்கியங்கள் பெருகினாலும் மனிதன் மாறவில்லை. அந்தநாள் முதல் இந்தநாள் வரைமனிதன் மாறவில்லை.

அவன் செல்வந்தன். வீடுதிரும்புகிறான். வழியில் ஒருகிழவி. கையதுகொண்டுமெய்யதுதழீஇ...தடுக்கில் படுத்திருக்கிறாள். பசி மயக்கம். கண்களோ உறக்கம்.

செல்வந்தனுக்குப் பொறுக்கவில்லை பசிப்பிணி தீர்க்கும் அறம் அவனுக்கு இளமையிலே ஊட்டம். கைத் தாங்கலாக மூதாட்டியை அழைத்துக் கொண்டுதன் வீட்டுக்குவருகிறான்.திண்ணையிலே மூதாட்டி.

மாளிகைவீடு. மாடங்கள் கடக்கிறான். மனைவியைக் காண்கிறான். களைப்போடுவந்தவன் என்றாலும் அவளிடம் அன்போடு செல்கிறான்.

அவள் முகத்திலேதூசு.தலைமுடியிலே ஈர்கள்,பேன்கள். மூதாட்டியின் பசியைப் போக்க மனைவியின் துணையை நாடுகிறான், நீதி இலக்கிய அறம் படித்து, ஒருவனுக்கு ஒருத்தியாக வாழ்கின்ற செல்வந்தன்.

அவளின் முகத்தை வருடுகிறான். தூசிகளைத் தட்டுறான். தாடையிலே சொட்டுகிறான்.தன்னோடு அணைக்கிறான். அவள் தலையைச் சொறிகிறாள். இவனோ மயிர் மயிராகவகிடுகிறான். ஈர்களை வாருகிறான். பேன்களைச் சொடுக்குகிறான்.

களைத்துவந்தவன். அணைத்து மகிழ்கிறான். மனைவிக்கு மகிழ்ச்சி. அவளும் அணைக்கிறாள். முத்தம் கொடுக்கிறாள்.

சாப்பிட அழைக்கிறாள் மனைவி. மூதாட்டி பசியோடு திண்ணையிலே என்கிறான் கணவன்.

விருந்து என்றசொல் அவன் வாயில் வரமுன்பே, கண்ணிமைக்கும் நேரத்தில் மனைவிமனம் மாறுகிறாள்.

அன்புப் பாடல் பாடியவள், ஒப்பாரிப் பாடல் பாடுகிறாள். அழகுநடனம் ஆடியவள், ஆர்ப்பாட்ட நடனம் ஆடுகிறாள். பெண்களின் கைகளில் கிடைப்பன, சப்பாத்தி உருட்டுக் கட்டை, அகப்பைத் தடி, சுளகு, விளக்குமாறு.

பந்தியில் இருந்த செல்வந்தன் பதறி எழுகிறான். பழையசுளகின் விளிம்பு அவனைப் பதம் பார்த்தது. மாடங்களைக் கடந்து ஓடினான்.புறததிண்ணைக்கு ஓடினான். மூதாட்டியைக் காணவில்லை மனைவியின் வெறுப்புத் தணியும் வரை, ஓடினான், ஓடினான், வாழ்க்கையின் ஓரத்துக்கேஓடினான்.

நினைத்தபோது வருவதன்றுகவிதை.
நெஞ்சம் கனத்தபோது வருவதேகவிதை.
சொன்னவர் இக்காலத்து வலம்புரி ஜான்.
அரற்றிப் பாடியவளைக் கேட்டாள்.

நஞ்செறிந்துநடனம் ஆடியவளை எட்டிப் பார்த்தாள். முறம் எடுத்து ஓங்கியதைக் கண் எரியக் கண்டாள் செல்வந்தன் பந்தியைவிட்டுப் பதறி எழுவதற்கு முன்பே மூதாட்டி கிளம்பினாள். பாம்பின் கால் பாம்பறியும். பெண்ணின் நெஞ்சம் பெண்ணுக்குத் தெரியும்.

மூதாட்டி ஒளவையார். கவிஞரான நெஞ்சம் கனத்தது. வெண்பாபாடினார். தனிப்பாடல் திரட்டில் இந்தவெண்பா.

இருந்து... முகம்திருத்தி
ஈரோடு... பேன்வாங்கி
விருந்துவந்ததென
விளம்ப - ஆடினாள்
பாடினாள் ஆடிப்
பழ முறத்தால்
சாடினாள் ஓடோடத் தான்.

## இந்தவார ராசிபலன் 02.08.2026 - 08.08.2026

ஞாயிற்றுக்கிழமை
பராபவ வருடம் - ஆடி 17

நல்ல நேரம்: 7.31 - 09.00 ராகு காலம் : 4.30 - 06.00 திதி : சதுர்த்தி

### மேஷம்
[ அசுவினி, பரணி, கார்த்திகை 1 பாதம் ]

மேஷ ராசி அன்பர்களே, இந்த வார பலன்படி, பல நாட்களாக எதிர்பார்த்த காரியம் ஒன்றில் சுமூகமான முடிவு வரும்.குலதெய்வ கோவிலுக்கு சென்று வழிபடவும். சில நேரங்களில் தேவையற்ற மனசஞ்சலம் உண்டாகலாம். கணவன் மனைவி இடையே கருத்துவேற்றும் ஏற்படும் வாய்ப்புகள் அதிகம். கடன் தொல்லை ஓரளவு குறையும். யாரிடமும் வீண் வாக்குவாதம் வேண்டாம். உத்யோகத்தில் பணிச்சுமையால் அசதி ஏற்படும்.

### ரிஷபம்
[ கார்த்திகை 2,3,4, ரோகிணி, மிருகசீரிஷம் 1,2 ]

ரிஷப ராசி அன்பர்களே, இந்த வார பலன்படி, குடும்பத்தில் மகிழ்ச்சிகரமான சூழ்நிலைகள் அமையும். பெரியோர்களின் ஆலோசனை உதவியாக இருக்கும். வீட்டில் பொருள் சேர்க்கை உண்டு. எதிலும் சற்று அதிக முயற்சி எடுத்தால் வெற்றி சேரும். கணவன் மனைவி இடையே ஒற்றுமை அதிகரிக்கும். முடிக்க வேண்டும் என்று திட்டமிட்ட காரியம் கச்சிதமாக முடியும். உத்யோகத்தில் அதிகாரிகளின் ஆதரவு கிடைக்கும். தொழில், வியாபாரம் தொடர்பான முயற்சிகள் வெற்றி பெறும்.

### மிதுனம்
[ மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ]

மிதுன ராசி அன்பர்களே, இந்த வார பலன்படி, கையில் எடுக்கும் காரியத்தை தீவிரமாகவும், நிதானமாக யோசித்து செயல்படவும். மனதில் புது தெம்பும் உற்சாகமும் தோன்றும். வாங்கிய கடனை திருப்பி அடைக்க முடியும். கணவன் மனைவி இடையே ஒற்றுமை உண்டாகும். குடும்பத்தில் உங்கள் வார்த்தைக்கு மதிப்பு கூடும். அக்கம் பக்கம் உள்ளவர்களின் ஆதரவு பெருகும். உத்யோகத்தில் நல்ல ஒரு முன்னேற்றம் இருக்கும். தொழில், வியாபாரத்தில் இருந்த பிரச்சனைகள் தீரும்.

### கடகம்
[ புனர்பூசம் 4, பூசம், ஆயில்யம் ]

கடக ராசி அன்பர்களே, இந்த வார பலன்படி, உங்கள் பேச்சு திறமையால் நிறைய சாதிக்க முடியும். வாழ்க்கைதுணையின் ஆதரவால் எதிலும் வெற்றி கிடைக்கும். புதிய வீடு, மனை வாங்குவது தொடர்பான யோசனை ஏற்படும். மனதில் எண்ணிய காரியங்கள் கைகூடும் நிலை ஏற்படும். நீண்ட நாட்களாக இழுபறியாக இருந்த காரியம் சீக்கிரத்தில் முடியும். உத்யோகத்தில் கவனம் தேவை. தொழில், வியாபாரத்தில் விரிவாக்கம் ஏற்படும்.

### சிம்மம்
[ மகம், பூரம், உத்திரம் 1 ]

சிம்ம ராசி அன்பர்களே, இந்த வார பலன்படி, குடும்பத்தில் மனத்திருப்தி தரக்கூடிய விஷயங்கள் நடக்கும். முக்கியமாக நீங்கள் கேட்ட இடத்தில் பண உதவி கிடைக்கும். மறைமுக எதிரிகளின் தொல்லை தானாக விலகும். மனதில் உள்ள தாழ்வு மனப்பான்மையை அகற்றவும். எதிலும் சாதகமான சூழல் உண்டு. எதிர்பாராத அதிர்ஷ்ட வாய்ப்புகள் தேடி வரும். வெளிநாடு சென்று வரும் வாய்ப்பு கிடைக்கும். உத்யோகத்தில் மனநிறைவு ஏற்படும். தொழில், வியாபாரத்தில் மிதமான லாபம் இருக்கும்.

### கன்னி
[ உத்திரம் 2,3,4, அஸ்தம், சித்திரை 1,2 ]

கன்னி ராசி அன்பர்களே, இந்த வார பலன்படி, மற்றவர்களுக்காக நிறைய விஷயங்களில் வளைந்து கொடுக்க வேண்டியிருக்கும். குடும்ப உறுப்பினர்களிடம் ஒற்றுமை இருக்கும். கணவன் மனைவிக்குள் விட்டுக்கொடுத்தல் அவசியம். உங்கள் விருப்பத்துக்கு மாறாக சில காரியங்கள் நடந்தாலும் முடிவு சாதகமாகவே இருக்கும். குடும்ப அடிக்கடி கவலைகள் வந்து போகும். உத்யோகம் தொடர்பான அலைச்சல் ஏற்படும். தொழில், வியாபாரத்தில் உள்ள நுணுக்கங்கள் புரியவரும்.

### துலாம்
[ சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3 ]

துலாம் ராசி அன்பர்களே, இந்த வார பலன்படி, குடும்பத்தில் முக்கிய முடிவுகளை எடுக்க வேண்டி வரும். மேலும் நீங்கள் திட்டமிட்ட காரியத்தை சிறப்பாக முடிக்க முடியும். வாகனங்களில் செல்லும்போது கவனமும், பேசும் வார்த்தையில் எச்சரிக்கையும் தேவை. உங்கள் செயல்களுக்கு முட்டுக்கட்டை போட்டவர்கள் விலகி விடுவர். குடும்பத்தில் இருந்த குழப்பங்கள் அனைத்தும் முடிவுக்கு வரும். உத்யோகத்தில் இருந்த எதிர்ப்புகள் நீங்கும்.

### விருச்சிகம்
[ விசாகம் 4, அனுஷம், கேட்டை ]

விருச்சிக ராசி அன்பர்களே, இந்த வார பலன்படி, குடும்ப நபர்களிடம் விட்டுக்கொடுத்து போவது நல்லது. உங்களால் மற்றவர்கள் பயனடைவர். குடும்பத்தில் புது நபர்களின் வருகை இருக்கும். உங்களை சுற்றி பல நல்ல விஷயங்கள் நடக்க ஆரம்பிக்கும். கணவன் மனைவிக்குள் நல்ல புரிதல் இருக்கும். கடன் பிரச்னையை சமாளிக்க முடியும். பிரியமானவர்கள் சந்திப்பு நிகழும். இரவு நேர வாகன பயணங்களை தவிர்க்கவும். உத்யோக மாற்றம் ஏற்படும். தொழில், வியாபாரம் வழக்கம் போல் செல்லும்.

### தனுசு
[ மூலம், பூராடம், உத்திராடம் 1 ]

தனுசு ராசி அன்பர்களே, இந்த வார பலன்படி, ஒரு காரியத்தை தொடங்கும் முன் ஒரு முறைக்கு பல முறை யோசித்து செய்யவும். குடும்பத்தில் அனைவரும் உங்கள் பேச்சுக்கு முக்கியத்துவம் கொடுப்பர். தெய்வ பக்தி அதிகரிக்கும். உடன்பிறப்பு வகையில் சில நன்மைகள் ஏற்படும். நெருக்கமானவர்களிடம் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகள் மறையும். உத்யோகத்தில் உழைப்பிற்கேற்ற ஊதியம் கிடைக்கும்.

### மகரம்
[ உத்திராடம் 2,3,4, திருவோணம், அவிட்டம் 1,2 ]

மகர ராசி அன்பர்களே, இந்த வார பலன்படி, குடும்பத்தில் எந்த முடிவு எடுப்பதாக இருந்தாலும் ஆலோசித்த பின் முடிவு எடுக்கவும். உங்கள் வருமானம் கணிசமாக முறையில் உயர துவங்கும். கணவன் மனைவி அன்யோன்யம் அதிகரிக்கும். வீட்டில் எதிர்பாராத மருத்துவ செலவுகள் வரக்கூடும். நட்பு வகையில் நிதானத்தை கடைபிடிப்பது நல்லது. வாழ்க்கை முன்னேற்றத்திற்கான வழி கிடைக்கும். உத்யோகத்தில் பணிகளை கவனமாக செய்யவும். தொழில், வியாபாரத்தில் சாதகமான நிலை வரும்.

### கும்பம்
[ அவிட்டம் 3,4, சதயம், பூரட்டாதி 1,2,3 ]

கும்ப ராசி அன்பர்களே, இந்த வார பலன்படி, பொருளாதார வளர்ச்சி சிறப்பாக இருக்கும். குடும்பத்தில் அமைதி நிலவும். குடும்பத்தில் உங்கள் வாழ்க்கைத்துணை உங்களைப் புரிந்து கொண்டு நடப்பார். உறவினர்களிடையே இருந்த பிரச்னைகள் அகலும். கணவன் மனைவிடையே சிறு சிறு பிரச்சனைகள் ஏற்பட்டு பின் சீராகும். வாகனத்தில் மித வேகம் பின்பற்றவும். உடல் நலத்தில் அக்கறை செலுத்தினால் சிறு உடல் உபாதைகளை தவிர்க்கலாம். உத்யோகத்தில் பல சலுகைகள் கிடைக்கும்.

### மீனம்
[ பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி ]

மீன ராசி அன்பர்களே, இந்த வார பலன்படி, குடும்பத்துக்காக நிறைய சிரமப்பட வேண்டியதிருக்கும். நீண்ட நாட்களாக தடைபட்டிருந்த விஷயங்கள் இப்போது நடைபெறும். உறவினர்கள் மத்தியில் இருந்த பழைய பகை மாறும். குடும்பத்தில் இருந்த சோதனைகள் விலகும். சில நேரங்களில் எதை செய்வது எதை விடுவது என்ற தடுமாற்றம் ஏற்படும். கோர்ட் வழக்கில் சாதகமான தீர்ப்பு வரும். உத்யோகத்தில் அதிகாரிகளிடம் மனஸ்தாபம் ஏற்படலாம். தொழில், வியாபாரத்தில் ஆர்வம் அதிகரிக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# வட்டுக்கோட்டை தீர்மானத்தின் இன்றைய நிலை என்ன?



வீரகத்தி தனபாலசிங்கம்

## பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த ஒரு இடதுசாரியின் பார்வை

நவசமசமாஜ கட்சியின் முன்னாள் பொதுச் செயலாளர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்னவின் இரண்டாவது நினைவு தினத்தை முன்னிட்டு கொழும்பு மருதானை டீன்ஸ் வீதியில் அமைந்திருக்கும் சமூக சமய நடுநிலையத்தின் கேட்போர் கூடத்தில் 2026 ஜூலை 25 சனிக்கிழமை காலை நிகழ்வு ஒன்று இடம் பெற்றது.

இலங்கையில் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமை தொடர்பில் கலாநிதி கருணாரத்ன இறுதிவரை மிகவும் உறுதியாகக் கடைப்பிடித்த நிலைப்பாட்டையே அவரின் அரசியல் இயக்கம் தற்போதும் கொண்டிருக்கிறது.

நவசமசமாஜ கட்சியின் தற்போதைய பொதுச் செயலாளர் ரணத் குமாரசிங்க எழுதிய "வட்டுக்கோட்டை தீர்மானத்தின் இன்றைய நிலை என்ன?" என்ற தலைப்பில் சிறிய நூல் ஒன்று அன்றைய தினம் வெளியிடப்பட்டது.

தமிழ் மக்களின் அரசியல் உரிமைப் போராட்டத்தின் இலக்கு ஐக்கிய இலங்கைக்குள் சுயாட்சி (சமஷ்டி) அடிப்படையில் தீர்வைக் காண்பது என்பதில் இருந்து 'தமிழீழம்' என்ற சுதந்திரமான தனியரசுக்கான கோரிக்கையாக நகர்ந்ததை குறித்து நின்ற வட்டுக்கோட்டை தீர்மானம் நிறைவேற்றப்பட்டு (1976 மே 14) அரை நூற்றாண்டு கடந்த நிலையில், அது குறித்து வடக்கில் சிலர் ஆரவாரமில்லாமல் ஓரிரு நிகழ்வுகளை நடத்தினர்.

'ஆனால், அந்த தீர்மானத்தின் இன்றைய 'தகுதி' குறித்து குறிப்பாக உள்நாட்டுப்போர் முடிவுக்கு வந்து 17 வருடங்களுக்கும் அதிகமான காலம் கடந்திருக்கும் நிலையில் எவரும் ஆய்வு செய்து ஒரு நூலை வெளியிட்டதாக தெரியவில்லை.

ஆனால், பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த இடதுசாரி அரசியல்வாதி ஒருவர் வட்டுக்கோட்டை தீர்மானத்தின் இனறைய நிலை குறித்து தனது எண்ணத்தை, சிறியதாக இருந்தாலும் ஒரு நூலாகக் கொண்டு வருவதில் அக்கறை காட்டியிருக்கிறார். தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமை மீது தனது இயக்கத்துக்கு இருக்கும் அசைக்க முடியாத நம்பிக்கையின் வெளிப்பாடாக வட்டுக்கோட்டை தீர்மானத்தை நியாயப்படுத்திக் கருத்துக்களை முன்வைத்திருக்கிறார் என்று தெரிகிறது.

தனிநாட்டை அடைவதற்கான ஆயுதப் போராட்டத்தின் விளைவான உள்நாட்டுப் போர் முடிவுக்கு வந்த பின்னர் குறைந்த பட்சம் 1987 ஜூலை இந்திய - இலங்கை சமாதான உடன்படிக்கையின் விளைவாக கொண்டு வரப்பட்ட மாகாணசபைகளையாவது ஒழுங்காக இயங்க வைப்பதில் அரசாங்கங்களும் தென்னிலங்கை குறிப்பாக, அரசாங்கங்களும் பொதுவில் சிங்கள அரசியல் சமுதாயமும் அக்கறையின்றி இருக்கின்ற நிலையில் தமிழ் மக்களுக்கு இன்னமும் கூட விட்டு வைக்கப்பட்டிருக்கக்கூடிய "தெரிவு" சுயநிர்ணய உரிமையே என்பதே ரணத் குமாரசிங்கவின் நம்பிக்கையாக இருக்கிறது போன்று தோன்றுகிறது.


தற்போதைய அரசியல் நிலைவரத்துக்கு மத்தியில் வட்டுக்கோட்டை தீர்மானத்துக்காக குரல் கொடுப்பது எந்தளவுக்கு பொருத்தமானது அல்லது தகுதியானது என்பது கடந்த அரை நூற்றாண்டு கால அரசியல் நிகழ்வுப் போக்குகளை ஒருவர் எவ்வாறு மதிப்பிடுகிறார் என்பதிலேயே தங்கியிருக்கிறது என்பது இந்த கட்டுரையாளரின் நம்பிக்கை. என்றாலும் கூட, குமாரசிங்கவின் கருத்துக்களை தமிழ் வாசகர்கள் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற ஆர்வத்தில் அவரின் நூலில் வட்டுக்கோட்டை தீர்மானம் பற்றிய முக்கியமான பகுதிகள் இன்று இந்த பத்தியில் மீள்பிரசுரம் செய்யப்படுகின்றன. அவை வருமாறு:

"இலங்கையின் சிங்கள ஆட்சியாளர்களுடன் இணக்கப்பாட்டுக்கு வருவதற்கு தாங்கள் மேற்கொண்ட முயற்சிகளைக் கைவிடுவதற்கும் தங்களது விதியைத் தாமே பொறுப்பேற்பதற்கும் தமிழ் மக்களை நகர்த்தியதே வட்டுக்கோட்டை தீர்மானத்தின் வரலாற்று வகிபாகம்.

"சிங்கள ஆட்சியாளர்களுடனான கொடுக்கல் வாங்கல்களை முடிவுக்கு கொண்டு வந்து சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் எழுந்து நின்று தனித்தமிழ் ஈழத்தை உருவாக்குவதன் மூலம் அல்லாமல் வேறு வழியில் தமிழ் மக்களுக்கு சுதந்திரத்தையோ விமோசனத்தையோ பெற்றுக்கொடுக்க முடியாது என்பதை அந்த தீர்மானம் உறுதிப்படுத்தியது.

"தமிழ் மக்களின் பாரிய நிறுவன பலத்தை அடிப்படையாகக் கொண்ட சுதந்திரமான சுயாட்சி பற்றிய எதிர்பார்ப்புக்களைக் கட்டியெழுப்பிய வட்டுக்கோட்டை மகாநாட்டில் நிறைவேற்றப்பட்ட அந்த தீர்மானம் குறித்து இன்று நாம் விவாதிக்கிறோம்.

> "வட்டுக்கோட்டை தீர்மானங்களின் பிரகாரம் செயற்பட அனுமதித்தால், எமக்கு தனித்தனியாகவும் ஒன்றிணைந்தும் அபிவிருத்திக்கான போராட்டங்களை முன்னெடுக்க வாய்ப்பு உருவாகும். தேசியப் பிரச்சினைக்கான தீர்வு குறித்த கலந்துரையாடல்களை (எவ்வாறு முன்னோக்கிச் செல்வது என்பதை) இன்றைய யதார்த்த சூழ்நிலையில் வட்டுக்கோட்டை தீர்மானத்தின் நோக்குகளின் அடிப்படையில் முன்னெடுக்க வேண்டும்."
> - ரணத் குமாரசிங்க



அத்தகையதொரு பலம்வாய்ந்த இயக்கம் உலக வல்லரசுகளின் உதவியுடன் அழிக்கப்பட்ட பின்னர் தோன்றிய சிதறிய ஒரு சூழ்நிலையில், அந்த பலமான காலத்தில் உருவான கருத்துக்கள் குறித்து இன்று கலந்துரையாடுகிறோம்.

"தோல்விகள் ஒருபோதுமே உண்மைகளை முடிவுக்கு கொண்டு வருவதில்லை. இலங்கையின் மார்க்சிய இயக்கங்கள், புரட்சிகர இயக்கங்கள் மற்றும் ஜனநாயக இயக்கங்கள் இன்று மிகவும் கடினமான இக்கட்டான நிலைக்கு தள்ளப்பட்டிருக்கின்றன.

"இந்த வீழ்ச்சியும் போர்ப்பீதியும் தமிழ் மக்களை மாத்திரம் பாதிக்கவில்லை. தமிழர்களுக்கு சமமான அளவுக்கு அல்லது சில வேளைகளில் அதையும் விட அதிகமாகவும் சிங்கள சமூகத்தையும் அது பாதித்தது என்று கூறலாம்.

"இலங்கைச் சமுதாயத்தின் உயிர் நாடியாக விளங்கும் தொழிலாளர் வர்க்க இயக்கத்தின் பெரும்பான்மையினர் இராணுவவாதத் திட்டத்துக்கு அடிபணிந்து செயற்பட்டதால் ஏற்பட்ட பாரிய சமூக விழுமியச் சரிவின் விளைவுகளுக்கு பதிலைத் தேடும் பொறுப்பை வரலாறு அவர்களுக்கு வழங்கியிருக்கிறது.

"தமிழ் மக்கள் தமது பிரதேசங்களை விடுவித்து தமது தலைவிதியைத் தீர்மானிப்பதற்காக முன்னெடுத்த போராட்டம் கொடிய தோல்வியைத் தழுவியது. ஆனால், அதன் மூலம் வட்டுக்கோட்டை தீர்மானத்தின் எதிர்பார்ப்புகளும் நோக்குகளும் தோல்வியடைந்ததாக கருத முடியாது. இது விடுதலைப் போராட்டத்தின் ஒரு "இனிங்ஸின்" தோல்வி மாத்திரமே.

"அந்த தோல்விக்கான காரணங்களை விவாதித்து அடுத்த "இனிங்ஸுக்கு" தயாராவதற்கான வியூகங்களை வகுத்துக்கொண்டு முன்னோக்கிச் செல்வதற்கு வட்டுக்கோட்டை மகாநாட்டின் நோக்குகளை பயன்படுத்திக் கொள்ளவேண்டும்.

"வட்டுக்கோட்டை மகாநாட்டுக்கு பிறகு 1976 நவம்பரில் பாராளுமன்றத்தில் ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் பட்ஜெட் விவாதத்தில் உரையாற்றிய தமிழ்த் தலைவர் எஸ். ஜே.வி. செல்வநாயகம் தமிழ் பேசும் மக்கள் இழந்த உரிமைகளைப் பெறுவதற்காக தான் முன்னெடுத்த சமஷ்டி இயக்கம் தோல்வியடைந்து விட்டதை ஒத்துக் கொண்டார்.

"அதற்கு முன்னதாக, இரு பிரதமர்களுடன் தான் செய்துகொண்ட ஒப்பந்தங்கள் தோல்வியடைந்த பிறகு செல்வநாயகம் சிங்களத் தலைவர்கள் குறித்து ஒரு உறுதியான முடிவுக்கு வந்தார்.

"அதாவது சிங்களத் தலைவர்கள் தமிழ் மக்களை ஆளக்கூடிய அளவிற்கு பெருமனதுடையவர்களோ அல்லது பலமானவர்களோ அல்ல. அவர்கள் அந்தளவுக்கு உயர்ந்தவர்களும் இல்லை என்பதே அந்த முடிவு. எமது அனுபவமும் அதுவே.

"தமிழ் மக்களை ஆளுவது ஒரு புறமிருக்க, இந்த நாட்டின் சிங்களத் தலைவர்கள் சிங்கள மக்களைக் கூட ஆளத் தகுதியற்றவர்கள். அவர்களுக்கு அதற்கான பலம் இருந்திருந்தால் தமிழ் மக்களுடன் செய்து கொண்ட ஒப்பந்தங்களை கிழித்தெறிய வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்காது.

"சிங்கள மக்களுக்கும் தமிழ் மக்களுக்கும் இடையில் வித்தியாசமில்லை என்றும் அவர்களை சமத்துவமாக நடத்துவதாகவும் முன்னைய அரசாங்கங்கள் கூறியதைப் போன்றே இன்றைய தேசிய மக்கள் சக்தி அரசாங்கமும் கதை கூறுகிறது. தமிழ் மக்களுக்கு மாத்திரமல்ல, சிங்கள மக்களுக்கும் தேவையானது சுயநிர்ணயமேயாகும். சிங்கள விவசாயிகளுக்கும் மீனவர்களுக்கும் தங்களது பிரதேசங்களின் உற்பத்தி, விநியோகம் மற்றும் விலை நிர்ணயம் போன்றவற்றை தீர்மானிக்கக்கூடிய ஒரு சுயாட்சி அதிகாரம் தேவைப்படுகிறது.

"ஒரு தேசத்துக்கு சுயநிர்ணயம் என்பது ஏதோ பொருளாதாரப் பிரச்சினையைத் தீர்த்துவைப்பதுடன் முடிந்துவிடுவதில்லை. அது ஒரு தேசத்தின் எதிர்காலத் தலைவிதி, கலாசாரம், மொழி மற்றும் கல்வி சார்ந்த விடயமாகும். இவை அனைத்தையும் பற்றி சுதந்திரமாகத் தீர்மானம் எடுத்து முன்னகர்ந்து செல்லக்கூடிய, வேறு ஒரு இனத்தின் அடக்குமுறைக்கு உட்படாத ஒரு சுதந்திர நாட்டில் வாழ்வதற்கு அவர்களுக்கு உரிமை உண்டு.

"ஒரு சுதந்திர அரசுக்கு தான் எந்த தேசிய அரசுடன் கொடுக்கல் வாங்கல்களைச் செய்வது, இணைந்து அபிவிருத்திப் பணிகளை முன்னெடுப்பது என்ற தீர்மானங்களை எடுக்கும் சுதந்திரம் உண்டு. இவை முழுவதையுமே சுயநிர்ணயம் என்கிறோம்.

"இவ்வாறான ஒரு நிருவாகத்தை ஏற்றுக் கொள்ளாமல் ஒரு தேசத்தை ஒன்றிணைக்க முடியாது. அவ்வாறு ஒன்றிணைக்க முடியாவிட்டால், ஒரு 'தேசிய அரசு' உருவாகாது என்பதுடன் இந்த மண்ணில் அபிவிருத்திப் பாதையை அமைக்கவும் முடியாது.

"தமிழ் மக்களின் உரிமைகளை வழங்கினால் மாத்திரமே சிங்கள மக்களுக்கும் விடுதலை கிடைக்கும். சிங்கள மக்கள் பெரும்பான்மை இனத்தவர்கள் என்பதால் அவர்களுக்கு மாத்திரம் தனியான விமோசனம் கிடைக்காது.

"யுத்தம் செய்து வெற்றிபெற்ற பின்னரும் பொருளாதார ரீதியில் பிச்சையெடுக்கும் நிலைக்கு நாடு தள்ளப்பட்டுள்ளது. 2048 ஆம் ஆண்டில்தான் இந்த பிரச்சினை தீரும் என்று முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சொன்னார். ஆனால், அந்த ஆண்டில்தானா அல்லது 2088ஆம் ஆண்டில்தானா என்பது யாருக்கும் தெரியாது.

"ஜனநாயக மாற்றங்கள் என்பது தமிழ் மக்களின் உரிமைகளை வழங்குவதில் இருந்து தொடங்க வேண்டும். அதற்கு வட்டுக்கோட்டை தீர்மானங்களின் நோக்குகளை அடிப்படையாகக் கொள்ள வேண்டும். தமிழ் மக்களின் தலைமையுடன் இணைந்து செயற்பட வேண்டும். தற்போதைய சூழலில் அவர்கள் எடுக்கப்போகும் அடுத்த கட்ட நடவடிக்கைகளுக்கு ஆட்சியாளர்கள் வசதி செய்து கொடுக்க வேண்டும்.

"தமிழ் மக்களுக்கு உரிமைகள் எவ்வாறு கிடைக்க வேண்டும் என்பது வட்டுக்கோட்டை ஆவணத்தில் இருக்கிறது. ஒரு ஜனநாயக தேசிய அரசை, மதசார்பற்ற அரசை எவ்வாறு உருவாக்குவது என்பதற்கு அது ஒரு சிறந்த உதாரணமாகும்.

"வட்டுக்கோட்டை தீர்மானங்களின் பிரகாரம் செயற்பட அனுமதித்தால், எமக்கு தனித்தனியாகவும் ஒன்றிணைந்தும் அபிவிருத்திக்கான போராட்டங்களை முன்னெடுக்க வாய்ப்பு உருவாகும். தேசியப் பிரச்சினைக்கான தீர்வு குறித்த கலந்துரையாடல்களை (எவ்வாறு முன்னோக்கிச் செல்வது என்பதை) இன்றைய யதார்த்த சூழ்நிலையில் வட்டுக்கோட்டை தீர்மானத்தின் நோக்குகளின் அடிப்படையில் முன்னெடுக்க வேண்டும்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# சிறுபான்மையினரின் நம்பிக்கையை கட்டியெழுப்புவது ஒரு அவசியமான முதலீடாகும்!

**காணாமல் போனோரைக் கண்டறிதல், காணிகளை மீள ஒப்படைத்தல் மற்றும் மாகாண சபை தேர்தல்களை நடத்துதல் போன்ற தனது தேர்தல் விஞ்ஞாபன வாக்குறுதிகளை விரைந்து நடைமுறைப்படுத்துவதோடு, சிறுபான்மை சமூகங்களினால் தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகளுடன் வழக்கமான பேச்சுவார்த்தையைப் பேணுவது மிகவும் முக்கியமானது.**



கலாநிதி
ஜெகான் பெரேரா

இலங்கை இன்று உலகின் அமைதியான நாடுகளில் ஒன்றாகும். உலக அமைதிக் குறியீட்டில் 173 நாடுகளில் 57வது இடத்தில் இருக்கும் இலங்கை, கடந்த ஆண்டில் 30 இடங்களுக்கும் மேலாக முன்னேறியுள்ளது. பல தசாப்த கால அரசியல் வன்முறை மற்றும் ஆயுத மோதல்களுக்குப் பிறகு பாராட்டுக்குரிய ஒரு சாதனையாக இது திகழ்கிறது. இருப்பினும், இலங்கை பயங்கரமான வன்முறை காலங்களையும் சந்தித்திருக்கிறது என்பதை ஒருபோதும் மறந்துவிடக் கூடாது. இக்கால கட்டங்களை மறந்துவிடுவதோ அல்லது மறைப்பதோ அவை மீண்டும் நடப்பதற்கான ஆபத்தை உருவாக்கும். 1971ஆம், 1988 - 89ஆம் ஆண்டுகளின் இரு ஜனதா விமுக்தி பெரமுன (ஜே.வி.பி.) கிளர்ச்சிகளும் 1983 முதல் 2009 வரை தொடர்ச்சியாக நடந்த ஈழப் போரின் கட்டங்களும் இதில் அடங்கும்.

ஆனால் இந்த அனைத்து வன்முறைக் காலங்களிலும், 1983 ஜூலை மாதம் தமிழ் மக்களுக்கு எதிராக நிகழ்த்தப்பட்ட வன்முறை தனித்து நிற்கிறது. ஜூலை 23 முதல் ஒரு வாரம் முழுமையாக நாடு தீப்பற்றி எரிந்ததுடன், தமிழ் மக்கள் கடுமையான பாதிப்புக்கு உள்ளாயினர். அரசாங்கத்தின் ஒரு பகுதி இந்த வன்முறையைத் திட்டமிட்ட வேளையில், மறுபகுதி முடங்கிப்போய் அப்பாவித் தமிழ் மக்களின் உயிர்களைப் பாதுகாக்கத் தவறியது. கொழும்பில் உள்ள பிரதான சிறையில் தமிழ் கைதிகள் படுகொலை செய்யப்பட்டனர். கொழும்பில் இருந்த முழுத் தமிழ் மக்களும் கிட்டத்தட்ட யாழ்ப்பாணத்திற்கு வெளியேற்றப்பட்டனர்.

1983 ஜூலை என்பது ஒரு சாதாரண இனக்கலவரத்திற்கும் மேலானது. அனைத்துக் குடிமக்களையும் சமமாகப் பாதுகாக்கும் அரசின் திறன் மற்றும் விருப்பத்தின் மீது ஒரு முழு சமூகத்திற்கு இருந்த நம்பிக்கையை அது முற்றிலுமாக உடைத்தது. தாம் இலங்கை அரசியல் அமைப்பிற்குச் சொந்தமானவர்கள் அல்லர் என்பதையும், தீவிரவாத சக்திகளின் கை ஓங்கும்போதெல்லாம் தாம் பாதுகாப்பற்றவர்களாகவே இருப்போம் என்பதையும் இது பல தமிழர்களுக்கு உறுதிப்படுத்தியது. இதன் விளைவுகள் உடனடி உயிரிழப்புகள் மற்றும் சொத்து இழப்புகளுக்கு அப்பாலும் நீடித்தன.

இது உள்நாட்டுப் போரை தீவிரப்படுத்தி, இலட்சக்கணக்கான மக்களை நாட்டை விட்டு வெளியேறச் செய்தது, மேலும் நான்கு தசாப்தங்களுக்கும் மேலாக அரசியல் மனோபாவங்களை வடிவமைக்கும் ஒரு ஆழமான பாதுகாப்பற்ற உணர்வை விதைத்தது. காலம் செல்லச் செல்ல, பெரும்பான்மை சமூகத்துடன் சேர்ந்து பெரும்பாலான அரசாங்கங்கள், அந்த பயங்கரமான காலகட்டத்தை ஒரு சாதாரண அசாதாரண நிகழ்வாகக் காட்டி அதன் தீவிரத்தைக் குறைக்க முயன்றுள்ளன.

பாதிக்கப்பட்டவர்களை அயலவர்கள் துணிச்சலுடன் பாதுகாத்தது, சில சமயங்களில் பெரும் தனிப்பட்ட ஆபத்திற்கு மத்தியிலும் அவர்களுக்கு உதவியது பற்றிய நினைவுகள் மீட்கப்படுகின்றன. இந்த தைரியமான செயல்கள் நினைவுகூரப்படவும் கௌரவிக்கப்படவும் தகுதியானவை. அவை இலங்கை சமூகத்தின் சிறந்த பக்கத்தைக் காட்டின. ஆயினும்கூட, அரசு அன்று தோற்றது, இன்றும் தோற்றுக் கொண்டிருக்கிறது என்ற பெரிய உண்மையை அவை மறைத்துவிட முடியாது. அக்கால கட்டத்தில் இழந்த உயிர்கள் மற்றும் சொத்துக்களுக்கான இழப்பீடு வழங்கும் விவகாரம், அப்பாவிப் பலிகடாக்களின் மனங்களில் இன்னும் ஆறாத வடுவாகவே நீடிக்கிறது.

நிறுவனங்களின் தோல்விக்கான பொறுப்பைத் தவிர்க்கும் அதே வேளை, தனிநபர்களின் கருணைச் செயல்களைக் கொண்டாடுவதன் மூலம் ஒரு அரசாங்கம் நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்ப முடியாது. குணப்படுத்துதலுக்கு இவ்விரண்டையும் ஒப்புக்கொள்வது அவசியமாகும். வரலாற்று அநீதிகளை அரசுகள் எவ்வாறு எதிர்கொண்டன என்பதற்கு பிற நாடுகள் பயனுள்ள உதாரணங்களை வழங்குகின்றன.

ஜெர்மனி ஒருபோதும் யூத பெரும் களப்பலியை குறைத்து மதிப்பிடவோ அல்லது அதை ஒரு துரதிர்ஷ்டவசமான நிகழ்வாக மட்டும் காட்டவோ முயன்றதில்லை. நினைவிடங்கள், அருங்காட்சியகங்கள் மற்றும் கல்வி ஆகியவை ஒவ்வொரு தலைமுறையும் நடந்த நிகழ்வின் கொடூரத்தையும், அது மீண்டும் நிகழாமல் தடுப்பதற்கான அரசின் பொறுப்பையும் புரிந்து கொள்வதை உறுதி செய்கின்றன. அந்தப் பயங்கரமான ஆண்டுகளின் வரலாற்றுத் தொகுப்புச் செய்திகளை பிரதான தொலைக்காட்சி அலைவரிசைகள் தொடர்ந்து ஒளிபரப்பி வருவதை கவனிக்கத்தக்கது. இதன் நோக்கம் நிரந்தரக் குற்ற உணர்வை உருவாக்குவது அல்ல, மாறாக நிரந்தர விழிப்புணர்வை ஏற்படுத்துவதாகும்.

சிறுபான்மையினர் கட்டமைக்கப்பட்ட அநீதியை எதிர்கொண்டுள்ள நிலையில், இனிவரும் காலத்தில் சமமாக நடத்துதல் மட்டுமே போதுமானதாக இருக்காது. நம்பிக்கையை மீண்டும் கட்டியெழுப்பத் தான் நீடித்த முயற்சியை மேற்கொள்ளத் தயாராக இருப்பதை அரசு தனது வார்த்தைகள், கொள்கைகள் மற்றும் நடவடிக்கைகள் மூலம் நிரூபிக்க வேண்டும். இது தென்னாப்பிரிக்காவில் இனவெறி ஆட்சிக்குப் பிந்தைய காலத்தில் காணப்பட்டது. அந்நாட்டின் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு சட்டத்தின் முன் சமம் என்று வெறுமனே பிரகடனப்படுத்த மட்டும் செய்யவில்லை. அது பாதிக்கப்பட்டவர்களின் துன்பங்களை பகிரங்கமாக ஒப்புக் கொண்டது, அவர்களின் சாட்சியங்களைக் கேட்டறிந்தது மற்றும் தேசிய அங்கீகாரத்தின் மூலம் அவர்களின் கண்ணியத்தை மீட்டெடுக்க முயன்றது.

அப்படியிருந்தும், தென்னாப்பிரிக்காவில் நல்லிணக்கம் என்பது இன்னமும் முழுமை பெறாத தொடர் முயற்சியாகவே உள்ளது.

கனடா தன் நாட்டின் பூர்வகுடி மக்களை நடத்திய விதத்திற்காக முறைப்படி மன்னிப்பு கோரியதுடன், குடியிருப்புப் பள்ளிகளில் பூர்வகுடிக் குழந்தைகள் சந்தித்த கொடுமைகளை ஆவணப்படுத்த உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு ஒன்றையும் நிறுவியது. நியூசிலாந்து ஒருபடி மேலே சென்று, மாவோரி சமூகங்களுடன் ஒப்பந்தங்களைப் பேசித் தீர்மானித்ததுடன், முடிந்த இடங்களில் நிலங்களை மீளளித்தது. மேலும், பாகுபாட்டைத் தடைசெய்வதற்கும் அப்பால் சென்று அவர்களின் கலாசார மற்றும் மொழி உரிமைகளைப் அங்கீகரித்துள்ளது. இந்த விடயத்தில் இலங்கை இன்னும் செய்ய வேண்டியவை நிறையவே உள்ளன. இருப்பினும் இங்கு பேரழிவுகள் மிகச் சமீபத்திய வரலாற்றுக் காலத்திலேயே நிகழ்ந்தன.

சிறுபான்மையினருக்கு எதிராக நிகழும் வன்முறைச் செயல்களும் ஏனைய சோகங்களும் மிகவும் வேதனையளிப்பவை, ஏனெனில் சிறுபான்மையினரால் பெரும்பாலும் தங்களைப் பாதுகாத்துக் கொள்ள முடிவதில்லை. அவர்கள் பாதிக்கப்படும்போது, அரசு அவர்களுக்குச் விசேட கவனத்தை அளிக்க வேண்டும். அவர்கள் எப்போதும் பாதுகாக்கப்படுவார்கள் என்பது அரசின் கொள்கையாக அவர்களுக்கு உறுதிப்படுத்தப்பட வேண்டும். இது சாதாரண அர்த்தத்திலான சலுகைக் கவனிப்பு அல்ல. இது மறுசீரமைப்பு சிகிச்சை ஆகும்.

சட்டங்கள் சமத்துவத்தை வாக்குறுதி அளிப்பதால் மட்டும் பயம் நீங்கிவிடாது. தம்மைப் பாதுகாப்பதில் சந்தேகம் கொண்ட தரப்பினரின் பாதுகாப்பிற்காக அரசு தீர்க்கமாகச் செயல்படும் என்பதை அனுபவம் தொடர்ச்சியாக நிரூபிக்கும் போது மட்டுமே பயம் நீங்கும். சிறுபான்மையினரின் அந்நியப்பட்ட உணர்வு மற்றும் புறக்கணிப்பு காரணமாக, அவர்களுக்கு 'மிகை ஈடுசெய்தல்" செய்ய வேண்டிய தேவை உள்ளது. இது கடந்த காலம் மற்றும் நிகழ்காலம் ஆகிய இரண்டு தொடர்பிலான கையாளுதல்களுக்கும் பொருந்தும்.

"மிகை ஈடுசெய்தல்" என்ற சொல் சிலருக்கு சங்கடத்தை ஏற்படுத்தலாம். இருப்பினும், பிளவுபட்ட சமூகங்களிலிருந்து உருவெடுக்கும் அரசாங்கங்கள், சிறுபான்மையினர் உண்மையிலேயே இந்த நாட்டைச் சேர்ந்தவர்கள் என்பதை அவர்களுக்கு உறுதிப்படுத்த பெரும்பாலும் தீவிரமாக இறங்கிச் செயல்பட வேண்டியுள்ளது. இது சிறுபான்மையினருக்கு பெரும்பான்மையினரை விட அதிக உரிமைகள் தகுதியானவை என்பதற்காக அல்ல. மாறாக, அவர்கள் பாதுகாப்பின்மையின் பெரும் சுமையைச் சுமப்பதே இதற்குக் காரணம். பெரும்பான்மையின மக்கள் பொதுவாக அரசின் நிறுவனங்கள் தங்களுக்குச் சொந்தமானவை என்றே கருதுகின்றனர்.

ஆனால், சிறுபான்மையினரால் அந்த அனுமானத்தை அவ்வளவு எளிதாகச் செய்ய முடிவதில்லை. தாங்கள் ஏதோ தயவின் பேரில் சகித்துக் கொள்ளப்படாமல், சமமான பங்குதாரர்களாக ஏற்றுக் கொள்ளப்படுகிறோம் என்பதற்கான அறிகுறிகளை அவர்கள் தொடர்ந்து தேடுகிறார்கள். அரசியலமைப்புச் சட்டத்தில் சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய இரண்டும் ஆட்சி மொழிகள் எனக் கூறப்பட்டிருந்தபோதிலும், வடக்கிலும் குறிப்பாகக் கிழக்கிலும் நிர்வாகக் காரியங்கள் பலவும் இன்னமும் சிங்கள மொழியிலேயே நடைபெறுகின்றன. இதனால் தமிழ் பேசுபவர்களிடையே மனக்குறைகள் அதிகரித்து வருகின்றன.

அரசாங்கம் வாக்குறுதிகளை நிறைவேற்றாமல் தவறவிடுவது சிறுபான்மையினருக்கு மட்டும் மட்டுப்பட்டதொன்றல்ல. ஒட்டுமொத்த மக்களுக்கும் அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றத் தவறிவிட்டதாக நாட்டின் பிரதான எதிர்க்கட்சியும் அரசாங்கத்தின் மீது குற்றம் சாட்டுகிறது. அந்த வகையில், நிறைவேற்றப்படாத வாக்குறுதிகள் என்பவை பெரும்பான்மைச் சமூகத்தினரும் சிறுபான்மைச் சமூகத்தினரும் எதிர்கொள்ளும் ஒரு பொதுவான குறையாகவே உள்ளது. ஆனால், இதில் ஒரு முக்கியமான வேறுபாடு இருக்கிறது. பெரும்பான்மையினருக்கு அளிக்கப்பட்ட வாக்குறுதி மீறப்படும்போது, அது ஏமாற்றத்தை மட்டுமே உருவாக்குகிறது. ஆனால், ஒரு சிறுபான்மையினருக்கு அளிக்கப்பட்ட வாக்குறுதி மீறப்படும்போது, அது வரலாற்று ரீதியான பயங்களை மீண்டும் உயிர்ப்பிப்பதோடு, நம்பிக்கையின்மையும் வெறுப்பும் கட்டியெழுப்பப்பட வழிவகுக்கிறது.

எனவே, இதன் உணர்வுபூர்வமானதும் அரசியல் ரீதியானதுமான விளைவுகள் மிக அதிகமானவை. அரசாங்கத் தலைவர்கள் தங்களை அணுக முடியாதவாறு நடப்பதாகவும், தங்கள் தொலைபேசி அழைப்புகளுக்குக்கூட பதிலளிப்பதில்லை என்றும் தமிழ் மக்களால் தெரிவுசெய்யப்பட்ட தமிழ் தலைவர்கள் வேதனையுடன் கூறுகின்றனர். இது திட்டமிடப்பட்ட பாகுபாட்டைப் பிரதிபலிக்காமல் இருக்கலாம் அரசாங்கத் தலைவர்கள் அனைவருக்குமே அணுக முடியாதவர்களாகக்கூட இருக்கலாம். ஆனால், ஆழமாகப் பிளவுபட்டுள்ள சமூகங்களில் மக்களின் "எண்ணங்கள் மற்றும் பார்வைகளே" முக்கிய பங்கு வகிக்கின்றன.

நல்லிணக்கம் என்பது ஒரு தேசிய இலக்காக இருக்க வேண்டும் என்றால், சிறுபான்மையினரைப் புறக்கணிக்கப்பட்டதாகவோ அல்லது அலட்சியப்படுத்தப்பட்டதாகவோ உணரவைக்கும் வகையில் அரசாங்கங்கள் நடந்துகொள்ளக் கூடாது. பதிலளிக்கப்படாத ஒவ்வொரு தொலைபேசி அழைப்பும், ஒத்திவைக்கப்படும் ஒவ்வொரு சந்திப்பும், நிறைவேற்றப்படாத ஒவ்வொரு வாக்குறுதியும், சிறுபான்மையினரின் பிரச்சினைகள் மீண்டும் ஒரு முறை தேசிய நிகழ்ச்சி நிரலின் அடிமட்டத்திற்குத் தள்ளப்பட்டுவிட்டன என்ற நம்பிக்கையையே வலுப்படுத்துகின்றன். இதே கொள்கை பாதுகாப்புத் துறையின் செயல்பாட்டிற்கும் பொருந்தும்.

பெரும்பான்மையினரால் நியாயமானதாகவும் அவசியமானதாகவும் கருதப்படும் கண்காணிப்பு போன்ற நடவடிக்கைகள், பல தசாப்தகால கண்காணிப்பு, இராணுவ ஆக்கிரமிப்பு மற்றும் வன்முறைகளை அனுபவித்த சமூகங்களால் முற்றிலும் வேறுபட்ட கோணத்தில் பார்க்கப்படலாம். இதன்பொருள் தேசிய பாதுகாப்பில் சமரசம் செய்துகொள்வது என்பதல்ல. மாறாக, பாதுகாப்பும் நல்லிணக்கமும் ஒன்றிணைந்து பயணிக்க வேண்டும் என்பதை உணர்வதாகும். ஒரு தொழில்முறை பாதுகாப்புத் துறை, சிறுபான்மை சமூகங்களுடனான தனது தொடர்புகளில் உணர்திறனையும் கட்டுப்பாட்டையும் வெளிப்படுத்தும்போது அது தேசிய ஒற்றுமையை வலுப்படுத்துகிறது.

1983 ஜூலையின் கசப்பான பாடம் என்னவென்றால், சிறுபான்மையினர் அரசு மீதான நம்பிக்கையை இழக்கும் போது, அதன் விளைவுகள் பல தலைமுறைகளுக்கு நீடிக்கும்


(14ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# பத்தாம் திகதி சந்திப்பில் ஆறு தமிழ்கட்சிகளின் கூட்டு

## அநுரவிடம் எதிர்பார்ப்பது என்ன?

பனங்காட்டான்



**ஈஸ்டர் குண்டுத்தாக்குதல் வழக்கில் அப்போதைய பொலிஸ்மா அதிபர் பூஜித் ஜெயசுந்தர, பாதுகாப்புச் செயலாளர் ஹேமசிறிபெர்னான்டோ ஆகியோருக்கு மரணதண்டனை வழங்கப்பட்டுள்ளது. அதிரடியான இந்தத் தீர்ப்பு ராஜபக்சக்களை மட்டுமன்றி முன்னைய ஆட்சியாளர்கள் பலரது அடிவயிற்றை கலக்கியுள்ளது. இந்த நெருக்கடியான நிலைக்குள்ளும் ஜனாதிபதி அநுரவை பத்தாம் திகதி சந்திக்கவிருக்கும் ஆறு தமிழ் அரசியல் கட்சிகளின் கூட்டு அவரிடமிருந்து எதனைக் கேட்கப்போகிறது. நாட்டு நிலைமை அதற்கு சாதகமாக அமையுமா?**

மிகவும் ஆரவாரமாக அறிக்கைகள், சந்திப்புகள் மூலம் மக்கள் மத்தியில் பேசப்பட்ட இரண்டுஅரசியல் கூட்டுகள் பற்றிய மெல்லிய முனகல்கள் அங்குமிங்கும் கேட்கின்றது.

கடந்தவாரம் குறிப்பிட்டதுபோல மூன்று கட்சிகளின் கூட்டு நாட்டை ஆளும் இனத்துடன் சம்பந்தப்பட்டது. இவர்களே எப்பொழுதும் ஆளும் கதிரையை இலக்கு வைப்பவர்கள். மற்றைய ஆறு கட்சிகளின் கூட்டு ஆளப்படும் இனங்களுடையது. இவர்களில் எவராவது அவ்வப்போது ஆட்சியில் பங்காளராகலாமே தவிரஅந்தக் கதிரையில் நிரந்தரமாகமுடியாது.

பெரும்பான்மை இனம் எதிரணியில் மூன்று கட்சிகளாக இருக்கையில், சிறுபான்மை இனம் தங்களுக்குள் பிளவுண்டு இஸ்லாமியர்கள், மலையக பிரதிநிதிகள் என ஒவ்வொன்றுக்கும் இரு அணிகளாக இயங்குவதிலிருந்து தமிழ்த்தேசியவாதிகளின் ஒற்றுமை நன்றாகத் தெரிகிறது. இவர்களுடன் இணையாத மேலும் சில சிறுபான்மை இனங்களின் கட்சிகள் நடப்பவைகளை அவதானித்துக்கொண்டு இருப்பதையும் இங்கு குறிப்பிடவேண்டும்.

ரணிலுடனும், சஜித்துடனும் பொதுஜன பெரமுன இணைந்துவிட்டதாக பரவலாக சொல்லப்படுவதை அதன் முக்கியஸ்தர்கள் விரும்பவில்லை. இதனால் தங்களுடைய வாக்கு வங்கி பாதிக்கப்படலாமென கருதும் பெரமுனவின் நாமல் ராஜபக்ச, செயலாளர் சாகரகாரியவசம் ஆகியோர் தொடர்ந்து அறிக்கைகள் வாயிலாக தங்கள் நிலைப்பாட்டை வெளிப்படுத்தி வருகின்றனர்.வரப்போகும் தேர்தல்களில் பொதுஜன பெரமுன எவருடனும் கூட்டுச் சேராது எனவும், தனித்தே போட்டியிடும் எனவும் இவர்களின் அறிவிப்புதெரிவிக்கிறது.

இதனை இவர்கள் கூறித்தான் தெரிய வேண்டுமென்பதில்லை. ராஜபக்சக்களின் ஆட்சி 30-40 ஆண்டுகளுக்கு தொடர வேண்டுமென்பதற்காகவே பெரமுனவை ஆரம்பித்த ராஜபக்சக்கள் அறகலவை சற்றும்கூட எதிர்பார்த்திருக்கவில்லை. தமிழர் தரப்புகட்சிகளின் கூட்டுபற்றி எவரும் எதுவும் சொல்லத் தேவையில்லை. எத்தனை கட்சிகள், எத்தனைஅணிகள் இணைந்தாலும் - வீடுதான் இங்குதலை. அது எடுக்கும் முடிவே நடைமுறைக்கு வரும். எவராவது முரண்பட்டால் அவர்கள் தான் வெளியேற வற்புறுத்தப்படுவர். அதனால் ஏற்படும் சாதகபாதகங்கள் பற்றி வீடுக்குள் இருப்பவர்களுக்கு எந்த அக்கறையுமில்லை.

கடந்த 28ம் திகதி இடம்பெற்ற ஒரு நிகழ்வு, அதுசிறியதாக இருந்தாலும் ஆழ்ந்த கவனிப்புக்குரியது. சாவகச்சேரி நகரசபையின் உபதவிசாளர் தெரிவின் போது இது பகிரங்கமாகவே இடம்பெற்றது. முன்னைய உபதவிசாளர் எதற்காக பதவிநீக்கப்பட்டார் என்பதெல்லாம் இங்கு தேவையில்லை. இந்தப் பதவியை நிரப்புவதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கையின்போது இடம்பெற்ற வெட்டுக்கொத்தே கவனிப்புக்குரியது.

கடந்த 28ம் திகதி புதிய உபதவிசாளர் தெரிவுக்கான கூட்டம் இடம்பெற்றது. தற்போதுள்ள 16 உறுப்பினர்களில் தேசிய மக்கள் சக்தியின் இரண்டு உறுப்பினர்களும் எப்பக்கமும் சாராது ஒதுங்கிக் கொண்டனர். மிகுதி 14 பேருக்கு மட்டுமே வாக்குரிமை இருந்தது. தமிழரசுக் கட்சி வேட்பாளரும், தமிழரசுடன் இணைந்து செயற்படும் ஆறு தமிழ்க் கட்சிகளில் ஒன்றான ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியும் நேரடியாக இப்பதவிக்கு மோதின. தமிழரசுக் கட்சிக்கு ஓர் அரசியல் பாடம் புகட்டக்கிடைத்த சந்தர்ப்பத்தைத வறவிட தமிழ்த் தேசியமக்கள் முன்னணி விரும்பவில்லை. ஜனநாயகதமிழ்த் தேசிய கூட்டணியின் வேட்பாளருக்கு தங்களின் ஆறு வாக்குகளையும் வழங்கிஅவரது ஒற்றைப் பலத்தை ஏழாக்கியது மக்கள் முன்னணி.

தமிழரசுக் கட்சி வேட்பாளருக்கு தங்களது ஒற்றைவாக்கை வழங்கிய டக்ளஸ் தேவானந்தாவின் ஈழமக்கள் ஜனநாயக கட்சி, தமிழரசின் எண்ணிக்கையையும் ஏழாக்கியது. இருதரப்புக்கும் சமநிலை கிடைத்ததால் திருவுளச் சீட்டு மூலம் தெரிவு இடம்பெற்றபோது தமிழ்த் தேசியமக்கள் முன்னணி ஆதரவு வழங்கியரெலோ, புளொட், ஈ.பி.ஆர்.எல்.எவ். இணைந்த ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியின் உறுப்பினர் வெற்றிபெற்றார். இந்த வெற்றிபற்றி அவருக்கு ஆதரவு வழங்கிய தமிழ்த் தேசியமக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கருத்துத் தெரிவிக்கை யில் இதனை இயற்கை நீதி என்று தெரிவித்திருந்தார்.

இந்த அரசியல் நிகழ்வை விலாவாரி யாகப் பார்ப்பதற்கு நியாயமான காரணம் உண்டு. ஆறு தமிழ்க் கட்சிகளின் கூட்டிலுள்ள இரண்டு தமிழ்த் தேசிய அணிகள் தமிழரசுக் கட்சியும், ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியும் மட்டுமே. இவர்கள் பலதடவை கூடிக் கலந்துபேசியும் இவர்களுடைய உறவு சட்டப்படியல்லாத இணைந்து வாழ்வது போலவே தொடர்கிறது. அதனால்தான் சாவகச்சேரி நகரசபை உபதவிசாளர் தெரிவில் ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியிடம் தமிழரசுக் கட்சி தோல்வியடைய நேர்ந்தது.

உபதவிசாளர் தெரிவு விடயத்தில் ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியுடன் தமிழரசுக் கட்சி இணைந்து செயற்பட விரும்பிய போதிலும், அதற்கான முன்னெடுப்பை தாங்கள் மேற்கொள்வதற்கு முன்னர் அவர்கள் கஜேந்திரகுமாரின் தமிழ்த் தேசியமக்கள் முன்னணியுடன் ஓர் இணக்கப்பாட்டுக்கு வந்துவிட்டதால் விடயம் கை நழுவிப் போய்விட்டதென தமிழரசின் முக்கியஸ்தர் ஒருவர் மிகுந்த வேதனையோடு இப்பத்தி எழுத்தாளரிடம் தெரிவித்தார்.

தமிழரசுக் கட்சியின் பதில் தலைவரை விடபதில் செயலாளரின் ஆதிக்கம் அதிகமானதாக இருப்பதால் சாவகச்சேரி உபதவிசாளர் தெரிவில் சாவகச்சேரியைச் சேர்ந்த செல்லப்பிள்ளை ஒருவரே இத் தோல்விக்கான முழுப்பொறுப்பையும் எடுக்க வேண்டுமென்பது இவரது அபிப்பிராயமாக இருந்தது. இதற்கும் அப்பால் குறிப்பிடவேண்டியதாக இருப்பது கடந்த உள்ளாட்சித் தேர்தலின்போதும் இதே வகையான இழுபறிகளே இடம் பெற்றதும், இறுதிவரை ஒன்றுபட்டு இவர்கள் தேர்தலை சந்திக்கமுடியாமல் போனதும் பழைய சரித்திரமல்ல.

தமிழரசுக் கட்சியின் எதிர்காலம் நீதிமன்றத்தின் கைகளில் இருப்பது பற்றியும், இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தமிழரசுக் கட்சிக்குள் புதியதொரு கட்சி உருவாகிவருவது பற்றியும், ஏற்கனவே பதிவிலுள்ள ஓர் அரசியல் கட்சியின் பெயர் இதற்காக கொள்முதல் செய்யப்பட்டுள்ளது பற்றியும்,கடந்த ஜனாதிபதிதேர்தலில் தமிழ் பொதுவேட்பாளரை ஆதரித்தவர்களின் பலமே இதற்கான அடித்தளம் என்றும், கட்சியின் மூன்று அல்லது நான்கு எம்.பிக்களின் ஆதரவு புதியகட்சி அமைப்புக்கு இருப்பது பற்றியும் எதுவும் கூற தமிழரசின் பிரமுகர்கள் எவரும் தயாராக இல்லை. ஆனால், இதுபற்றி மார்ட்டின் வீதியிலுள்ள கட்சிப் பிரமுகர்கள் நன்கறிந்தவர்களாக உள்ளனர்.

மூக்கு இருக்கும்வரை சளிபோகாது என்பது போன்ற நிலைமையே சுமந்திரன் - சிறீதரன் பிணக்கை தீர்க்காத வரைக்கும் கட்சியிலும் தொடருமென காணப்படுகிறது. ஆனால் இருவரது பிணக்கையும் தீர்க்கும் வல்லமை கட்சியில் எவருக்கும் இல்லை. இதற்குச் சாதகமாக கட்சி தொடர்பான வழக்கின் தீர்ப்புமீண்டும் ஒத்திவைக்கப்பட்டுள்ளது. ஆரம்பத்தில் தாக்கலான வழக்கில் மேலும் தங்களை இணைத்துக் கொள்ளபலர் மனுத்தாக்கல் செய்ததால் காலநீடிப்பு தொடர்ந்து கொண்டேயிருக்கிறது. அதுவரை கட்சிக்குள் எல்லாமே பதில் பதவிகளாகவே இருக்கப் போகிறது. இந்த நிலைப்பாட்டை இப்போதைக்கு கட்சிப் பிரமுகர்கள் ஒவ்வொருவரும் தங்களுக்கு சாதகமாக்கியவாறு நகர்ந்து கொண்டிருக்கின்றனர்.

இவ்வாறான நெருக்கடிகளுக்கு மத்தியிலும் ஜனாதிபதி அநுரகுமரவை ஆறு கட்சிகளின் கூட்டு இந்தமாதம் 10ம் திகதி சந்திப்பதற்கு ஏற்பாடாகியுள்ளது. கடந்த மார்ச் மாதம் தமிழரசுக் கட்சியினர் அநுரகுமரவை சந்தித்து உரையாடினர். இது தொடர்பாக இதுவரை அநுரகுமரவிடமிருந்து தமிழரசுக் கட்சியினருக்கு எந்தப் பதிலும் வரவில்லையென சொல்லப்படுகிறது.

அநுரகுமர நல்லவர், வல்லவர், வசீகரமானவர், ஒழுக்கமாகப் பேசக்கூடியவர். விடயங்களை விளக்கமாக எடுத்துக்கூறி நம்பிக்கை ஊட்டுவதில் கைதேர்ந்தவர். தமிழ் அரசியல்வாதிகள் சிலருடன் நேரடி தொடர்பில் உள்ளவர் என்றும் சொல்லப்படுகிறது. ஆனால் தமிழர் தரப்பு முன்வைத்திருக்கும் மூன்று கோரிக்கைகளையும் அவரால் நிறைவேற்ற முடியுமோ தெரியாது. தேசியமக்கள் சக்தியின் வசிட்டராக இருப்பவர் ஜே.வி.பி.யின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா என்பதை புரிந்துகொண்டால் ஆட்சியின் போக்கை அறிந்துகொள்வதில் கஸ்டமிருக்காது.

நீதிமன்ற வழக்குகளிலிருந்து தப்புவதற்காகவே எதிரணிகள் ஒன்றிணைகின்றன என்று அவர் தெரிவித்த கருத்து முழுமையாக மக்களிடம் சென்றடைவதற்கு முன்னரே, முழுநாட்டையும் மட்டுமன்றி சர்வதேசத்தையும் அதிர்ச்சியுடன் இலங்கையின் பக்கம் திருப்பியுள்ளது ஈஸ்டர் குண்டுத்தாக்குதலில் ட்ரயல் அட் பார் வழக்கின் தீர்ப்பு. இத்தாக்குதல் இடம் பெற்றபோது பொலிஸ்மா அதிபராக இருந்த பூஜித் ஜெயசுந்தரவுக்கும் பாதுகாப்பு செயலாளராகவிருந்த ஹேமசிறி பெர்னான்டோவுக்கும் மரண தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

இலங்கை அரசியலை புரட்டிப் போட்டுள்ள ஒரு தீர்ப்பு இது. ராஜபக்சக்களின் எதிர்காலம், அவர்களது கூட்டாளிகளின் எதிர்காலம் இந்தத் தீர்ப்பிலேயே தங்கியுள்ளதாக பலரும் சுட்டிக்காட்டியிருந்தனர். ஈஸ்டர் தாக்குதல் காலத்தில் ஜனாதிபதியாகவிருந்த மைத்திரிபால சிறிசேன இந்தத் தீர்ப்பை வரவேற்றுள்ளார். மற்றைய அனைவரும் என்ன காரணத்தினாலோ(?) இதுவரை மௌனிகளாக வேகாணப்படுகின்றனர்.

இலங்கை அரசு நீதித்துறை ஊடாக மேற்கொள்ளப்போகும் அடுத்த நகர்வுகள் என்ன? இதுவே இன்று ஒவ்வொருவர் முன்னாலும் எழுந்துள்ள முக்கிய கேள்வி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# தமிழ் இசட் தலைமுறையினர் (Gen- Z) எங்கே?





-யதீந்திரா

அண்மையில் இந்தியாவில் இடம்பெற்ற கரப்பான் பூச்சி இளைஞர்களின் நடவடிக்கைகள் உலகின் கவனத்தைப் பெற்றிருந்தது. அவர்களின் நடவடிக்கையால் மோடி தலைமையிலான பாரதிய ஜனதாக் கட்சி, ஒரு படி கீழே இறங்கிவந்தது. கடந்த பன்னிரெண்டு வருடங்களில் பாரதிய ஜனதா கட்சி இப்படி இறங்கி வந்தது இதுதான் முதல் தடவை. பங்களாதேஸின் பலம்பொருந்திய ஷேக் ஹசினாவின் ஆட்சியை கவிழ்த்தமை, நேபாளத்தில் ஆட்சியை கைப்பற்றியமை, இலங்கையின் ஆட்சி மாற்றம் - இவையெல்லாம் இசட் தலைமுறையினரின் அரசியல் பிரவேசம் தொடர்பில் சிலாகித்துக் கூறப்படும் விடயங்கள்.

இப்படியான மக்கள் கிளர்ச்சி ஒன்று இந்தியாவிலும் சாத்தியமாகுமா என்னும் கேள்விகளை, சில சர்வதேச ஊடகங்கள் முன்வைத்திருந்தன. இதனை இந்தியாவின் இசட் கிளர்சி என்றே சர்வதேச ஊடங்கள் வர்ணித்தன. இத்துத்வாவின் வீழ்சியை காண ஆசைப்படும் பலரிடம் இப்படியான தாகம் தெரிந்தது. அதுவே சர்தேச ஊடகங்களில் பிரதிபலித்தது. ஆனால் இந்தியா, இலங்கையோ, நேபாளோ அல்ல - அது இந்தியா. நூற்றி ஐம்பது கோடி மக்களைக் கொண்ட நாடு. ஒரு மானிலம் இன்னொரு மாநிலத்திற்காக குரல் கொடுக்காத அரசியல் சூழல். அப்படியான தேசத்தில் மாணவர் கிளர்ச்சிகள் மூலம் ஆட்சியை கவிழ்க்க முடியுமா? இப்படியான யதார்த்தம் இருந்த போதிலும் கூட, மோடி அரசாங்கம் சற்று கீழிறங்கி, மாணவர்களை கையாள முற்பட்டது. மாணவர்களின் கோரிக்கையை ஏற்றுக் கொண்டு, அவர்களுக்கு ஆதரவான அலையை கீழிறக்கியது. இந்தியாவிற்கு எதிரான சக்திகள் இதனை பயன்படுத்திவிடக் கூடாது என்பதிலேயே இந்திய அரசு கவனம் செலுத்தியது.

இலங்கையிலும், கோட்டபாய ராஜபக்ஷவின் பலமான ஆட்சியை மக்கள் கிளர்ச்சியே வீழ்த்தியது. எந்த சிங்கள மக்கள் - முக்கியமாக சிங்களத் தேசிய மனோநிலை கொண்டிருந்த, புலிகளின் தோல்வியை கொண்டாடிய, மத்தியதரவர்க்கமே இறுதியில், ராஜபக்ஷக்களின் குடும்ப அதிகாரத்தையும் சரித்தது. ஆனால் இவ்வாறான கிளர்சிகள் அரிதாகவே நிகழும். இவற்றை சாத்தியப்படுத்துவதில் பல்வேறு காரணிகள் செல்வாக்குச் செலுத்துகின்றன. அத்துடன், இவ்வாறான கிளர்ச்சிகளுக்கு பின்னால் வெளித்தரப்புக்களின் தலையீடுகள் இருக்கின்றன. அவை தொடர்பில் நம்மால் துல்லியமாக விவாதிக்க முடியாவிட்டாலும் கூட, அவற்றுக்கான வாய்ப்பு அதிகம்.

இலங்கையின் கிளர்ச்சிக்கு பின்னால் அமெரிக்க உளவுத் துறை இருந்ததாகவே - கோட்டபாய நம்பியதாக, சில சிங்கள ஆய்வாளர்கள் எழுதியிருக்கின்றனர். அமெரிக்காவுக்கு அப்படி என்ன ஆர்வம் இருந்தது. அது உண்மைதானா என்னும் கேள்விகளுக்கு பதில் இல்லை ஆனால் ஒரு கிளர்ச்சிக்கான சூழல், உள்நாட்டில் தான் கருவுறும், அந்தக் கருவை பேணிப் பாதுகாத்து, அதற்கு வடிவம் கொடுப்பதற்கு ஆதரவுகள் தேவை என்பது மறுக்க முடியாத உண்மைதான். ஏனெனில் இதற்கு உலகில் பல உதாரணங்கள் உண்டு.

இந்தப் பின்புலத்தில் நோக்கினால், அறகலய என்னும் பெயரில் ஒரு மக்கள் திரட்சி திடிரென்று வந்துவிடவில்லை. சிலரால் ஆரம்பிக்கப்பட்டு, பின்னர் படிப்படியாகப் படர்ந்து - இறுதியில் ஒரு பெரும் திரட்சியாக வடிவம் பெற்றது. இது ஏனைய தெற்காசிய நாடுகளின் கிளர்சிக்கு உந்துசக்தியாகவும் மாறியது. ஆட்சி மாற்றங்களை ஏற்படுத்தும் ஒரு வழிமுறை, வெளித்தரப்புக்களின் ஒரு உக்தியாக இருந்து கொண்டுதான் இருக்கின்றது. ஒரு ஆட்சியாளரை கையாள முடியாமல் போகும் போது, அடுத்தது என்ன? ஆட்சி மாற்றம்தான் என்னும் நிலைமை இப்போதும் ஒரு புவிசார் அரசியல் உக்தியாகவே இருக்கின்றது.

இந்த இடத்தில் நான் விவாதிக்க முற்படும் விடயம் வேறு. அறகலய கிளர்ச்சி இடம்பெற்றபோது, தமிழர் பக்கத்தில் அது பெரியளவில் அரசியல் அதிர்வுகளை ஏற்படுத்தவில்லை. குறிப்பாக தமிழ் இளையோர்கள் மத்தியில் எவ்வித அரசியல் அதிர்வுகளையும் ஏற்படுத்தவில்லை. அது தென்னிலங்கையின் விடயம் என்றவாறான புரிதலே மேலோங்கியிருந்தது. கொழும்பிலுள்ள சிலர் அதில் பங்கு கொண்டாலும் கூட, அவர்களின் ஈடுபாடு வடக்கு-கிழக்கில் அரசியல் அதிர்வுகளை ஏற்படுத்தவில்லை.

யுத்தம் முடிவுற்று 17 ஆண்டுகளாகி விட்டது. இப்போதும் வடக்கு கிழக்கின் தமிழர் அரசியலில் இளையோரின் ஈடுபாடு என்பது குறிப்பிட்டுச் சொல்லக் கூடிய நிலையில் இல்லை. ஆகக் குறைந்தது அரசியல் தொடர்பில் ஆர்வமுள்ள இளைஞர்களை காண்பதே அரிதானது. தேர்தல் காலத்தில் மழைக் காலத்து புற்றீசல்கள் போன்று முகம் காட்டுபவர்கள், தேர்தலின் பின்னர் காணாமல் போய்விடுகின்றனர். தேர்தல் காலத்தில் இளைஞர்களின் பெறுமதி என்பது, கட்சிகளின் வேட்பாளர்களுக்கு சுவரொட்டி ஒட்டுவது, கட்சிகளின் கூட்டத்திற்கு ஆட்கள் சேர்ப்பது என்பதாகவே சுருங்கியிருக்கின்றது. பெடியளுக்கு “தண்ணி” வாங்கிக் கொடுத்தால், அவங்கள் இழுபடுவாங்கள் என்னும் அடிப்படையில்தான், தமிழ் இளைஞர்களை கட்சிகள் புரிந்து வைத்திருக்கின்றன. தேர்தல் காலத்தில் ஒரு குறிப்பிட்ட இளைஞர்கள் கூட்டம் அப்படித்தான் இருக்கின்றது.

அண்மையில் யாழ்ப்பாணத்தில் ஒரு பாடசாலை வாயிலில் நின்று, சுமந்திரனை பிரதம விருந்தினராக அழைக்க வேண்டாம் என்று, இளைஞர்கள் சிலர் சத்தமிட்டுக் கொண்டிருந்தனர். அரசியலை சில தனிநபர்கள் மீதான காழ்ப்புணர்வாகவும் எதிர்ப்பாகவும் பார்க்கும் போக்குத்தான் பின்-யுத்த தமிழ்த் தேசியமாக கற்பிக்கப்படுகின்றது. அப்படிப் புரிந்து கொள்ளுமாறுதான், தமிழ் அரசியல்வாதிகளின் போதனைகளும் இருக்கின்றது. ஆனால் இந்த அரசியல் இளையோருக்கு தேவையில்லாத அரசியல். இளையோர்கள், அரசியலை புதிதாக அணுக வேண்டியவர்கள். புதிய கோணத்தில் சிந்திக்க வேண்டியவர்கள். முன்னோர்களின் காழ்ப்புணர்வை, வெறுப்பு வாதங்களை சுமக்க வேண்டிய எந்த அவசியமும் இளையோருக்கு இல்லை. செல்வநாயகம் சொன்னார், பிரபாகரன் கூறினார் - இவைகள் எல்லாம் இளையோருக்கும் தேவையில்லை. அன்று கூறப்பட்டவற்றில் எது இன்றைக்குத் தேவையானதோ, அவற்றை எடுத்துக் கொள்வதில் தவறில்லை - ஒரு வேளை ஒன்றுமே தேவையில்லை என்றால் புதிதாக ஒன்றைச் சிந்திக்க வேண்டியதே, ஜென்சிகளுக்கான அரசியல். முன்னைய வரலாறு கற்றலுக்கான ஒன்று மட்டும் தான்.

ஒவ்வொரு முள்ளிவாய்க்காலின் போதும் உணர்ச்சி வசப்படுவதற்கும், தலையில் பட்டிகளை கட்டிக் கொண்டு மோட்டார் பவனியில் ஈடுபடுவதற்கும் அப்பால், தமிழ் ஜென்சிகளின் அரசியல் புரிதல் என்ன? - இப்படிக் கேள்வி எழுப்பினால் பதில் கவலைக்குரியதாகவே இருக்கும். உண்மையில் தமிழ் ஜென்சிகளை நாசப்படுத்தியதில், ஒரு சில தமிழ் புலம்பெயர் குழுக்களின் தலையீடுகளுக்கு முக்கிய பங்குண்டு. அரசியலை மலினமாக புரிந்து கொள்ளுவதற்கான செயற்பாடுகளையே, சில குழுக்கள் செய்து வருகின்றன. அரசியலை அதன் ஆழ அகலத்தில் புரிந்து கொள்ளும் அரசியல் கல்வியூட்டலுக்கான களம் வடக்கு கிழக்கில் எங்குமே இல்லை. கட்சிகளும் அதில் கவனம் செலுத்துவதில்லை - கட்சிகளுக்கு வெளியிலும் எவரும் அவ்வாறு சிந்திக்கவில்லை. இதன் விளைவு, அரசியல் ரீதியில் தமிழ் ஜென்சிகள் என்னும் வகைப்படுத்தலுக்கான சூழல் வடக்கு கிழக்கில் இல்லை.

பின் - யுத்த அரசியல் உரையாடல்கள் மிகவும் மேலோட்டமானவையாகயே இருக்கின்றது. இவற்றில் தொண்ணூறு விகிதமான அரசியல் உரையாடல்கள், யாழ் குடநாட்டுக் கதைகளாகவே சுருக்கியிருக்கின்றது. மாற்றுக் கருத்துள்ளவர்கள் அனைவரும் ஒரே மேடையில் அமர்ந்து விவாதிக்கும் அரசியல் அரங்குகளை காண முடியவில்லை. 2009 இற்கு பின்னரான அரசியல் உரையாடல்கள் அடிப்படையில் அவ்வாறானதாகவே இருந்திருக்க வேண்டும். ஆனால் யுத்த காலத்தில் கடைப்பிடித்தது போன்ற சுயதணிக்கை அரசியல்தான் இப்போதும் தொடர்கிறது.

தமிழ்த் தேசியக் கட்சிகளாக தங்களை அடையாளப்படுத்துவர்களுக்கு வரையறைகள் உண்டு. அவர்களிடம் இவற்றை எதிர்பார்க்க முடியாது என்பது உண்மைதான். அதனால்தான் நான் தொடர்ந்தும் வாதிட்டு வருகின்றேன், தற்போதுள்ள கட்சிகளுக்கு வெளியில் இந்த உரையாடல் இடம்பெற வேண்டும். பாரம்பரிய கட்சிக் கதைகளை உடைத்தெறியும் புதிய தலைமுறையொன்று வெளியில் வரவேண்டும். அவை அனைத்தின் மீதும் கேள்விகளை முன்வைக்க வேண்டும். கட்சிகள் மீதும் கேள்விகளை தொடுக்க வேண்டும், கருத்துருவாக்கத்தின் மீதும் கேள்விகளை தொடுக்க வேண்டும்.


இன்றைய உலக அரசியல் வேகமாக மாறிவருகின்றது. இதுவரையில் உலகம் இயங்கியது போன்ற நிலையில் இப்போதில்லை. அமெரிக்காவின் தற்போதைய அணுகுமுறை உலக அரசியலில் பெரும் அதிர்வுகளை ஏற்படுத்தியிருக்கின்றது. கனடிய பிரதமரின் வார்த்தையில் கூறுவதானால், இது ஒரு முறிவு. ஏனெனில், யார் நண்பர், எதுவரை நண்பர் என்று தெரியாதவொரு உலக அரசியல் சூழலே காணப்படுகின்றது. உலகை வழிநடத்தும் ஒரு தலைமை இப்போதில்லை என்னும் நிலைமை காணப்படுவதாகவே, நிபுணர்கள் விவாதித்து வருகின்றனர். மனித உரிமை சார்ந்து, ஜனநாயகம் சார்ந்து நீங்கள் முறையிட ஒரு உலகத் தலைமை இப்போதில்லை. இந்த நிலையில் வழமையான தமிழ் அரசியல் உரையாடல்கள் மிகவும் பலவீனமான நிலையை எட்டிவிட்டது. அடுத்த கட்டம் தொடர்பில் கற்பனை கூடச் செய்ய முடியாதவொரு அரசியல் சூழலே நமக்கு முன்னால் தெரிகின்றது. இவ்வாறானதொரு அரசியல் சூழலில் புதிய அரசியல் தலைமுறை ஒன்றிற்கான தேவை பெரிதாக இருக்கின்றது. அது அவசரமானதும் கூட. ஆனால் பூனைக்கு யார் மணி கட்டுவது என்பதுதான் பிரச்னை. தெற்காசியாவின் இசட் தலைமுறையினரின் அலை, தமிழ்த் தேசிய ஜனநாயக அரசியலில் தாக்கங் களை ஏற்படுத்தும் அதியசம் நிகழாதா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# குற்றமும் தண்டனையும்



நிலாந்தன்



ஜூலை 83 நடந்து 43 ஆண்டுகளாகிவிட்டன. இன்றுவரை எந்த ஒரு சிங்களத் தலைவரும் அதற்காக மன்னிப்புக் கேட்கவில்லை. 1981இல் யாழ்.நூலகம் எரிக்கப்பட்டது. அது நடந்து கிட்டத்தட்ட 35 ஆண்டுகளுக்குப் பின்பு, 2016 டிசம்பரில் ரணில் விக்கிரமசிங்க அதற்காக நாடாளுமன்றத்தில் மன்னிப்புக் கேட்டிருந்தார்.கடந்த சுமார் ஒரு நூற்றாண்டு கால இன முரண்பாட்டின் வரலாற்றில் ஒரு சிங்களத் தலைவர் அப்படி மன்னிப்புக் கேட்டது அது தான் முதல் தடவை. ரணில் மீது ஆயிரம் விமர்சனங்கள் இருக்கலாம். ஆனால் அவர் மன்னிப்பு கேட்டார். அவருக்கு முன்னரும், பின்னரும் யாரும் இதுவரை மன்னிப்புக் கேட்கவில்லை.

ஜூலை 83க்கு ரணிலும் உட்பட அவர் அங்கம் வகித்த ஜெயவர்த்தனாவின் அரசாங்கம்தான் பொறுப்பு என்று இப்போதுள்ள அரசாங்கம் கூறுகிறது. அண்மையில் நாடாளுமன்றத்தில் நீதி அமைச்சர் அதைத் தெரிவித்தார். அதுமட்டுமல்ல, அது ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தின் "அரச பயங்கரவாதம்" என்றும் அவர் சொன்னார். நாட்டின் நீதி அமைச்சர் ஒருவர் முன்னைய அரசாங்கத்தின் ஒரு நடவடிக்கையை அரச பயங்கரவாதம் என்று அழைத்தமை இதுதான் முதல் தடவை. ஆனாலும் தேசியமக்கள் சக்தி அரசாங்கமானது 83 ஜூலைக்காக மன்னிப்பு கேட்கவில்லை. ஏன் கேட்கவில்லை? அவர்கள் கூறுவார்கள், அது நாங்கள் செய்யவில்லை, முன்னம் இருந்த யு.என்.பிஅரசாங்கந்தான் செய்தது என்று.

இந்தவிடயத்தில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு கூட்டுப் பொறுப்பு உண்டு. அவரும் கூட ஜூலை 83க்காக இன்றுவரை மன்னிப்புக் கேட்கவில்லை. கேட்கக் கூடிய பதவியில் அவர் இருந்தபோதும் கேட்கவில்லை. நூலக எரிப்புக்கு அவர் மன்னிப்புக் கேட்டபோது அப்போதிருந்த கூட்டு எதிரணியை நோக்கி நீங்கள் கடந்த அரசாங்கத்தில் செய்த குற்றங்களுக்கு மன்னிப்புக் கேட்பீர்களா என்றும் கேட்டார். அதாவது கூட்டு எதிரணியை நெருக்கடிக்குள் தள்ளும் உள்நோக்கத்தோடு தான் அவர் அவ்வாறு மன்னிப்புக் கேட்டவரா? இப்பொழுது அவர் அநேகமாக ஓய்வுபெற்று விட்டார்.அவரைப் போல அன்றைக்கு ஜேஆரின் அரசாங்கத்தில் பிரதானிகளாக இருந்த பலரும் உயிருடன் உள்ளார்கள். யாருமே யூலை 83க்கு மன்னிப்புக் கேட்கவில்லை.

இவ்வாறு நாட்டின் தலைநகரமும் உட்பட முக்கிய தென்னிலங்கை நகரங்களில் இடம்பெற்ற இன அழிப்புக்கு இதுவரை எந்த ஒரு சிங்களத் தலைவரும் மன்னிப்பு கேட்காத, அதாவது பொறுப்புக் கூறாத ஓர் அரசியல் சூழலில், ஏழு ஆண்டுகளுக்கு முன் நடந்த ஈஸ்டர் குண்டு வெடிப்புக்கு இப்போதுள்ள அரசாங்கம் பொறுப்புக் கூறுகிறதா?

நாட்டின் 160 ஆண்டுகால பொலீஸ் வரலாற்றில் ஒரு பொலிஸ்மா அதிபருக்கு மரண தண்டனை விரிக்கப்பட்டது இது தான் முதல் தடவை. அப்படித்தான் ஒரு முன்னாள் பாதுகாப்புத் துறை செயலருக்கும் மரணதண்டனை விதிக்கப்பட்டிருக்கிறது. ஈஸ்டர் குண்டுவெடிப்பைத் தடுக்கத் தவறியதற்காக அந்தத் தண்டனை. தங்கள் பொறுப்புகளின் அடிப்படையில் அந்த குற்றச்செயல்களை தடுக்க தவறியதற்காக அவர்கள் இருவருக்கும் தண்டனை வழங்கலாம் என்றால், ஜூலை 83க்காக அப்பொழுது பொறுப்பில் இருந்தவர்களில் இப்பொழுது உயிருடன் இருக்கும் யாராவது அதற்காகத் தண்டிக்கப்படுவார்களா? அவ்வாறு தண்டிக்கத் தேவையான விசாரணைகளை முன்னெடுப்பதற்கு தேசியமக்கள் சக்தி அரசாங்கம் தயாரா?

ஜூலை 83ல்தான் தமிழ் மக்கள் தென்னிலங்கை நகரங்களில் தாக்கப்பட்டார்கள் என்பதல்ல. அதற்கு முன்னரும் தென்னிலங்கை நகரங்களில் தமிழ் மக்கள் தாக்கப்பட்டிருக்கிறார்கள். தமிழ் மக்கள் தாக்கப்படுவதற்கு முன்பு கடந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் முஸ்லிம்கள் தாக்கப்பட்டார்கள். அதற்குமுன்பு, அதற்கு முந்திய நூற்றாண்டில் இறுதியில் கத்தோலிக்கர்கள் தாக்கப்பட்டார்கள். கடந்த ஒரு நூற்றாண்டுக்கு மேலாக இந்த நாடு சிறிய இனங்கள், சிறிய மதங்களுக்கு எதிராக தாக்குதல் நடத்தும் ஒரு நாடாகவே இருக்கிறது. அந்த தாக்குதல்களில் பெரும்பாலானவை திட்டமிட்டுச் செய்யப்பட்டவை. நன்கு ஒழுங்கமைக்கப்பட்டவை. அவற்றில் சிலவற்றின் பின்னணியில் அப்போது இருந்த அரசாங்கங்கள் அல்லது அரசியல்வாதிகள் இருந்ததாக தமிழ் மக்கள் குற்றம் காட்டுகிறார்கள். குறிப்பாக ஜூலை 83க்கு, நூலகம் எரிக்கப்பட்டதற்கு அப்போது இருந்த அரசாங்கமே பொறுப்பு என்றுஅமைச்சர் பிமல் ரட்டநாயக்க கூறுகிறார். நீதி அமைச்சர் கூறுகிறார். அதுவும் அவர்கள் அதை நாடாளுமன்றத்தில் வைத்துக் கூறியிருக்கிறார்கள்.

> தமிழ் மக்களுக்கு எதிராக முன்னெடுக்கப்பட்டது இன அழிப்புப்போர் அல்ல அது பயங்கரவாதத்துக்கு எதிரான ஒரு படை நடவடிக்கை என்று பேராயர் மல்கம் ரஞ்சித்தின் ஊடகத்துறை முக்கியஸ்தர் கூறுகிறார். நாட்டிலுள்ள ஒரு தேசிய இனத்துக்கு எதிராக இடம்பெற்ற குற்றச் செயல்களுக்கு நீதி தேவையில்லை என்று கருதும் ஒரு பேராயர், ஈஸ்டர் குண்டுவெடிப்புக்கு நீதிவேண்டும் என்று கேட்கிறார்.



கடந்தவாரம் யாழ். மறைமாவட்டத்தைச் சேர்ந்த மதகுருக்கள் செம்மணிப் புதைகுழிக்கு அனைத்துலக விசாரணை கேட்டு ஊர்வலம் போனார்கள். நாட்டின் கத்தோலிக்கத் திருச்சபை இனரீதியாக இரண்டாக நிற்கிறதா?

ஈஸ்டர் குண்டுவெடிப்பில் சம்பந்தப்பட்டவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளை எடுப்பதால் பேராயர் மல்கம் ரஞ்சித்தைத் திருப்திப்படுத்தலாம்.நாட்டின் 5.6விகித கத்தோலிக்க சனத்தொகையை திருப்திப்படுத்தலாம். கத்தோலிக்க சமூகத்துக்கு மட்டுமல்ல, ஈஸ்டர் குண்டு வெடிப்பின் விளைவாக நீதியற்ற முறையில் பாதிக்கப்பட்ட முஸ்லிம்களுக்கும் பொறுப்புக் கூறலாம்.

ஆனால் அதற்கு முன்னரே நடந்த 83 ஜூலைக்கு கடந்த 43 ஆண்டுகளாக யாருமேபொறுப்புக் கூறவில்லை. அந்தக் குற்றப்பழியை அப்போது இருந்த யு. என். பி அரசாங்கத்தின் மீது போடுவதன் மூலம் இப்போதுள்ள அரசாங்கம் அந்தப் பொறுப்புக்கூறலில் இருந்து தன்னை விடுவித்துக்கொள்ளப் பார்க்கிறது.

83 ஜூலை, ஈஸ்டர் குண்டுவெடிப்பு, இறுதிக் கட்டப் போரில் நிகழ்ந்த இன அழிப்பு, அதற்கு முன்னர் நிகழ்ந்த இன அழிப்பு.. போன்றவைகள் யாவும் அந்தக் காலங்களில் இருந்த அரசாங்கங்கள் விட்ட தவறுகளின் விளைவுகள் மட்டுமல்ல. அதைவிட ஆழமான பொருளில், அது சிங்கள பௌத்த அரசு கட்டமைப்பு சார்ந்த குற்றங்கள். அதாவது அதற்குப் பொறுப்பு அரசு தான். அரசாங்கங்கள் மட்டுமல்ல. அரசாங்கங்கள் அவ்வாறு சிறிய தேசிய இனங்கள், சிறியமதப் பிரிவினர்களுக்கு எதிராக குற்றம் இழைக்கும் போது அதற்கு அரசுக் கட்டமைப்பு அனுமதித்தது. எனவே அதற்கு அரசுக் கட்டமைப்புத்தான் முழு முதல் பொறுப்பு. அரசுக் கட்டமைப்புத்தான் பொறுப்புக் கூற வேண்டும். அந்தக் கட்டமைப்பில் தான் மாற்றங்கள் செய்யப்படவேண்டும். அரசாங்கங்களை மாற்றுவதன் மூலம் பொறுப்புக்கூற வைக்க முடியாது என்பதைத்தான் 2015ல் நிறைவேற்றப்பட்ட நிலைமாறு கால நீதிக்காண ஐநா தீர்மானத்தின் பின்னரான நிலைமைகள் நமக்கு உணர்த்துகின்றன.அக்கால கட்டத்தில் தான் ஈஸ்டர் குண்டுவெடிப்பு நிகழ்ந்தது என்பதையும் இங்கே சுட்டிக்காட்ட வேண்டும். நிலைமாறு கால நீதிச் சூழலில் ஈஸ்டர் குண்டுவெடிப்பை நிறுத்த முடியவில்லை என்பதே அதன் தோல்விக்குச்சான்று.

ஈஸ்டர் குண்டுவெடிப்பு தொடர்பான குற்றச்சாட்டுக்கு இலக்காக இருப்பவர்கள் இப்பொழுது தண்டிக்கப்பட்டிருப்பவர்கள் யார் யார் என்று பார்த்தால், அனைவருமே நாட்டின் சட்டம், ஒழுங்கு, புலனாய்வு போன்ற கட்டமைப்புகளுக்குப் பொறுப்பாக இருந்தவர்கள். குற்றஞ்சாட்டப்பட்டிருக்கும் சுரேஷ் சலே சக்திமிக்க புலனாய்வுக் கட்டமைப்பின் பணிப்பாளராக இருந்தமேஜர் ஜெனரல் தர தளபதி ஆகும். இப்பொழுது ஒரு முன்னாள் பொலீஸ் மாஅதிபரும் ஒரு முன்னாள் பாதுகாப்புத் துறைச் செயலரும் குற்றவாளிகளாக தீர்ப்பளிக்கப்பட்டிருக்கிறது. இவர்கள் அனைவரும் அரசுக் கட்டமைப்பின் பிரதானிகள். அரசாங்கத்தின் பிரதானிகள் அல்ல.அல்லது அவர்களை அரசாங்கங்களின் பிரதானிகளாகக் கருதும் அளவுக்கு அரசுக் கட்டமைப்பு குற்றப் பண்புடையதாக இருந்ததா? அல்லது குற்றச் செயல்களுக்கு விட்டுக் கொடுப்பதாக இருந்தது என்று எடுத்துக் கொள்ளலாமா ?

எனவே மன்னிப்புக் கேட்கவேண்டியது, பொறுப்புக்கூற வேண்டியது அரசாங்கங்கள் மட்டுமல்ல. அரசுக் கட்டமைப்பும்தான். இந்தத் தர்க்கத்தின் அடிப்படையில் கேட்டால், அந்த அரசுக் கட்டமைப்பை இப்பொழுது பிரதிநிதித்துவப் படுத்தும் தேசியமக்கள் சக்திஅரசாங்கம், ஜூலை 83க்கு மன்னிப்புகேட்குமா? அல்லது இதற்குமுன்பிருந்த அரசாங்கங்களின் குற்றங்களுக்குத் தான் பொறுப்பில்லை என்று கூறிவிட்டுத் தப்பப் பார்க்குமா? ரணில் விக்கிரமசிங்க ராஜபக்சக்களின் மீதுபழியைப் போட்டுவிட்டுத் தப்பியது போல?

தமிழ் மக்களுக்கு எதிராக முன்னெடுக்கப்பட்டது இன அழிப்புப்போர் அல்ல அது பயங்கரவாதத்துக்கு எதிரான ஒரு படை நடவடிக்கை என்று பேராயர் மல்கம் ரஞ்சித்தின் ஊடகத்துறை முக்கியஸ்தர் கூறுகிறார்.நாட்டிலுள்ள ஒரு தேசிய இனத்துக்கு எதிராக இடம்பெற்ற குற்றச் செயல்களுக்கு நீதி தேவையில்லை என்று கருதும் ஒரு பேராயர், ஈஸ்டர் குண்டுவெடிப்புக்கு நீதிவேண்டும் என்று கேட்கிறார். ஆனால் கடந்த வாரம் யாழ். மறைமாவட்டத்தைச் சேர்ந்த மதகுருக்கள் செம்மணிப் புதைகுழிக்கு அனைத்துலக விசாரணை கேட்டுஊர்வலம் போனார்கள். நாட்டின் கத்தோலிக்கத் திருச்சபை இனரீதியாக இரண்டாக நிற்கிறதா?

ஈஸ்டர் குண்டுவெடிப்புக்கு நீதிகிடைக்கலாம் என்றால் அதன் சூத்திரதாரிகள்- கவனிக்கவும், கருவிகள் அல்ல சூத்திரதாரிகள்- தண்டிக்கப்படுவார்களாக இருந்தால், தமிழ் மக்களுக்கு எதிரான குற்றங்களுக்கும் நாட்டின் அரசுக் கட்டமைப்பு பொறுப்புக் கூறுமா?

அல்லது அனுர பதவிக்கு வரமுன்பு அசோசியேட்ட் நியூஸ் பிரஸ் நிறுவனத்துக்கு வழங்கிய ஒரு நேர்காணலில் கூறியதுபோல, பாதிக்கப்பட்ட மக்கள் குற்றவாளிகளை விசாரிக்கவேண்டும் என்று கேட்கிறார்களே தவிர குற்றவாளிகளைத் தண்டிக்கவேண்டும் என்றுகேட்கவில்லை என்பது தான் அரசாங்கத்தின் நிலைப்பாடா ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈழநாடு



# சாவகச்சேரி நகரசபையில் தமிழரசுக்கட்சியின் அரிதாரம் மீண்டுமொருமுறை கரைந்ததா?



கந்தையா அருந்தவபாலன்

கலை அரங்கில் மட்டுமன்றி அரசியல் அரங்கில் வரும் பாத்திரங்களும் அரிதாரம் பூசிக்கொள்வது இயல்பானதொன்றுதான். அரங்கம் எதுவானாலும் திரைவிழும் வரையிலாவது பூசிய அரிதாரத்தைப் பாதுகாப்பது அவசியமானது. ஆனால் இன்று தமிழ் அரசியல் அரங்கிலுள்ள தலைவர்கள் சிலர் தாம் பூசிக்கொள்ளும் அரிதாரத்தைப் பேண முடியாது தாங்களாகவே விரைந்து கரைத்துக் கொள்வதால் உண்மை முகம் வெளிப்பட்டு மக்கள் மத்தியில் அம்பலப்பட்டு நிற்பதை அடிக்கடி காணமுடிகிறது. அவ்வாறான ஒரு நிகழ்வு அண்மையில் நடைபெற்ற சாவகச்சேரி நகரசபைக்கான உபதவிசாளர் தெரிவின்போதும் அரங்கேறியுள்ளது. இங்கு தமிழரசுக்கட்சியின் சுமந்திரன் அணியினர் (அவ்வாறு ஒரு அணி இல்லையென்று அதன் பதில் தலைவர் கற்பூரம் கொழுத்தி சத்தியம் செய்தாலும்கூட உண்மை நிலை அதுவன்று) பூசிய அரிதாரமே மீண்டுமொருமுறை கரைந்து அம்பலப்பட்டதைக் காணமுடிந்தது.

சாவகச்சேரி நகரசபையின் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காக உள்ளூராட்சித் தேர்தல் முடிவடைந்த நாளிலிருந்தே தமிழரசுக்கட்சியின் சுமந்திரன் அணி சில உள்ளடி வேலைகளைச் செய்திருந் தது. அதில் ஒன்று அக்கட்சியின் பதில் தலைவர் - ரீதர் தியேட்டருக்கு சென்று ஈ.பி.டி.பியின் ஆதரவைப் பெற்றது. இரண்டாவது அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியினால் நியமனஞ் செய்யப்பட்ட பெண் உறுப்பினர் ஒருவர் நகரசபை எல்லைக்குள் வசிக்காதவர் என நீதிமன்றில் வழக்குத்தொடுத்து அவரின் நியமனத்துக்கு இடைக்காலத் தடை பெற்றமை. உண்மையில் அவர் நகரசபை எல்லைக்குள் நீண்டகாலமாக வசித்து வந்தாலும் அவரது பதிவு எல்லை வீதியின் மறுபுறத்தில் இருந்துள்ளது. அதேவேளை தேர்தல் காலத்தில் யாழ் மாநரசபைக்குத் தேசிய மக்கள் சக்தி சார்பில் போட்டியிட்ட கபிலன் மீது வழக்குப்போட்டுப் பதவியைப் பறிப்பேன் எனச் சூளுரைத்த சுமந்திரன் இதுவரை அதைச்செய்யவில்லை. அதற்கு "நான் தயார், ஆனால் நாரும் வழக்குத் தொடுக்க முன்வரவில்லை" என அவர் சொன்ன பதில் இன்னும் நகைச்சுவையானது

சட்டரீதியாக அது தவறு என்றாலும் அதற்காக வழக்குத்தொடுத்த இதே நபர்களதான் இதற்குமுன் நடைபெற்ற உள்ளூராட்சித் தேர்தலில் சாவகச்சேரி பிரதேச சபை எல்லைக்குள் வரும் கைதடியில் வசித்துவந்த ஆனால் நகரசபை எல்லைக்குள் முறைகேடாக பதிவு செய்யப்பட்டிருந்த ஒருவரை வட்டார வேட்பாளராக நிறுத்தவேண்டும் என்று அடம்பிடித்து நின்றவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. அதன்காரணமாகவே சாவகச்சேரியில் தமிழரசுக் கட்சி பிளவுபட்டதுடன் அதுவே சாவகச்சேரி மக்களை இன்று வரை பிறர் ஏளனம் செய்யும் வகையில் அரச்சுனா பாராளுமன்ற உறுப்பினாராக வழிவகுத்ததுடன் எப்போதும் முதலிடத்தில் இருந்துவந்த தமிழரசுக்கட்சி அத்தொகுதியில் மூன்றாமிடத்துக்குத் தள்ளப்படவும் காரணமாக அமைந்தது. மக்களின் மற்றும் கட்சி உறுப்பினர்களின் தீர்ப்புக்கு மதிப்பளிப்பதைவிட சட்ட ஓட்டைகளினூடாக பதவிகளைக் கைப்பற்றிய இந்த அணியினர் அதேபோல சாவகச்சேரி நகரசபையின் அதிகாரத்தையும் கைப்பற்ற முற்பட்டமை ஆச்சரியமான விடயமன்று. எனினும் அவர்களின் அந்த ஆசை இன்றுவரை நிறைவேறவில்லை. வருங்காலத்திலும் அதற்கான வாய்ப்பு இருப்பதாகத் தென்படவில்லை.

சாவகச்சேரி நகரசபையின் உபதவிசாளரின் பதவி மற்றும் உறுப்புரிமையை ஆளுநர் வறிதாக்கிய விடயத்திலும் தமிழரசுக்கட்சியின் இந்த அணியினரின் இரட்டைவேடம் பல இடங்களில் வெளிப்பட்டதை அவதானிக்க முடிந்தது. ஆளுநரின் இந்த ஜனநாயக விரோத நடவடிக்கையை ஈ.பி.டி.பி உட்பட அனைத்துத் தமிழ்க் கட்சிகளும் கண்டனம் செய்திருந்தபோதிலும் தமிழரசுக்கட்சி மட்டும் அதனைக் கண்டிக்கவில்லை. இது தொடர்பாக இக்கட்டுரையாளர் அக்கட்சியின் தற்போதைய பதில் தலைவரைக் கேட்டபோது அதற்குச் சில மழுப்பல்களைச் செய்ததுடன் வவுனியாவில் அதை எதிர்த்து சுமந்திரன் வழக்காடுகிறார் தானே என்று கூறினார். வழக்காளி அல்லது பிரதிவாதி ஒருவருக்காகச் சட்டவாதி ஒருவர் நீதிமன்றில் முன்னிலையாவது தொழில்முறையிலானதொன்று. அதனைக் கட்சியொன்றின் நிலைப்பாடாக எவ்வாறு கொள்ளமுடியும் என்ற வினாவுக்கு அவரிடம் விடையிருக்கவில்லை.

ஆனால் அக்கட்சியைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர் சத்தியலிங்கம் உட்பட வேறுசிலரும் ஆளுநரின் செயலைக் கண்டித்து வவுனியாவில் நடந்த பேரணியில் கலந்து கொண்டதுடன் ஆளுநரின் செயல் ஜனநாயக விரோதமானது என சத்தியலிங்கம் ஊடகங்களுக்குத் தெரிவித்திருந்தார். ஆனால் அதேபோல சாவகச்சேரியில் நடைபெற்ற கண்டன போராட்டத்தில் அக்கட்சியைச் சேர்ந்த எவரும் கலந்துகொள்ளவில்லை. அவ்வாறாயின் வவுனியா மாநகர முதல்வருக்கு எதிரான ஆளுநரின் நடவடிக்கை மட்டும்தான் அக்கட்சிக்கு ஜனாநாயக விரோதமானதா? அல்லது அக்கருத்து கலந்துகொண்ட அக்கட்சி உறுப்பினர்களின் தனிப்பட்ட நிலைப்பாடா? வழக்கு ஒத்து ஆனால் நீதிமன்றங்களின் தீர்ப்பு வேறாறனது போல விடயம் ஒன்று ஆனால் கொள்கை இரண்டு என்பதுதான் தமிழரசுக் கட்சியின் நிலைப்பாடா? அல்லது அவர்களுக்குக் கொள்கை எதுவும் கிடையாது பதவிதான் முக்கியம் என்பதை இது எடுத்துக் காட்டுகிறதா?

இதனை உறுதிப்படுத்தும் இன்னொரு விடயமும் உண்டு. ஆளுநரின் குறித்த செயற்பாடு தொடர்பில் சபை கண்டனத் தீர்மானம் ஒன்றை நிறவேற்றவேண்டும் என அச்சபையின் பல உறுப்பினர்களால் தலைவரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது. இக்கோரிக்கை விடுத்தவர்களில் அதிகமானவர்கள் தமிழரசுக்கட்சியைச் சார்ந்தவர்கள். அதற்கமைய அவர்களின் சம்மதத்துடன் தலைவரால் விசேட கூட்டத்திற்கான அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. ஆனால் அக்கூட்டத்திற்கு அவர்கள் எவரும் சமுகமளிக்காமையினால் கோரமின்றி கூட்டம் நடைபெறவில்லை. இது தொடர்பாக இக்கட்டுரையாளர் அக்கட்சியின் உறுப்பினர்களிடம் வினவியபோது அவர்கள் கூறியவை கட்சியின் போலிமுகத்தை அம்பலப்படுத்துவதாக இருந்தன. தாங்கள் அனைவரும் கூட்டத்திற்கு சமுகமளிக்க இருந்ததாகவும் ஆனால் முதல்நாள் மாலை அக்கூட்டத்துக்குப் போக்கூடாது என்று தொகுதித் தலைவரால் கட்டளை பிறப்பிக்கப்பட்டதாகவும் கூறினார்கள். அத்துடன் என்ன செய்வது சேர் நாங்கள் பொறிக்குள் மாட்டியிருப்பதால் மனச்சாட்சிக்கு விரோதமாக நடக்க வேண்டியுள்ளதாகவும் அதில் ஒருவர் கூறினார்.



பேச்சுப்பல்லக்கு தம்பி கால்நடை என்பதுபோல கூட்டுக்கட்சியின் கோரிக்கையைப் புறக்கணித்து உபதவிசாளர் பதவிக்குப் தமிழரசுக்கட்சி போட்டியிட்டது அதன் அரிதாரம் கரைந்ததன் உச்சக்கட்டமாகும்.

ஜனநாயகத் தமிழ்த் தேசிய கூட்டணியும் தமிழரசுக்கட்சியும் இப்போது கூட்டணியாக உள்ளன. இதில் புளொட் கட்சியும் அடங்கும். அதற்கு மேலாக மிக ஆர்ப்பாட்டமாக வெளிப்படுத்தப்பட்ட ஆறுகட்சிக் கூட்டுத்தளத்திலும் அவை பங்காளிகள். அப்படியிருந்தும் இவ்விடயத்தில் புளொட்டின் வேண்டுகோள் தமிழரசுக்கட்சித் தலைமைகளால் முற்றாக உதாசீனம் செய்யப்பட்டது. தெரிவுக் கூட்டத்தைப் புறக்கணிக்கவேண்டும் அல்லது குறித்த உபதவிசாளர் பதவியில் ஏற்கனவே புளொட் உறுப்பினர் இருந்துள்ளதுடன் ஆளுநரால் எதேச்சதிகாரமுறையில் அவர் அகற்றப்பட்டுள்ளார் எனவும், அதனால் மீண்டும் அப்பதவியை தமது கட்சி உறுப்பினர் பெறுவதற்கு ஆதரவளிக்க வேண்டுமென சித்தார்த்தன் மற்றும் கஜதீபன் போன்றவர்களால் பதில் தலைவர் சிஞானத்திடமும் பதில் செயலாளர் சுமந்திரனிடமும் கோரிக்கை விடுக்கப்பட்டபோதும் அது முற்றாக நிராகரிக்கப்பட்டிருந்தது. அக்கோரிக்கைக்கு தொகுதிக்கிளையின் முடிவை மீறி தன்னால் ஒன்றும் செய்ய முடியாது என பொதுச்சபை உட்பட கட்சியின் உறுப்பினர் எவரதும் கருத்தையும் செவிசாய்க்காது தன்னிச்சையாகச் செயற்பட்டுவரும் சுமந்திரனால் அவர்களுக்குச் சொல்லப்பட்டுள்ளதை யார் நம்புவார்கள்?.

இந்தவிடயத்தில் கஜேந்திரகுமார் நடந்துகொண்ட முறை பலராலும் வரவேற்கப்பட்ட ஒன்றாக இருக்கிறது. தெரிவுக்கூட்டத்தைப் புறக்கணிக்கவேண்டுமென்பதே அவரது பிரதான கோரிக்கையாக இருந்தபோதும் தமிழரசுக்கட்சி அதற்கு உடன்படாத நிலையில் புளொட்டின் கோரிக்கையேற்று கூட்டத்தில் கலந்துகொண்டு புளொட்டுக்கு ஆதரவளிப்பது என அவரால் அறிவிக்கப்பட்டிருந்தது. முன்னர் தமிழ்த் தேசிய முன்னணிக்கும் ஜனநாகத் தமிழ்த் தேசியக் கூட்டணிக்கும் இடையில் ஏற்பட்ட கூட்டின் அடிப்படையிலேயே சாவகச்சேரி நகரசபையின் உபதவிசாளர் பதவி அக்கட்சிக்கு வழங்கப்பட்டிருந்தது. ஆனால் இப்போது அக்கூட்டு முறிந்துவிட்டது மாத்திரமன்றி ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி தமிழரசுக்கட்சியுடன் புதிதாகக் கூட்டை ஏற்படுத்தியும் கொண்டுள்ளது. இப்போது அக்கட்சிக்கு ஆதரவளிக்கவேண்டிய கடப்பாடு கஜேந்திரகுமாருக்கு இல்லை என்றபோதிலும் முன்னர் தன்னால் வழங்கப்பட்ட வாக்குறுதிக்கு மதிப்பளித்து ஆதரவளித்தமை மக்களின் கருத்துப்படி வரவேற்கத்தக்கதொன்றே.

அண்மையில் தமிழரசுக் கட்சியின் சாவகச்சேரி அமைப்பாளர் கேசவன் சயந்தன் தொலைக்காட்சி நேர்காணல் ஒன்றில் இவ்விடயம் தொடர்பாக கேட்ட கேள்வியொன்றுக்குப் பின்வருமாறு பதிலளித்திருந்தார். வவுனியாவில் தாம் புளொட்டுக்கு விட்டுக்கொடுத்ததாகவும் சாவகச்சேரியிலும் அவ்வாறு விட்டுக் கொடுத்து புளொட்டுக்கு இரண்டா எனவும் கேட்டிருந்தார். உண்மை என்னவெனில் வவுனியாவில் விட்டுக்கொடுக்கவில்லை. அங்கு அக்கட்சிக்கு வாய்ப்பிருக்கவில்லை என்பதே உண்மைநிலை. தமிழ்த் தேசியம் சாராத கட்சியின் கைகளுக்கு போக்கூடாது என்பதே அத்தெரிவின் அடிப்படையாக அங்கிருந்தது. அதேபோல சாவகச்சேரியில் ஏலவே அப்பதவி புளொட்டிடம்தான் இருந்தது. அதாவது இரண்டுமே புளொட்டிடமிருந்தது என்பதே உண்மை நிலை. அதிலொன்றைப் பறிப்பதே தமிழரசுக்கட்சி போட்ட திட்டம். அத்திட்டம் தோல்விகண்டது மட்டுமல்ல தமிழரசுக்கட்சி சுமந்திரன அணியின் தேசியம்,ஒற்றுமை,கூட்டு என்ற அரிதாரமும் மீண்டுமொரு கரைந்து அவர்களின் உண்மை முகத்தை மக்கள் அறிய முடிந்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# இந்திய கல்விக் கொள்கை சர்ச்சை:

## புதுடெல்லி நீதிக்கான மாணவர் போராட்டம்!

ஐங்கரன் விக்கினேஸ்வரா


கல்வி என்பது எந்தவொரு நாட்டின் பொருளாதார வளர்ச்சி, சமூக நீதி மற்றும் ஜனநாயகத்தின் அடித்தளமாகக் கருதப்படுகிறது. இந்தியா போன்ற 140 கோடிக்கும் மேற்பட்ட மக்கள் தொகை கொண்ட நாட்டில், கல்வி என்பது வெறும் அறிவைப் பெறும் வழி முறையாக மட்டுமல்ல, அது சமூக முன்னேற்றம், வறுமையிலிருந்து விடுபடுதல் மற்றும் தலைமுறை மாற்றத்திற்கான முக்கிய கருவியாகும். மருத்துவம், பொறியியல், சட்டம், அறிவியல், நிர்வாகம் போன்ற துறைகளில் உயர்கல்வி பெறுவதற்கான வாய்ப்புகள் பெரும்பாலும் தேசிய அளவிலான போட்டித் தேர்வுகளால் தீர்மானிக்கப்படுகின்றன.

ஆனால் கடந்த சில ஆண்டுகளில்,குறிப்பாக 2024 - 2026 காலப்பகுதியில்,தேசியத் தேர்வுகளைச் சுற்றியுள்ள வினாத்தாள் கசிவுகள், தேர்வுமுறைகேடுகள்,தேசிய தேர்வு முகமை மீதான குற்றச்சாட்டுகள் மற்றும் மாணவர் போராட்டங்கள், இந்தியக் கல்வி அமைப்பின் மீது மக்களிடம் இருந்த நம்பிக்கையை ஆழமாக பாதித்தன. இந்தச் சூழலில் தேசியகல்விக் கொள்கை மற்றும் அதன் நடைமுறை அமலாக்கம் குறித்த விவாதங்களும் தீவிரமடைந்தன.

2020 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட தேசிய கல்விக் கொள்கை, 1986-க்குப் பிறகு இந்தியக் கல்வியில் மிகப்பெரிய கொள்கை மாற்றமாகக் கருதப்பட்டது. 5+3+3+4கல்வி அமைப்பு, ஆரம்பக் கல்வியில் தாய்மொழிக்கு முக்கியத்துவம், பல்துறை உயர்கல்வி, தொழில்நுட்ப ஒருங்கிணைப்பு, ஆராய்ச்சி மேம்பாடு, ஆசிரியர் பயிற்சி மற்றும் திறன் அடிப்படையிலான கற்றல் போன்ற பல முன்னேற்றமான இலக்குகளை அது முன்வைத்தது.

ஆனால் இந்தக் கொள்கை வெளியானதிலிருந்தே இரண்டு மாறுபட்ட பார்வைகள் உருவாயின. ஆதரவாளர்கள் இதை இந்தியக் கல்வியை 21-ஆம் நூற்றாண்டின் தேவைகளுக்கு ஏற்ப மாற்றும் தொலைநோக்குக் கொள்கையாகப் பாராட்டினர். விமர்சகர்கள், கொள்கையின் நோக்கங்கள் சிறப்பாக இருந்தாலும்,போதிய ஆலோசனையின்றி மையப்படுத்தப்பட்ட நிர்வாகத்தின் மூலம் அமல்படுத்தப்படுவது கூட்டாட்சித் தத்துவத்தை பாதிக்கும் எனக் கூறினர்.


நீட் தேர்வு நாடு முழுவதும் மருத்துவக் கல்விக்கான ஒரே நுழைவுத் தேர்வாக அறிமுகப்படுத்தப்பட்டது. இதன் நோக்கம்,




டில்லியில் மாணவர்களின் போராட்டத்தின் மையக் காரணமாக அமைந்தது இந்தியாவின் மருத்துவக் கல்லூரி சேர்க்கைக்கான தேசிய தகுதித் தேர்வானநீட் தொடர்பான வினாத்தாள் கசிவு மற்றும் தேர்வு முறைகேடு குற்றச் சாட்டுகளாகும். இந்தியாவில் மருத்துவக் கல்வி பெறுவதற்கான மிக முக்கியமான நுழைவாயிலாக இந்தத் தேர்வு கருதப்படுகிறது. ஆண்டுதோறும் இருபது இலட்சத்திற்கும் அதிகமான மாணவர்கள் இந்தத் தேர்வில் பங்கேற்கின்றனர்.







மாநிலங்களுக்கு இடையிலான தரவே றுபாடுகளை குறைத்து, ஒரே தேசிய அளவுகோலின் அடிப்படையில் மாணவர்களைத் தேர்ந்தெடுப்பதாகும். ஆனால் நடைமுறையில் பலவிமர்சனங்கள் எழுந்தன. குறிப்பாக, மாநிலப் பாடத்திட்டத்தில் பயிலும் மாணவர்கள், கிராமப்புற மாணவர்கள் மற்றும் பொருளாதார ரீதியாகப் பின்தங்கிய குடும்பங்களைச் சேர்ந்தவர்கள், அதிக வளங்களைக் கொண்ட நகர்ப்புற மற்றும் தனியார் பயிற்சி மையங்களைச் சார்ந்த மாணவர்களுடன் சமமாகப் போட்டியிட முடியவில்லை என்ற குற்றச்சாட்டுகள் வலுப்பெற்றன.

தமிழ்நாட்டில் அனிதா உள்ளிட்ட மாணவர்களின் மரணங்கள், நீட் தொடர்பான சமூக மற்றும் அரசியல் விவாதத்தை தீவிரப்படுத்தின. மருத்துவக் கல்வியில் சமூக நீதியைப் பாதுகாக்கும் மாநிலத்தின் நீண்டகால கொள்கை பாதிக்கப்படுகிறது என்று பல அரசியல் கட்சிகளும் கல்வியாளர்களும் வாதிட்டனர்.

அதேவேளை தேசிய கல்விக் கொள்கைக்கு எதிராக மிகத் தெளிவான எதிர்ப்பை வெளிப்படுத்திய மாநிலம் தமிழ்நாடு. மாநில அரசு, நீட் சமூக நீதிக்கு எதிரானது என்றும், மாநிலங்களின் கல்விச் சுயாட்சியை பலவீனப் படுத்துகிறது என்றும் தொடர்ந்து வாதிட்டுள்ளது. முன்னாள் நீதிபதிஏ.கே. ராஜன் குழுவின் அறிக்கையும், அரசுப் பள்ளி மாணவர்கள் மற்றும் பின்தங்கிய சமூகங்களின் வாய்ப்புகள் பாதிக்கப்படுகின்றன என்ற முடிவுகளை முன்வைத்தது.

தமிழ்நாடு மட்டுமல்லாமல், கேரளா, மேற்குவங்காளம், பஞ்சாப் உள்ளிட்ட மாநிலங்களும் கல்விக் கொள்கையின் சில அம்சங்கள் குறித்து கவலை தெரிவித்துள்ளன. குறிப்பாக,தேசியத் தேர்வுகள், பாடத்திட்டங்களில் மத்திய அரசின் செல்வாக்கு,மொழிக் கொள்கை மற்றும் கல்வி நிர்வாகத்தின் மையப்படுத்தல் ஆகியவை கூட்டாட்சி அமைப்பின் ஆவிக்கு முரணாக இருப்பதாக அவர்கள் கூறுகின்றனர். இந்த விவாதம் வெறும் கல்வி தொடர்பான தல்ல. இந்தியாவில் மத்திய மற்றும் மாநில அரசுகளுக்கு இடையிலான அதிகாரப் பகிர்வு குறித்து நீண்டகாலமாக இருந்துவரும் அரசியல் விவாதத்தின் ஒரு பகுதியாகவும் மாறியுள்ளது.

தேசிய தேர்வு முகாமை உருவாக்கப்பட்டபோது, தொழில்நுட்ப ரீதியாக பாதுகாப்பான, வெளிப்படையான மற்றும் நம்பகமான தேர்வுமுறையை உருவாக்குவதே நோக்கமாக இருந்தது. ஆனால் தொடர்ச்சியாக ஏற்பட்ட வினாத்தாள் கசிவுகள்,தேர்வு மையங்களில் ஏற்பட்ட குழப்பங்கள், மதிப்பெண் கணக்கீடு குறித்த சர்ச்சைகள் மற்றும் தகவல் பரிமாற்றப் பிழைகள், அதன் செயல்திறன் குறித்து கடுமையான கேள்விகளை எழுப்பின.

ஒரு மாணவர் பல ஆண்டுகள் கடுமையாக உழைத்து எழுதும் தேர்வின் நேர்மையே சந்தேகத்திற்குள்ளானால், கல்வி அமைப்பின் மீதுமக்களிடம் இருந்த அடிப்படை நம்பிக்கையே பாதிக்கப்படும். இதுவே மாணவர் போராட்டங்களின் மையக் காரணமாக அமைந்தது.

கல்விக் கொள்கையை வடிவமைப்பது அரசின் பொறுப்பாக இருந்தாலும், அதன் நடைமுறை அமலாக்கம் அரசியலமைப்புச் சட்டத்தின் அடிப்படை உரிமைகளுடன் ஒத்துப்போக வேண்டும் என்ற கோட்பாடு மீண்டும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

உலகின் பல முன்னேறிய நாடுகளில் உயர்கல்வி சேர்க்கை முறை ஒரே தேசியத் தேர்வைமட்டும் சார்ந்திருக்கவில்லை. பின்லாந்து, கனடா, ஜெர்மனி போன்ற நாடுகளில் பள்ளிக் கல்வி மதிப்பீடு,தொடர்ச்சியான செயல்திறன், நேர்முகத் தேர்வு, பிராந்தியத் தேவைகள் மற்றும் பல்வேறு மதிப்பீட்டுமுறைகள் இணைந்து பயன்படுத்தப்படுகின்றன.

சிங்கப்பூர், தென் கொரியா போன்ற நாடுகளில் தேசியத் தேர்வுகள் இருந்தாலும், அவை மிக உயர்ந்த பாதுகாப்பு,தொழில்நுட்பக் கண்காணிப்பு மற்றும் சுயாதீன நிர்வாகத்தின் கீழ் நடைபெறுகின்றன. இந்தியாவும் உலக அனுபவங்களிலிருந்து கற்றுக்கொண்டு,தேர்வு பாதுகாப்பு மற்றும் நிர்வாக வெளிப்படைத் தன்மையை வலுப்படுத்த வேண்டிய அவசியம் உள்ளது.

இந்தியாவின் கல்விஅமைப்பு இன்று ஒரு முக்கிய திருப்புமுனையில் உள்ளது. ஒருபுறம், உலகளாவிய போட்டிக்கு ஏற்ற திறன்களை மாணவர்களுக்கு வழங்க வேண்டிய அவசியம் உள்ளது.மறுபுறம், சமூகநீதி, மாநிலங்களின் உரிமைகள் மற்றும் சமவாய்ப்பை உறுதிப்படுத்தவேண்டிய கடமையும் உள்ளது.

எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படவேண்டிய முக்கிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும்.

தேசியத் தேர்வு முகமையை முழுமையான சுயாதீன அமைப்பாக மாற்றுதல்,தேர்வு பாதுகாப்பிற்கான மேம்பட்ட தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்துதல், மாநிலங்களுடன் ஆலோசித்து கல்விக் கொள்கைகளை நடைமுறைப்படுத்துதல், கிராமப்புற மற்றும் அரசுப் பள்ளி மாணவர்களுக்கான ஆதரவு அமைப்புகளை வலுப்படுத்துதல், மாணவர்களின் மனநலன் மற்றும் தேர்வு அழுத்தத்தை குறைக்கும் கொள்கைகளை உருவாக்குதல் போன்ற பணிகளை மேற்கொள்ளவேண்டும்.

தற்போதய மோடி அரசின் தேசிய கல்விக் கொள்கை இந்தியக் கல்வியை நவீனமயமாக்கும் பல தொலைநோக்கு இலக்குகளை முன்வைத்துள்ளது. அதே நேரத்தில், அதன் நடைமுறை அமலாக்கம், நீட் தொடர்பான சர்ச்சைகள்,தேசியத் தேர்வு முகமையின் நிர்வாகத் தோல்விகள், மாநிலங்களின் எதிர்ப்புமற்றும் மாணவர் போராட்டங்கள் ஆகியவை, கல்வி என்பதுவெறும் கொள்கை அறிவிப்புகளால் மட்டும் வெற்றியடையாது என்பதை தெளிவுபடுத்தியுள்ளன.

ஒரு நாட்டின் கல்வி அமைப்பின் வெற்றி, திறமையான கொள்கைகளிலும் தொழில்நுட்ப முன்னேற்றங்களிலும் மட்டுமல்ல; வெளிப்படையான நிர்வாகம், சமூக நீதி, கூட்டாட்சித் தத்துவத்திற்கு மரியாதை மற்றும் மாணவர்களின் நம்பிக்கையைப் பாதுகாக்கும் அரசியல் உறுதிப்பாட்டிலும் உள்ளது. இந்தியா தனது மிகப் பெரிய இளைஞர் மக்கள் தொகையை உண்மையான மனிதவளமாக மாற்ற விரும்பினால், கல்வியை அரசியல் போட்டியின் கருவியாக அல்லாமல், தேசிய முன்னேற்றத்தின் பொதுச் சொத்தாகக் கருதி சீர்திருத்தங்களை அரசு முன்னெடுக்கவேண்டும். ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## இந்திய வெளியுறவு...

அவர் மேலும் தெரிவிக்கையில்-

எதிர்வரும் திங்கட்கிழமை அன்று, தமிழ் பேசும் கட்சிகள் கூட்டாக ஜனாதிபதி அநுரகுமார திஸ ாநாயக்கவைச் சந்தித்துத் தமது சமூகங்கள் எதிர்நோக்கும் முக்கிய பிரச்னைகள் குறித்துக் கலந்துரை யாடவுள்ளன. அதேநாளில் எதிர்க்கட்சித் தலைவரையும் சந்திக்க முயற்சி மேற்கொள்ளப்படவுள்ளது.

இலங்கைக்கு விரைவில் வருகை தரவுள்ள இந்திய வெளியுறவுச் செயலாளரைச் சந்தித்து, 13 ஆவது திருத்தச் சட்டம், மாகாண சபைத் தேர்தல் மற்றும் தமிழ் மக்களின் காணிப் பிரச்னைகள் உள்ளிட்ட முக்கிய விடயங்கள் குறித்துப் பேசத் திட்டமிடப்பட்டுள்ளது.

தமிழக முதலமைச்சர் ஜோசப் விஜய் உள்ளிட்ட முக்கிய அரசியல் தலைவர்களையும் சந்தித்துப் பேச்சு நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

யுத்தக் காலத்தில் கையகப்படுத்தப்பட்ட தனியார் காணிகளை உடனடியாக விடுவிப்பது தொடர்பான கோரிக்கையை ஜனாதிபதியுடனான சந்திப்பில் முன்வைக்கவுள்ளோம்.

தமிழக மீனவர் பிரச்னை இரு நாடுகளின் மீனவ சமூகங்களின் வாழ்வாதாரத்துடன் தொடர்புடைய மனிதாபிமான விடயம் என்பதால், இராஜதந்திரப் பேச்சுகள் மூலம் நிரந்தர தீர்வு காணப்பட வேண்டும்.

இந்தியாவின் அபிவிருத்தி உதவிகள் வடக்கு, கிழக்கு உள்ளிட்ட தமிழ் பேசும் மக்களுக்கும் உரிய முறையில் விரிவுபடுத் தப்பட வேண்டும்- என்றார். (அ)

## சானிக்கும், ரவி...

கொழும்பில் உள்ள பிவிதுறு ஹெல உறுமய கட்சி காரியாலயத்தில் நேற்று சனிக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது-

உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல்கள் சம்பவம் தொடர்பில் போதுமான வகையில் புலனாய்வுத் தகவல்கள் கிடைத்திருந்தும், அந்த தாக்குதலையும், உயிரிழப்புக்களையும் தடுப்பதற்கு உரிய நடவடிக்கைகளை முன்னெடுக்கவில்லை என்று தீர்ப்பளித்து மூவரடங்கிய சிறப்பு மேல் நீதிமன்றம் முன்னாள் பொலிஸ்மா அதிபர் பூஜித் ஜயசுந்தர, முன்னாள் பாதுகாப்பு செயலாளர் ஹேமசிறி பெர்னாண்டோ ஆகியோருக்கு மரண தண்டனை விதித்துள்ளது. அத்துடன் இருவருக்கும் தண்டப்பணமும் விதித்துள்ளது.

மூவரடங்கிய சிறப்பு மேல் நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு எதிராக இவ்விருவரும் உயர்நீதிமன்றத்தில் நேரடியான மேன்முறையீடு செய்யலாம். அதற்கான சட்ட இயலுமை காணப்படுகிறது.

பயங்கரவாதி சஹ்ரான் குண்டுத் தாக்குதல்களை நடத்த திட்டமிட்டுள்ளான் என்று புலனாய்வுத் தகவல் கிடைத்தவுடன் அப்போதைய பொலிஸ்மா அதிபரும்,பாதுகாப்புச் செயலாளரும் ஆச்சரியமடைய வேண்டிய அவசியமில்லை. குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் பிரதி பொலிஸ்மா அதிபராக கடமையாற்றிய ரவி செனவிரத்ன மற்றும் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் பணிப்பாளராக கடமையாற்றிய சானி அபேசேகர ஆகிய இருவருமே ஆச்சரியமடைய வேண்டும்.

குற்றப்புலனாய்வுத் திணைக்களம் குண்டுத்தாக்குதல் சம்பவத்துக்கு முன்னர் வவுணதீவு பொலிஸார் படுகொலை,மாவனல்லை புத்தர் சிலை உடைப்பு, மட்டக்களப்பு பாலமுனை பகுதியில் குண்டுத்தாக்குதல் ஒத்திகை மற்றும் வனாத்தவில்லு பகுதியில் வெடிப்பொருட்கள் மீட்பு போன்ற சம்பவங்கள் குறித்து விசாரணைகளை மேற்கொண்ட வண்ணம் இருந்தது.

வனாத்தவில்லு வெடிப்பொருள் மீட்பு மற்றும் மாவனெல்ல புத்தர் சிலை உடைப்பு விவகாரத்தில் கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் "சஹ்ரான் பாரதூரமான பயங்கரவாத தாக்குதலை நடத்துவதற்கு தயாராகவுள்ளான்" என்று குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் அதிகாரிகளுக்கு வாக்குமூலமளித்துள்ளார்கள்.

குண்டுத்தாக்குதல்கள் தொடர்பில் போதுமான மற்றும் உறுதிப்படுத்தப் பட்ட தகவல்கள் கிடைத்தும் தாக்குதல் களை தடுப்பதற்கு குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் தலைவர்களாக பதவி வகித்த சானி அபேசேகர, ரவி செனவி ரத்ன ஆகியோர் உரிய நடவடிக்கைகளை எடுக்கவில்லை. ஆகவே பூஜித் ஜயசுந்தர, ஹேமசிறி பெர்னாண்டோ ஆகிய இருவரையும் காட்டியும் இவ்விருவரும் பொறுப்பில் இருந்து மிக மோசமாக விலகியுள்ளார்கள். ஆகவே இவ்விருவ ருக்கும் மரண தண்டனை விதிக்கும் இயலுமை நீதிமன்றத்துக்கு உண்டு.

சானி அபேசேகர மற்றும் ரவி செனவிரத்ன ஆகியோருக்கு எதிராக ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு முன்வைத்த பரிந்துரைகளுக்கு அமைய முன்னெடுத்த விசாரணைகளை மீள ஆரம்பிக்க வேண்டும். அதற்கு முன்னர் குற்றப்புலனாய்வுத் திணைக்கள பணிப்பாளர் பதவியில் இருந்து சானி அபேசேகரவையும், பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் பதவியில் இருந்து ரவி செனவிரத்னவை யும் உடன் நீக்க வேண்டும். அப்போது தான் சுயாதீனமான விசாரணைகளை முன்னெடுக்க முடியும்-என்றார். (அ)

## பலாலி இராஜேஸ்வரி...

க.இளங்குமரனைத் தொடர்பு கொண்டு வினவியபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கடந்த காலத்தில் மக்கள் கோரிக்கை முன்வைத் தமைக்கு அமைவாக திருவிழாவுக்காக தற்காலிகமாக அந்தப் பாதை திறந்து வைக்கப்பட்டது. குறித்த பாதை நிரந்தரமாக திறந்து வைப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. அந்த வகையில் ஒரு மாதத்துக்குள் அந்த பாதை நிரந்தரமாக திறக்கப்படும்.

மேலும், இரண்டு மாதத்துக்குள் குறித்த வீதிக்கு கிழக்கு பக்கமாக உள்ள பெருமளவான காணிகளை விடுவிப்பதற்கான நடவடிக்கைகளும் முன்னெடுக் கப்பட்டு வருகின்றன- என்றார். (அ-05)

## போராட்டங்களின்...

(5ஆம் பக்கத் தொடர்ச்சி)

உடைக்கவும், தந்திரமான முறையில் ஒற்றையாட்சி, பெரும்பான்மைவாதக் கொள்கை களை முன்னெடுக்கவும் இது பயன்படுத்தப்பட்டது.

அதே நேரத்தில், இந்தியாவின் வடக்கு, மேற்கு பகுதிகளிலும் இப்போது கிழக்குப் பகுதிகளிலும் மத அடிப்படை யில் தீவிரவாதத் தன்மையை உருவாக்கி தனது ஆதரவுத் தளத்தை அரசாங்கம் பெருக்கியுள்ளது இது சட்டமன்ற வலிமையைப் பாதுகாக்கவும் உதவியது. அது மாற்றுக் கருத்துக்களைத் "தேசிய விரோதம்" அல்லது "பிரிவினைவாதம்" என முத்திரை குத்தியதுடன், அச்சுறுத் தல்கள் மூலம் கட்சித் தாவல்களைச் செய்தும், விசாரணை அமைப்புக்களை தேர்ந்தெடுத்துப் பயன்படுத்தியும் எதிர்க்கட்சிகளைப் பலவீனப்படுத்தியது.

நீதித்துறையின் அமைதி உட்பட பிற நிறுவனங்களின் தேசியமின்மையோடு சேர்ந்து, குடிமைச் சுதந்திரங்களுக்குப் பிரகடனப்படுத்தப்படாத அவசரநிலை அறிவிக்கப்பட்டு, நிர்வகிக்கப்படும் ஜன நாயகத்தில் வாழ்வது போன்ற சூழலை இது உருவாக்கியுள்ளது எனப் பலரும் விவரிக்கின்றனர்.

அகிம்சைப் போராட்டத்தின் மூலம் உருவான ஒரு நாட்டிற்கு, சுதந்திரத்திற் குப் பிறகு பலமுறை தேவைப்பட்டது போன்று , அரசியலமைப்பை உருவாக் கிய சுதந்திரப் போராட்ட வீரர்களின் தலைமுறையின் தொலைநோக்குப் பார் வையை நோக்கித் தனது நிறுவனங்க ளைத் திருப்ப பாராளுமன்றத்திற்கு அப் பாற்பட்ட ஒரு கிளர்ச்சி தேவைப்பட்டுள் ளது. கரப்பான் பூச்சி ஜனதா கட்சியும் அவர்களுடன் நின்றவர்களும் (சோனம் வாங்சுக் 26 நாட்கள் உண்ணாநோன்பு இருந்தார் ) சத்தியாகிரகம் என்ற தூய்மை யான இந்திய வழியைப் பின்பற்றி, அரசின் கொடூரத்தைத் தாண்டி நிற்க முடியும் என்பதையும், அசைக்க முடியாத அரசாங் கத்தையும் நடவடிக்கை எடுக்க வைக்க முடியும் என்பதையும் நிரூபித்துள்ளனர்.

நிர்வாகத்தைக் கண்காணிக்கும் பொறுப்பில் உள்ள நிறுவனங்களுக்கும், அதிகாரத்தைக் கேள்வி கேட்கும் பொறு ப்பில் உள்ளவர்களுக்கும் குறிப்பாகச் சில விதிவிலக்குகளைத் தவிர்ப் பெரும்பாலும் எதிர்மறையான பங்கையே வகித்த ஊட கங்களுக்கும் - இது ஒரு படிப்பினையா கும். அவர்கள் பயமுறுத்தல்களுக்கோ அல்லது சுயநலத்திற்கோ பணியாமல், அரசியலமைப்பு வழங்கிய, சமூகப் பொறுப்புள்ள தங்களின் கடமையை ஆற்ற வேண்டும்.

ஒரு புதிய அமைச்சரின் பொறுப்பில் நுழைவுப் பரீட்சை முறையைச் சீரமைக்க அரசாங்கம் முனையும் போது அவர்கள் அதைச் செய்வார்களா என்பது சோதிக் கப்படும். ஆனால் ஒன்று மட்டும் நிச்ச யம். இந்தியா மாற்றத்திற்காகவும் மறு மலர்ச்சிக்காகவும் ஏங்கிக்கொண்டிருக் கிறது.

(தி இந்து)

# சிறுபான்மையினரின்...

(08ஆம் பக்கத் தொடர்ச்சி)

என்பதாகும். நல்லிணக்கம் என்பது சம உரிமைகள் மற் றும் பாகுபாடற்ற தன்மையைக் கடந்தது. அவை எந்த வொரு ஜனநாயகத்திலும் எதிர்பார்க்கப்படும் குறைந்த பட்ச தரநிலைகள் மட்டுமே. தேசிய மக்கள் சக்தி அர சாங்கம், தங்களை நம்பத் தயங்கும் மக்களிடையே நம் பிக்கையைக் கட்டியெழுப்ப, முறையான சமத்துவம் மற் றும் பாகுபாடற்ற தன்மைக்கான தனது உறுதிப்பாட் டையும் தாண்டிச் செயல்பட வேண்டும்.

காணாமல் போனோரைக் கண்டறிதல், காணிகளை மீள ஒப்படைத்தல் மற்றும் மாகாண சபை தேர்தல்களை நடத்துதல் போன்ற தனது தேர்தல் விஞ்ஞாபன வாக்கு றுதிகளை விரைந்து நடைமுறைப்படுத்துவதோடு, சிறு பான்மை சமூகங்களினால் தெரிவுசெய்யப்பட்ட பிரதி நிதிகளுடன் வழக்கமான பேச்சுவார்த்தையைப் பேணு வது மிகவும் முக்கியமானது. பரந்த ஜனநாயக தொலை நோக்குப் பார்வை கொண்ட ஒரு அரசாங்கம், இந்த கூடு தல் முயற்சியை மேற்கொள்வது சிறுபான்மையினருக்குச் செய்யப்படும் ஒரு சலுகை அல்ல, மாறாக தேசிய ஒற்று மைக்கான ஒரு அத்தியாவசிய முதலீடு என்பதைப் புரிந் துகொள்ளும்.

## மரண அறிவித்தல்



**திருமதி கமலசாந்தினி கொன்சகா**

**(இளைப்பாறிய மருத்துவர்)**

**மலர்வு 24.10.1946 உதிர்வு 27.07.2026**

யாழ்ப்பாணம் கோப்பாயை பிறப்பிடமாகவும் லண்டன் சட்பறிகில்(Sudburyhill),ஈலிங் (Ealing)ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி கமலசாந்தினி கொன்சகா அவர்கள் 27.07.2026 திங்களன்று கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ராஜசிங்கம் - அற்புதராணி தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான மனுவேற்பிள்ளை – மரியம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும்

ஜோண் கொன்சேகா (அருள்)அவர்களின் அன்பு மனைவியும்

தீமோத்தி நிமால் , றெச்சல் கீத்தா ஆகியோரின் அன்புத் தாயாரும்

பாபறா, ஜோண் ஆகியோரின் அன்பு மாமியாரும்

அலிஸ், ஜேம்ஸ். அலெக்ஸ் ஆகியோரின் அன்பு பேத்தியும்

வசந்தா (கனடா), ராஜன் (அவுஸ்திரேலியா), சிறீ(கனடா), அருணா (கனடா), மல்லிகா(கனடா) எல்லாளன் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும்

அரியபாலன், ஜீன், காலஞ்சென்ற ஜெயரஜனி, மற்றும் டுங்கன் , சாந்திக்குமார், சுஜி, காலஞ்சென்றவர்களான யோசவ்வின், றெஜீனா, யேசுதாசன், ராசநாயகம், எல்மோ, மற்றும் மனோன் (லண்டன்)ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்

அன்னாரின் இறுதி அஞ்சலியும் நல்லடக்கமும் விபரம் பின்னர் அறியத்தரப்படும்.

இவ் அறித்தலை உற்றார் உறவினர் , நண்பர்களுக்கு அறியத்தருகின்றோம்.

தொடர்புகளுக்கு – ஜோண் கொன்சகா – 00442085796359 (லண்டன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## மீளப் பெறமுடியாத...

செயற்திட்டத்தின் 4 வருட பூர்த்தியை முன்னிட்டு யாழில் இடம்பெற்ற கலந்துரையாடலின் பின் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலே இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.

இது குறித்து மேலும் தெரிவிக்கையில்-

வடக்கு-கிழக்கு தமிழ் மக்கள் தமக்கான அரசியல் தீர்வாக சமஷ்டிக் கோரிக்கையை முன்மொழிந்து இவ்வருடத்துடன் 75 வருடங்கள் ஆகின்றன.

1900 களின் ஆரம்ப முதலே சிங்கள பௌத்த அரசியல் தலைமைகளின் தமிழர் எதிர்ப்பு பரப்புரைகளும் எழுத்துக்களும், தமிழ் மக்களின் அரசியல், சமுதாய நலன்களைக் காப்பதற்கான தனித்துவமான அரசியல் அமைப்பொன்றின் அவசியத்தை தமிழ் அரசியல் தலைமைகளுக்கு உணர்த்தியது.

1921ஆம் ஆண்டு வடக்கு-கிழக்கு தமிழ் மக்களின் அரசியல் நலன்களை முன்னெடுப்பதற்காக சேர். பொன். அருணாச்சலம் தலைமையில் "தமிழர் மகாஜன சபா" உருவாக்கப்பட்டது.

சுதந்திரத்தின் பின் ஆட்சிப்பொறுப்பேற்ற சிங்கள தலைமைகள் மேற்கொண்ட திட்டமிட்ட அரசியல் ஓரங்கட்டல்கள், நில அபகரிப்புகள், வடக்கு கிழக்கில் அபிவிருத்தி எனும் பெயரில் மேற்கொள்ளப்பட்ட சிங்களக் குடியேற்றங்கள் ஆகியன தமிழ் மக்களின் இறைமையை அபகரித்தன. இந்த இறைமை மீறலை நிறுத்துவதற்காக அன்றைய தமிழர் தலைமைகள் சமஷ்டிக் கொள்கையை 1951ஆம் ஆண்டு முன்வைத்தனர்.

ஒரு மக்கள் சமூகம் தமது வாழ்விடப் பிரதேசத்தில் தமக்கான அரசியல் வாழ்வை தாமே தீர்மானித்து, தம்மைத் தாமே நிர்வகித்து, கௌரவமாகவும் உரிமைகளுடனும் வாழ்வதே இறைமையாகும்.

ஒற்றை ஆட்சி முறையில் இறைமை பகிர்ந்துகொள்ளப்படுவதில்லை. அதிகாரம் மத்திய அரசிடம் இருக்கும். மத்திய அரசு எப்பொழுது வேண்டுமானாலும் மாநிலத்துக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தை திரும்பப்பெற முடியும். 13ஆவது திருத்தச்சட்டம் இத்தகையாதாகும்.

இதன் மூலம் வடக்கு-கிழக்குக்கு இறைமை பகிரப்படவில்லை. அன்று தொட்டு இன்றுவரையிலும் இலங்கையில் ஆட்சிப்பொறுப்பேற்ற சிங்கள அரசியல் தலைமைகள் இறைமையைப் பகிர்ந்துகொள்ள முன்வராத நிலையில் கானல் நீர்போன்ற 13ஆவது திருத்தத்தின் மூலம் நாங்கள் ஏமாற்றப்பட்டுள்ளோம்.

ஒரு நாட்டின் இறைமை என்பது அந்நாட்டு மக்களுக்குள்ள உரிமைகள், மக்கள் தமக்கான அரசியல் பிரதிநிதிகளை தெரிவு செய்து அவர்களைக் கொண்டு தமக்கேற்ற அரசியல் சமூக பொருளாதார கொள்கைகளையும் சட்டங்களையும் உருவாக்கி

தமக்கான முன்னேற்றத்தை எட்டுவதாகும். சுருங்கக் கூறின் தமது அரசியல் தலைவிதியை தாமே தீர்மானிப்பதற்கு மக்களுக்குள்ள அதிகாரமாகும்.

இலங்கையின் சிங்கள அரசியல் தலைவர்களும் ஆட்சியாளர்களும் இறைமையை வெறுமனே நிலத்துடன் குறுக்கிக்கொண்டுள்ளனர்.

இலங்கையின் நிலத்தொடர்ச்சியை பாதுகாப்பது தான் நாட்டின் இறைமையைப் பாதுகாப்பது எனும் தோற்றப்பாட்டை உருவாக்கியுள்ளனர்.

இறைமை என்பது மக்கள் சம்பந்தப்பட்ட ஒன்றாகும். தமது நாட்டிலோ மாநிலத்திலோ தமக்கான அரசாங்கத்தை தெரிவு செய்யவும், தமக்கான வாழ்வியலை தீர்மானிக்கவும், உரிமைகளை பிரயோகிக்கவும் மக்கள் கொண்டுள்ள அதிகாரப் பலமே இறைமையாகும்.

மக்களைத் தவிர்த்துவிட்டு நிலத்தை மாத்திரம் பார்க்க முடியாது. மக்களைப் பாதுகாப்பதே இறைமையை பாதுகாப்பதாகும். இலங்கையில் இதுவரையில் ஆட்சிக்கு வந்த பெரும்பான்மை அரசுகள், வடக்கு கிழக்கு மக்களின் இறைமையை அபகரித்துள்ளன.

தமிழ் மக்கள் ஜனநாயக வழியில் தமக்கான அரசியல் தீர்வை அடைவதற்கு மக்களுக்குள்ள அதிகாரத்தை புறக்கணித்துள்ளன. உரிமைகளை அத்துமீறுகின்றன.

ஆகவே இலங்கையில் இணைந்த வடக்கு கிழக்கில் மீளப் பெற முடியாத சமஷ்டி தீர்வே நிலையானது- என்றனர்.

இந்தக் கலந்துரையாடலில் வடக்கு-கிழக்கை சேர்ந்த 8 மாவட்டங்களைச் சேர்ந்த சமூகம் அட்ட அமைப்பினர் மற்றும் வடக்கு கிழக்கு சிவில் ஒருங்கிணைப்பு குழு இணை இணைப்பாளர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

(அ-05)

## யாழ்ப்பாணத்திலும்...

கொழும்புக்கு வெளியே இந்தச் சேவையை விரிவுபடுத்தும் வகையில், இந்த ஆண்டின் இறுதிக்குள் ஜப்பானில் இருந்து மேலும் 50 மெட்ரோ பஸ்கள் இலங்கைக்கு வரவுள்ளதாகவும் அவர் வெளிப்படுத்தினார்.

"இந்த ஆண்டின் இறுதிக்குள் யாழ்ப்பாணம் மற்றும் கண்டியில் மெட்ரோ பஸ் சேவையைத் தொடங்குவோம் என்று நம்புகிறோம். அத்துடன் இவ்விரு மாவட்டங்க ளிலும் மெட்ரோ பஸ் பணிமனைகளும் நிறுவப்படும்" என்று அவர் கூறினார்.

போக்குவரத்து நெரிசல், எரிபொருள் பயன்பாடு மற்றும் சுற்றுச்சூழல் மாசுபாட்டைக் குறைப்பதற்காக, பயணிகள் தனியாரைக் கைவிட்டு பொதுப் போக்குவரத்தைப் பயன்படுத்துவதை ஊக்குவிப்பதே அரசின் நீண்ட கால நோக்கம் என்று அமைச்சர் வலியுறுத்தினார்.

மேலும், மெட்ரோ பஸ்களில் பயணிகளுக்கான தகவல்கள் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் காட்சிப்படுத்தப்படும் என்றும், 2030-ஆம் ஆண்டிற்குள் மெட்ரோ பஸ்களின் எண்ணிக்கையை 500 இற்கும் அதிகமாக உயர்த்த அரசு இலக்கு நிர்ணயித்துள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார். (அ)

## மஹர சிறையில்...

இடையில் நேற்று சனிக்கிழமை மாலை ஏற்பட்ட முறுகல் நிலை காரணமாக மஹர சிறைச்சாலைக்குள் அமைதியின்மை ஏற்பட்டது.

இந்த பதற்றநிலை காரணமாக 7 பேர் காயமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. அவர்கள் ராகம வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர மேலதிக சிறைச்சாலை அதிகாரிகள் அழைக்கப்பட்டுள்ளதுடன், சிறைச்சாலைக்கு வெளியே பாதுகாப்புக்காக பொலிஸார் மற்றும் பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது

அதேவேளை, கைதிகள், சிறைச்சாலையின் பிரதான சிறை அதிகாரியின் அலுவலகம் மற்றும் ஒழுக்காற்றுப் பிரிவுக்கு தீ வைத்துள்ளதாகவும், தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரத் தேவையான நடவடிக்கைகள் தற்போது எடுக்கப்பட்டுள்ளதாகவும் சிறைச்சாலை தகவல்கள் தெரிவிக்கின்றன.

சிறைக் கைதிகளைப் பார்ப்பதற்காக உறவினர்கள் மஹர சிறைச்சாலைக்கு வந்திருந்தபோதிலும், அவர்களுக்கு சிறைச்சாலைக்குள் செல்ல அனுமதி வழங்கப்படவில்லை.

அதனால் உறவினர்கள் மஹர சிறைச்சாலைக்கு முன்னால் தங்கியுள்ளதாகக் குறிப்பிடப்படுகின்றது.

அங்கு தங்கியிருக்கும் உறவினர்கள், சிறைச்சாலைக்குள் இருந்து பல துப்பாக்கிச் சூட்டுச் சத்தங்கள் கேட்டதாகவும் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவங்கள் தொடர்பாக சிறைச்சாலைகள் திணைக்களம் இதுவரை அதிகாரபூர்வமான எவ்வித அறிவிப்பையும் வெளியிடவில்லை.

(அ)

## பருத்தித்துறை அஞ்சல்...

விஜயம் மேற்கொண்டார். இதன்போது யாழ். அஞ்சல் வளாகத்தில் வடக்கு மாகாண அஞ்சல் உயர் அதிகாரிகளுடன் நடைபெற்ற சந்திப்பின்போது இதனைக் கூறியுள்ளார்.

அங்கு சென்று யாழ்ப்பாண அஞ்சல் வளாகத்தை பார்வையிட்டதுடன் வடமாண பிரதி அஞ்சல்மா அதிபர் அலுவலக கேட்போர் கூடத்தில் விசேட கலந்துரையாடல் ஒன்றையும் மேற்கொண்டார்.

இதன்போது வடமாகாண அஞ்சல்துறையின் தேவைப்பாடுகள் குறித்தும் கேட்டறிந்து கொண்டார். இதன்போது இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள பருத்தித்துறைஅஞ்சலகக் கட்டடம் விடுவிப்பு தொடர்பாக கூறப்பட்டது.

இதன்போதுபதிலளித்த பிரதியமைச்சர்,

பருத்தித்துறை அஞ்சல் அலுவலகக் கட்டடம் விடுவிப்பு தொடர்பாக வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரனால் கடிதம் ஒன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் நாம் கரிசனை கொண்டுள்ளோம்.

யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் இது தொடர்பாக விவாதித்து அதன் பின்பு அரசாங்க உயர்மட்ட அபிவிருத்திக் குழுவின் கவனத்துக்கு கொண்டு செல்லப்படும். அதன்பின்னர் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு இராணுவ கட்டுப்பாட்டில் இருந்து விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்படும்-என்றார்.

1971ஆம் ஆண்டு திறந்து வைக்கப்பட்ட பருத்தித்துறை அஞ்சல் அலுவலக கட்டடம் நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையினால் செயற்படமுடியாமல் போனது. அதன் பின்னர் இன்றுவரை இராணுவக் கட்டுப்பாட்டில் இருந்து வருகின்றது.

(அ-05)

## பூஜித் ஜயசுந்தர...

செய்யப்போவதாகக் கூறினார்.

வெலிக்கடை சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள முன்னாள் பொலிஸ் மா அதிபரை நேற்று சந்திக்கச் சென்றபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அதன்படி, பூஜித் ஜயசுந்தர சார்பில் அடுத்த வாரம் மேன்முறையீடு தாக்கல் செய்யப்படும் என்று சட்டத்தரணி தெரிவித்தார்.

மரண தண்டனை விதிக்கப்பட்ட நாளிலிருந்து 28 நாட்களுக்குள் சம்பந்தப்பட்ட மேன்முறையீடு தாக்கல் செய்யப்படவேண்டும். எனவே தேவையான நடவடிக்கைகள் உடனடியாக எடுக்கப்படும் என்று சட்டத்தரணி ரோஷன் தெஹிவல கூறினார்.

அப்போது, பூஜித் ஜயசுந்தராவின் உடல்நிலை குறித்து செய்தியாளர்கள் கேள்வி எழுப்பினர்.

அதற்கு பதிலளித்த சட்டத்தரணி, அவர் தற்போது நல்ல உடல்நிலையில் இருப்பதாகத் தெரிவித்தார்.

ஈஸ்டர் ஞாயிறன்று நிகழவிருந்த பயங்கரவாதத் தாக்குதல் குறித்த உளவுத் தகவல் கிடைத்திருந்தபோதிலும், அதனைத் தடுக்கத் தவறிய குற்றச்சாட்டின் பேரில், முன்னாள் பொலிஸ்மா அதிபர் பூஜித் ஜயசுந்தர மற்றும் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் ஹேமசிறி பெர்னாண்டோ ஆகியோருக்கு கொழும்பு நிரந்தர மேல் நீதிமன்றம் மரண தண்டனை விதித்தது. (அ)

## புலிகளின் தலைவர்....

கொழும்பில் அமைந்துள்ள ஜனசெத பெரமுன கட்சியின் காரியாலயத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்:

கடந்த காலத்தில் மகா போதி, தம்புள்ளை மற்றும் வரலாற்றுச் சிறப்புமிக்க தலதா மாளிகை போன்ற புனித தலங்களில் தமிழீழ விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தி ஏராளமான சிங்கள மக்களைக் கொன்றொழித்தனர்.

புனித தளம் வரை சென்று அவர்கள் தாக்குதல் நடத்திய போதும், எமது நாட்டின் அப்போதைய தலைவர்களோ அல்லது மகா சங்கத்தினரோ வீதியில் இறங்கி போராடவில்லை. சிங்களத் தலைமைகளின் முதுகெலும்பற்ற தன்மையினாலும், மகா சங்கத்தினரின் மௌனத்தினாலுமே அவை அனைத்தும் அமுக்கப்பட்டுப் போயின.

நாட்டைப் பொறுப்பேற்ற தலைவர்கள் எவ்வித நடவடிக்கையும் எடுக்காத நிலையில், இறுதியில் எமது மக்களுக்கு என்ன கிடைத்தது? மகா போதியை தரிசிக்கச் சென்ற அப்பாவி சிங்கள மக்கள் ரி-56 ரக துப்பாக்கிகளால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

கதிர்காமத்துக்குச் சென்ற போதும், தலதா மாளிகையில் தாக்குதல் நடத்திய போதும் சிங்கள மக்கள் கொல்லப்பட்டனர். அன்று எமது தேரர்கள் ஏன் வீதியில் இறங்கி நியாயம் கேட்கவில்லை? தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் கொல்லப்பட்டாலும், அவரது ஆதரவாளர்கள் உலகெங்கும் இன்னமும் இயங்கிக் கொண்டுதான் இருக்கிறார்கள்.

தற்போது உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் பாதிக்கப்பட்ட இருநூற்றுக்கும் மேற்பட்டவர்களுக்காக அவர்கள் போராடி மிகப்பெரிய வெற்றியைப் பெற்றுள்ளதாக பிரசாரம் செய்கிறார்கள்.

ஆனால், சிங்கள தேசத்துக்கும் பௌத்த சாசனத்துக்கும் ஏற்பட்ட அழிவுகளுக்கு யார் குரல் கொடுப்பது? எனவே, இந்த நாட்டுக்கு முதுகெலும்புள்ள வலுவான தலைவரொருவர் அவசியமாகிறது. ஜனசெத பெரமுன கட்சியின் பௌத்த துறவி ஒருவரின் தலைமையிலான ஆட்சியே இந்த நாட்டுக்கு தேவையாகும்.

இன்று கஞ்சி அம்மா போன்ற ஒரு குற்றவாளியின் தொலைபேசி அழைப்புக்கே பாதுகாப்பு அமைச்சும் பொலிஸாரும் பயப்படும் நிலை ஏற்பட்டுள்ளது. மூன்று தசாப்த கால ஈழ யுத்தம் நடந்த காலத்தில் இவர்கள் இருந்திருந்தால் பயத்தில் உறைந்து போயிருப்பார்கள்.

அன்று தமிழீழ விடுதலைப் புலிகள் ஒடுக்கப்பட்டது போல, நாட்டில் உள்ள ஏனைய வன்முறை கும்பல்களையும் அடக்க வேண்டும். எனவே, அரசாங்கம் உடனடியாக சிங்கள மக்களையும், பௌத்த சாசனத்தையும் பாதுகாக்க முன்வர வேண்டும்- என்றார். (அ)

## மஹர சிறைக்குள்...

பாதுகாப்புப் படையினர் சில அடிகள் முன்வந்து மக்களைக் கட்டுப்படுத்த முற்பட்ட போதே பதற்ற நிலை ஏற்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

கைதிகளைப் பார்வையிட வந்த உறவினர்கள் மற்றும் அப்பகுதி மக்கள் பாதுகாப்புத் தரப்பினர் மீது கற்களை வீசித் தாக்குதல் நடத்தியுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈழநாடு

# வடக்கு மாகாண சுகாதாரத்துறையின் வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை!

## 300 பேருக்கு நேர்முகத் தேர்வு

யாழ்ப்பாணம், ஒக. 02

வடக்கு மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தின் கீழுள்ள வைத்தியசாலைகள் மற்றும் நிறுவனங்களில் வெற்றிடமாகக் காணப்படும் சுகாதாரப் பணி உதவியாளர் (தரம் III) பதவிக்கான 852 வெற்றிடங்களில், முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அனுமதிக்கமைவாக 300 வெற்றிடங்களை நிரப்புவதற்கான நேர்முகத் தேர்வுகள் நாளை திங்கட்கிழமை ஆரம்பமாகவுள்ளதாக வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் ப.ஜெயராணி தெரிவித்துள்ளார்.

கட்டமைக்கப்பட்ட இந்த நேர்முகத் தேர்வுகள் நாளை திங்கட்கிழமை முதல் 21 ஆம் திகதி வரை பண்ணையில் அமைந்துள்ள சுகாதார கிராமத்தில் நடைபெறவுள்ளன.

இதற்கென ஆறு விசேட குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளதுடன், தினமும் மூன்று நேரப் பிரிவுகளாக இந்த மதிப்பீட்டு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

இதுவரை நேர்முகத் தேர்வுக்கான அழைப்புக் கடிதங்கள் கிடைக்கப்பெறாத விண்ணப்பதாரிகள் எதிர்வரும் 05 ஆம் திகதிக்கு பின்னர் 021 222 0807 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாகத் தொடர்பு கொண்டு, தமது தேசிய அடையாள அட்டை இலக்கத்தைச் சமர்ப்பித்து உரிய விவரங்களைப் பெற்றுக் கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இந்த 300 வெற்றிடங்களுக்காக சுமார் 3,548 விண்ணப்பதாரிகள் அழைக்கப்பட்டுள்ள நிலையில், எவ்வித அழுத்தங்களுக்கும் இடமளிக்காமல் அதியுயர் நேர்மை, வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புணர்வுடன் இந்த ஆட்சேர்ப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் நேர்முகத் தேர்வுக் குழுவினருக்குக் கடுமையான அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளார்.

இதில் எழுத்துப் பரீட்சை எதுவும் இடம்பெறவில்லை என்பதால், நேர்முகத் தேர்வில் வழங்கப்படும் ஒவ்வொரு புள்ளிக்கும் நியாயமான மற்றும் ஆதாரபூர்வமான காரணங்கள் இருக்கவேண்டும் எனவும், நியமிக்கப்பட்டுள்ள 6 குழுக்களும் எந்தவிதப் பாரபட்சமுமின்றி ஒரே மதிப்பீட்டு அளவுகோல்களையே பின்பற்ற வேண்டும் எனவும் ஆளுநர் வலியுறுத்தியுள்ளார்.

நேர்முகத் தேர்வின்போது அரசியல், நிர்வாக அல்லது வெளிப்புறத் தலையீடுகளுக்குத் துளியளவும் இடமளிக்கக்கூடாது எனவும், முறைகேடு அல்லது அதிகாரத் துஷ்பிரயோகம் நிரூபிக்கப்பட்டால் பாரபட்சமின்றி கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் எச்சரித்துள்ளார். (அ-05)

## ஊடகவியலாளர் நிலக்சனின் 19ஆம் ஆண்டு நினைவேந்தல்



யாழ்ப்பாணம், ஒக. 02

சுட்டுப் படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் சகாதேவன் நிலக்சனின் 19 ஆவது ஆண்டு நினைவேந்தல் யாழ்ப்பாணத்தில் நேற்று நடைபெற்றது.

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற நினைவேந்தல் நிகழ்வில் ஊடகவியலாளர் நிலக்சனின் உருவப் படத்துக்கு மலர்மாலை அணிவித்து மலர் தூவி, சுடரேற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது.

இந்த நினைவேந்தல் நிகழ்வில் சகாதேவன் நிலக்சனின் பெற்றோர், உறவினர்கள், நண்பர்கள், ஊடகவியலாளர்கள் என பலரும் கலந்து நிலக்சனை நினைவு கூர்ந்தனர்.

யாழ். பல்கலைக்கழக ஊடக வளங்கள் பயிற்சி மையத்தின் ஊடகக்கற்கை மாணவனும் சாரளம் சஞ்சிகையின் ஆசிரியரும் யாழ். மாணவர் பேரவையின் முன்னாள் தலைவருமான சகாதேவன் நிலக்சன், 2007 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் முதலாம் திகதி சுட்டுக் கொல்லப்பட்டார்.

தனது வீட்டில் இருந்த சந்தர்ப்பத்தில் அதிகாலை 5 மணியளவில் ஆயுததாரிகள் நிலக்சனை வீட்டுக்கு வெளியே அழைத்து, அவரது பெற்றோர் முன்னிலையில் துப்பாக்கிப் பிரயோகம் நடத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-05)

## தேசிய மக்கள் சக்தியின் மகளிர் சந்திப்பு



யாழ்ப்பாணம், ஒக. 02

தேசிய மக்கள் சக்தியின் மகளிர் சந்திப்பு நேற்று ஆவரங்கால் ஆதவன் மண்டபத்தில் இடம்பெற்றது.

ஊடக பிரதி அமைச்சர் கௌசல்யா ஆரிய ரத்னவின் பங்குபெற்றுதலுடன் இந்த சந்திப்பு முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது யாழ்ப்பாண மாநகர சபை உறுப்பினர் சுந்தரமூர்த்தி கபிலன், வலி கிழக்கு பிரதேச சபை உறுப்பினர், தேசிய மக்கள் சக்தியினை பிரதிநிதித்துவப்படுத்தும் கிராம மட்ட பெண் அமைப்புக்களின் பிரதிநிதிகள், பொதுமக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதன்போது பெண்கள் எதிர்நோக்கும் சவால்கள், அரசியலில் பெண்களின் வகிபங்கு, பிரதேச மட்ட பெண்களின் தொழில்வாண்மையை மேம்படுத்தல் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் கலந்துரையாடப்பட்டன. (அ)

## ஊர்காவற்துறையில் ஆமையுடன் கைதானவருக்கு விளக்கமறியல்!

யாழ்ப்பாணம், ஒக. 02

ஊர்காவற்துறை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட புளியங்கூடல் பகுதியில் ஆமைகளை சட்டவிரோதமாக வைத்திருந்த ஒருவர் நேற்று ஊர்காவற்துறை பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

இதன்போது அவரிடமிருந்து ஆறு கடலாமைகள் மீட்கப்பட்டன. அதனைத் தொடர்ந்து அவரிடம் விசாரணைகள் மேற்கொள்ளப்படன.

பின்னர் நேற்று அவரை ஊர்காவற்துறை நீதிமன்றத்தில் முற்படுத்தியவேளை பிணையில் செல்ல நீதிமன்றம் அனுமதி வழங்கியது. (அ-05)

## மன்னார் மீனவர் சடலமாக மீட்பு!

மன்னார், ஒக. 02

மன்னார் பேசாலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட காட்டாஸ்பத்திரி மீன்பிடித்துறையில் இருந்து, கடந்த 30 ஆம் திகதி மீன்பிடிக்கக் கடலுக்குச் சென்ற மீனவர் ஒருவர் நேற்றுக் காலை சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

காட்டாஸ்பத்திரி கிராமத்தைச் சேர்ந்த 24 வயதான மீனவர், இவ்வாறு சடலாக மீட்கப்பட்டுள்ளார்.

படகில் சென்ற இரு மீனவர்கள், மீன்பிடிப்பதற்கான வலையைக் கடலில் பாய்ச்சி விட்டு கரைக்கு திரும்பிக் கொண்டிருந்ததாகக் கூறப்படுகின்றது.

இதன்போது, படகில் எரிபொருள் முடிந்ததன் காரணமாக எரிபொருளை எடுத்து வரலாம் என்னும் நோக்கில் குறித்த மீனவர் கடலில் குதித்து நீந்தி கரை சேருவதற்காகச் சென்ற சந்தர்ப்பத்தில் பலத்த காற்றின் காரணமாக காணாமல் போயுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த சம்பவம் கடந்த வியாழக்கிழமை மாலை 6.00 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

குறித்த சந்தர்ப்பத்தில், காட்டாஸ்பத்திரி பகுதியில் இருந்து தொழிலுக்குச் சென்ற சக மீனவர்கள், கடலில் தத்தளித்து நின்றதாகக் கூறப்படும் குறித்த படகையும், மற்றைய மீனவரையும் மீட்டு கரை திரும்பினர்.

அத்துடன், எரிபொருளை பெற்றுக் கொண்டு வருவதாகக் கூறி கடலில் நீந்திச் சென்றபோது காணாமற்போன சக மீனவரையும் தேடியுள்ளனர். குறித்த மீனவர் தொடர்பில் எவ்வித தகவலும் தெரியாத நிலையில், எருக்கலம்பிட்டி மீனவர்கள்,

நேற்றுக் காலை கடலில் சடலம் ஒன்று காணப்படுவதாக தெரிவிக்கப்பட்டது. அதற்கமைய, காட்டாஸ்பத்திரி மீனவர்கள் தேடிச்சென்று, குறித்த சடலத்தை மீட்டதுடன், பேசாலை பொலிஸாருக்கு தகவல் வழங்கி சடலத்தை கரைக்கு கொண்டுவந்தனர்.

அதன் பின்னர், சடலம் மன்னார் பொது வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டது. (அ)

## பிரச்னைகளுக்கு நிரந்தர தீர்வின்றேல் விரைவில் தொழிற்சங்க நடவடிக்கை!

### ரயில் நிலைய அதிபர்கள் சங்கம் எச்சரிக்கை

கொழும்பு, ஒக. 01

ரயில்வே திணைக்களத்தில் நீடித்து வரும் சமிக்ஞை மற்றும் செயல்பாட்டு பிரச்னைகளுக்கு அதிகாரிகள் உடனடியாக நிரந்தரத் தீர்வு வழங்கத் தவறினால், எதிர்காலத்தில் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட வேண்டிய நிலை ஏற்படும் என ரயில் நிலைய அதிபர்கள் சங்கம் கடும் எச்சரிக்கை விடுத்துள்ளது.

சங்கத்தின் தலைவர் சுமேத சோமரத்ன வெளியிட்டுள்ள அறிக்கையில், கடந்த வாரம் முதல் தலைமன்னார் ரயில் பாதையில் சேவைகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டிருந்தாலும், அப்பாதையின் சமிக்ஞை அமைப்புகள் இதுவரை முழுமையாகச் செயற்படுத்தப்படவில்லை என தெரிவித்துள்ளார். இதனால், பாதுகாப்பற்ற சூழ்நிலையில் ரயில் சேவைகள் இயக்கப்படுவதாகவும் அவர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

மதவாச்சி முதல் தலைமன்னார் துறைமுகம் வரையிலான ஒற்றைப் பாதையில் தற்போது "பைலட் முறை" பயன்படுத்தப்பட்டு வருவதாகவும், அவசர காலங்களில் மட்டுமே பயன்படுத்தப்படவேண்டிய இந்த முறை தற்போது நிரந்தர நடைமுறையாக மாறியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதேபோன்று, மஹவ - அநுராதபுரம் ரயில் பிரிவிலும் சமிக்ஞை கோளாறுகள் தொடர்ந்து நீடிப்பதால், தற்காலிக முறைகளிலேயே ரயில் இயக்கம் இடம்பெற்று வருவதாகவும் தெரிவித்துள்ளார்.

கோடிக்கணக்கான ரூபாய் செலவில் புனரமைக்கப்பட்ட ரயில் பாதைகளும், சமிக்ஞை அமைப்புகளும் தற்போது செயலிழந்த நிலையில் இருப்பதாக சுட்டிக்காட்டியுள்ள அவர், இந்தப் பிரச்சினைகளுக்கு விரைவில் நிரந்தரத் தீர்வு வழங்கப்படாவிட்டால் தொழிற்சங்க நடவடிக்கை முன்னெடுக்கப்படும் என எச்சரித்துள்ளார்.

மேலும், இது தொடர்பாக ஏற்கனவே எழுத்து மூலம் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் ரயில் நிலைய அதிபர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. (அ)

## ஜூலையில் பணவீக்கம் 7.3 வீதமாக உயர்ந்தது!

கொழும்பு, ஒக. 02

கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் அடிப்படையில் கணக்கிடப் பட்ட இலங்கையின் பிரதான பணவீக்க விகிதமானது, 2026 ஜூலை மாதத்தில் 7.3 வீதமாக அதிகரித்துள்ளது.

இது கடந்த ஜூன் மாதத்தில் 6.8 வீதமாக காணப்பட்டது.

தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிவரவியல் திணைக்களத்தின் தரவுகளின் படி, உணவுப் பொருட்களுக்கான பணவீக்கம் 2026 ஜூன் மாதத்தில் 3.6 வீதமாக இருந்தது.

அது, 2026 ஜூலை மாதத்தில் 6.3 வீதமாக உயர்ந்துள்ளது.

அதேவேளையில், உணவு அல்லாத பொருட்களுக்கான பணவீக்கம் 2026 ஜூன் மாதத்தில் 8.4 வீதமாகப் பதிவாகியிருந்தது.

அதில் 2026 ஜூலை மாதத்தில் 7.8 வீதமாகக் குறைந்துள்ளது. (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 02.08.2026 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | noolaham.media